பதிவு இலக்கம் : 105267

வார இதழ்

# தீபம்

27.10.2019 தீபம் - 203

விலை ரூபா 30.00



சசிகா லேணர்ஸ்

THE SASIKA LEARNERS

அரச அனுமதி பெற்ற சாரதிப்பயிற்சிப் பாடசாலை

தீபாவளியை முன்னிட்டு


SPECIAL OFFER

HOTLINE : 077 722 6247

E-mail : sasikadrivingschool@gmail.com Web : sasikalearners.com


## 13 படும் பாடும் படுத்தும் பாடும்






எமது வாசக நேயர்களுக்கு இனிய தீபாவளி வாழ்த்துக்கள்



## காணாமல் போனோரும்.... காணாமல் ஆக்கப்பட்டோரும் மறுப்புகளும்... மறைப்புகளும்



## வீட்டுக்குள் நுழைந்த யானை!?



## விடுதலைப் புலிகள் மீதான தடை நீங்குமா?


இப்போது கிளிநொச்சி கரடிப்போக்கு சந்தியில் உதயமாகியுள்ளது..

ஆனந்தபவான் உயர்தர சைவ உணவகம்

Anandabhavan Vegetarian Hotel

உங்கள், குடும்பம் மற்றும் நண்பர்களுடன் ஆனந்தமாய் உயர்தர சைவ உணவு வகைகளை சுவைத்து மகிழ்ந்திட இன்றே நாடுங்கள்.

கரடிப்போக்குசந்தி, கிளிநொச்சி. தொ.இல : 076 533 1798

27.10.2019 முதல் 10.11.2019 வரை

SPECIAL OFFER 15%

சசிகா லேணர்ஸ்

THE SASIKA LEARNERS

அரச அனுமதி பெற்ற சாரதிப்பயிற்சிப் பாடசாலை

தலைமைக் காரியாலயம் : இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.

தொ.இல : 021 221 7578, 021 221 7678 077 614 0361, 077 722 6247

HOTLINE : 077 722 6247

ஓடக்கரை வீதி, சங்கானை. 021 225 1664, 070 301 3016

கே.கே.எஸ் வீதி, மல்லாகம். 021 224 3393, 070 301 3014

வங்களாவடிச் சந்தி, வேலணை. 021 221 5472, 070 301 3012


கீரிமலை வீதி, பண்டத்தரிப்பு. 070 255 4135

இல.281c, மணிக்கூட்டுகோபுர வீதி, யாழ்ப்பாணம். 021 222 8004, 070 301 5004

பழைய கண்டி வீதி (பிரதான வீதி) காரைநகர். 021 225 2454, 070 510 2484


E-mail : sasikadrivingschool@gmail.com Web : sasikalearners.com


இது தமிழ்பேசும் மக்களுக்கான தனித்துவமான பத்திரிகை













வார இதழ் **தீபம்** பிரதி ஞாயிறுதோறும் வெளிவருகிறது!

வார இதழ்
தீபம்
"யாமார்க்கும் குடியல்லோம்"
27.10.2019 இதழ் 203

gmail:- newsdeepam19@gmail.com
விநியோகம் / விளம்பரம் TP:- 021 4927542, 0771989445

# மக்களுக்கான கேள்வி

எங்கள் நாட்டின் எதிர்காலம் என்னவாகுமோ? என்றஅச்சம் நாளுக்குநாள் அதிகரித்த வண்ணம் இருக்கிறது மக்கள் மத்தியில் அச்சமும் பேடிமையும் அடிமை சிறுமதியும் உச்சத்தில் கொண்ட ஊமைச் சனங்களின் இயலாமை பரந்து வளர்ந்து வருகிறது

இத்தகைய இயல்பு கற்றறிந்த பெரியோர்கள், உயர் அதிகாரங்கள், பல்துறை விற்பன்னர்கள், மனிதநேயச் சிந்தனையாளர்கள் எனஎவரையுமே விட்டு வைக்காது ஆக்கிரமித்துள்ளமைக்கான காரணிகள் எவை என்பது ஒன்றும் புதிதான விடயமல்ல

நாட்டின் அதியுச்ச உயர்பீடத்தவர்களில் இருந்து அடிமட்ட சாமானிய மக்கள்வரை தம் சுயம் இழந்தவர்களாக இயங்கிவருவது ஏன் என்பது தான் இன்று எம் முன்னுள்ள பெரியவிடைதேடி நிற்கும் வினா.

எல்லாமேம்பாட்டிற்கும் அவசியமான கல்வி, வாழ்வியலின் ஆதாரமான மருத்துவம், சகஉணர்வைச் செழுமைப் படுத்தவல்ல ஆன்மீகம் இவை [illegible] திரபமீட்டும் வெறிகொண்ட வியாபாரம் உத்தமம் கொண்டுள்ளது

மனிதநேயத்தை, தேசியசிந்தனையை, சமூகஉயர்வை, வாழ்வியல் மேம்பாட்டை, உதாசீனம் செய்து அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றி எதேச்சதிகாரம் செய்ய மூர்க்கம் கொண்டு செயற்படும் அரசியல் வாதிகள் பெருக்கமும் நோக்கமும் ஆட்சியை அசிங்கப் படுத்தியதன் விளைவே மேற்குறித்த அனைத்து அச்சங்களுக்கும் பிரதான காரணம்

இது எவரும் அறியாத, எவருக்கும் புரியாத விடயமுமல்ல அப்படி இருந்தும் இந்த அபத்தமிகுஅரசியல் நகர்வுகளின் பின் விளைவுகளைத் தவிர்க்க நாம் ஏன் செயலற்றவர்களாக இருக்கிறோம் என்பதுதான் வியப்பான விடயம்

அநீதிகளைக் கண்டு வெஞ்சினம் கொண்டு அநியாயம் செய்யும் அராஜகப் பேர்வழிகளை நிராகரித்து தூக்கியெறியும் சிறுமை கண்டு பொங்கும் குணாம்சம் ஏன் எங்களிடம் இல்லாமல் போயிற்று பொய்களையும் பித்தாலாட்டக்காரர்களையும் அரசியல் தலைமைகள் என உலாவரும் நடிகர்களையும் நாம் நன்றாக இனம் கண்டும் கூட அவர்களை எதிர்க்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்தி நிராகரிக்கும் மனோபலத்தையும் நாம் ஏன் பயன்படுத்தத் தவறுகிறோம்

நீதிமன்றத் தீர்ப்பைக் கொச்சைப்படுத்தி நிராகரிப்போரைப் பாதுகாக்கும் ஒருநாட்டில் நியாயத்திற்காகப் போராடும் மக்களுக்குப் பாதுகாப்பு இருக்கும் என எவரும் நம்புவதைவிட முட்டாள் தனம் வேறெதுவுமில்லை

குற்றச் செயல்களுக்குக் காரணமானவர்களைத் தண்டிக்க முடியாத அல்லது தண்டிக்கத் தயங்குகின்ற நீதிப் பொறிமுறை ஒரு நாட்டின் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கும் என எப்படி நம்புவது? கடந்த ஈஸ்டர் தினத்தில் நடந்தேறிய மானுடத் துயருக்குக் காரணமான நபர்களை அல்லது காரணிகளைக் கண்டறிய அமைக்கப்பட்ட தெரிவுக்குழு தனது விசாரணைஅறிக்கையில் ஜனாதிபதி, பிரதமர், பாதுகாப்பு அமைச்சர் மற்றும் புலானாய்வுத் துறையினரின் இயாலாமையே அந்தப் பயங்கரவாதத் தாக்குதலுக்குக் காரணம் எனவெளிப் படையாகவே தெரிவித்துள்ள நிலையில் இவர்களின் அனைத்துத் தரப்பினருமே தங்களைத் தங்களின் தூய்மைத்தன்மையை நிரூபிக்காதவரையில் ஆட்சியில் தொடர்வதும் அதிகாரத்தைமேற் கொள்வதும் மீண்டும் தலைமைப் பதவிக்குப் போட்டியிடுவதும் எந்தவகையில் நியாயம் ஆகும்?


இது அவர்களுக்கான கேள்வியல்ல. மக்களுக்கான கேள்வி.

# பாரதீ...

ஒளி படைத்த ண்ணினாய் வா வா வா
உறுதி கொண்ட நெஞ்சினாய் வா வா வா
களிபடைத்த மொழியினாய் வா வா வா
கடுமை கொண்ட தோளினாய் வா வா வா

தெளிவுபெற்ற மதியினாய் வா வா வா
சிறுமைகண்டு பொங்குவாய் வா வா வா
எளிமைகள் கண் டிரங்குவாய் வா வா வா
ஏறுபோல் நடையினாய் வா வா வா







நன்றி : சிரித்திரன் சித்திரக் கொத்து



# கனடியப் பாராளுமன்றத் தேர்தலும் லிபரல் வாதிகளின் வெற்றியும்

கலாநிதி கே.ரீ.கணேசலிங்கம்



கனடியப் பராளுமன்றத் தேர்தலும் லிபரல் வாதிகளின் வெற்றியும் கனடியப் பாராளுமன்றத் தேர்தல் மீண்டும் அதே ஆட்சியை அங்கீகரிக்கும் விதத்தில் அமைந்துள்ளது அறுதிப் பெரும்பான்மை பெறாது போனாலும் மீண்டும் ஜஸ்டின் ட்ரூடோ பிரதமராகத் தெரிவாகியுள்ளார் அவரது லிபரல் கட்சி 156 ஆசனங்களைப் பெற்று சிறு கட்சிகளின் கூட்டின் ஒத்துழைப்புடன் ஆட்சியமைக்கும் பலத்தினை ஜஸ்டின் பெற்றுள்ளார் எதிர்கட்சியான கன்சவேட்டிக் கட்சி 121 இடங்களில் மட்டுமே பெற்றுள்ளது. இப் பொதுத் தேர்தல் கனடிய மக்களின் அணுகுமுறையில் ஏற்பத்தியுள்ள மாற்றங்களை அளவிடுவதாக இக்கட்டுரை அமையவுள்ளது.

முதலாவது பிரித்தானிய பாரம்பரியத்தை அதிகம் கொண்டுள்ள கனடா கட்சியமைப்பிலும் இருகட்சிப் பாரம்பரியத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தி வருகிறது. அதிலும் பிரித்தானிய பாராளுமன்றம் போலவே இரு சபைகளைக் கொண்டிருப்பதுடன் கன்சவேட்டிவ் கட்சி பிரித்தானிய மரபுகளால் உருவானது. மற்றும் லிபரல் கட்சியும் ஏறக்குறைய பொருளாதார அர்த்தத்தில் வலிமையான கட்சிக் கட்டமைப்பினைக் கொண்டு இயங்குகிறது. ஒப்பீட்டடிப்படையில் தனித்து ஆட்சி அமைக்க முடியாமையை கனடிய மக்கள் ஏற்படுத்தியுள்ளனர். இது லிபரல் கட்சியின் மீதான நெருக்கடியாகவே தென்படுகிறது. அக்கட்சியின் கொள்கையை நிராகரிக்காத நிலையில் எச்சரிக்கை வழங்குவது போல் அமைந்துள்ளது. கடந்த பொது தேர்தலில் 184 இடங்களை பெற்று ஆட்சி அமைத்த லிபரல் கட்சியின் நிலையை கனடிய மக்கள் நெருக்கடிக்குள்ளாக்கியுள்ளமை தென்படுகிறது.

இரண்டாவது கனடிய மக்கள் ஜஸ்டின் மீதான அதிருப்தியை அவரது கொள்கைகள் தொடர்பில் முதன்மைப்படுத்தியிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. குறிப்பாகக் கால நிலை தொடர்பிலும் ஊழல் தொடர்பிலும் மற்றும் வறுமைக்கு எதிரான அவரது கொள்கையைப் பொறுத்தும் அதிருப்தி அடைந்திருக்க வாய்ப்பு அதிகமாகவுள்ளது. மேலும் கியூபெக் மாகாணம் தொடர்பிலும் அவர் எடுத்த முடிபுகள் கனடிய மக்களது மனங்களை பாதித்திருக்க வாய்ப்புள்ளது. அது பெருமளவுக்கு இனவாத கருத்தியலாகவே அமைந்திருந்தது. இவற்றை விட சர்ச்சைமிக்க இந்தியப் பயணத்தின் பாரிய விளைவை ஏற்படுத்தியிருக்க வாய்ப்பு அதிகம். இவற்றைவிட கனடாவின் கார்பனீர் ஒட்சைட்டின் வெளியேற்றத்தை குறைப்பதற்காகக் சர்வதேச அளவில் ஜஸ்டின் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு கனடா நாட்டிலுள்ள அனைத்து மாகாணங்களும் தாமாகவே திட்டங்களை முன்வைக்க வேண்டுமென்று பிரதமர் கேட்டிருந்தார். அதற்கு இணங்க திட்ட அறிக்கை தாக்கல் செய்யாத மாகாணங்கள் கூடுதலாக வரி செலுத்த வேண்டுமென்ற நிபந்தனையையும் முன்வைத்திருந்தார். இத்தகைய நிலைப்பாட்டில் நான்கு மாகாணங்கள் பாதிக்கப்பட்டன. அதில் முதன்மையான மாகாணமாக கியூபெக் அமைந்திருந்தது. இதனால் ஜஸ்டின் அரசு மீது மக்களிடையே கடும் எதிர்ப்பு ஏற்பட்டது. ஆனாலும் கன்சவேட்டிவ் கட்சியால் அதனை நிரப்ப முடியவில்லை என்பது கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

மூன்றாவது லிபரல் கொள்கை மீதான பற்றும் அரசியலில் பொருளாதார எண்ணங்களுக்குள்ளும் மேற்குலக மக்கள் செயல்பட முனைவதனையும் அவதானிக்க முடிகிறது. குறிப்பாக தாராளப் பொருளாதாரப் பொறிமுறைக்குள் கனடா மட்டுமல்ல உலகமே பயணிக்க விரும்புவதனை காணமுடிகிறது. இன்றய உலகப் பொறிமுறையானது தாராளத்தை அதிகம் கொண்டுள்ள நாடுகளையும் அதகைய நாட்டின் ஆட்சியையும் முதன்மையாக மக்கள் கருதும் நிலை வளர்ந்துள்ளது. முழுமையான முதலாளித்துவத்தையோ முழுமையான சோசலிஸத்தையோ ஏற்றுக் கொள்ளாத நிலை வளர்ந்துள்ளது. ஆனால் முழுமையான தாராளப் பொருளாதாரப் பொறிமுறைக்குள் செயல்படுலவதென்பது அரசியலாகவும் பொருளாதாரமாகவும் இலகுவதானது என்பதுடன் சமூக மட்டத்தில் அதிக சலுகைகளையும் இலகுவான வாழ்க்கை அமைப்பினையும் அடைய முடியும் எனக் கருதும் நிலை வளர்ச்சி அடைந்துள்ளது.

நான்காவது முதல் தடவையாகக் கூட்டணி அரசியல் அரங்கேறியுள்ளது. அதில் பங்கொடுத்துள்ள லிபரல் கட்சியுடன் புதிய ஜனநாயகக் கட்சி (New Democratic Party) பிரதான பங்காளியாக மாறியுள்ளது. அது இந்திய சீக்கிய இனத்தை பிரதிபலிக்கும் கட்சியாகும் கடந்த ஆண்டு தமிழர் லிபரல் கட்சிக்கு அளித்த ஆதரவே அதன் அறுதிப் பொரும்பான்மைக்கு காரணம் எனக் கூறப்படுகிற நிலையில் தற்போதைய நெருக்கடிக்கு தமிழர் வாக்களிப்பில் கவனம் கொள்ளாமை முக்கிய காரணம் எனக் கூறப்படுகிறது. 2016 ஆம் ஆண்டு கனடாவின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, ஏறக்குறைய 1,57,000 தமிழர்கள் வாழ்கிறார்கள். அத்துடன் பல ஆயிரக்கணக்கான தமிழகத்தை சேர்ந்தவர்கள் கனடாவில் நிரந்தர வசிப்புரிமை பெற்று வாழ்ந்து வருகின்றனர். எனினும் அவர்கள் வாக்களிக்கும் உரிமை இல்லாதவர்களாகவே உள்ளனர். ஈழத்தமிழர்களே வாக்களிக்கும் உரிமையை கொண்டிருக்கின்றனர். இதனால் கனடிய அரசியலில் ஈழத்து தமிழர்கள் பாரிய பங்கு வகிக்கின்றார்கள். எனினும் "ஈழத்தமிழர்கள் வாக்களிப்பில் அக்கறை செலுத்தாமையும் அரசியலில் தீவிரமான ஆதரவோ அல்லது எதிர்ப்போ இல்லாத நிலைப்பாடும் சுய வேலைப்பளு, அரசியல் மீதான நம்பிக்கையின்மை போன்றவற்றின் காரணமாகவும் தமிழர்கள் தேர்தலில் வாக்களிப்பை தவிர்க்கிறார்கள் எனக் கனடா வாழ் ஈழத்தமிழரான நீதன் சண் குறிப்பிடுகின்றார்.

எனவே கனடியப் பராளுமன்றத் தேர்தல் அரசியல் கட்சிகளுக்கு மட்டுமல்ல அங்கு வாழும் ஈழத்தமிழருக்கு புதிய அனுபவத்தை ஏற்படுத்தியிருக்கும். அதன் பிரதிபலிப்பு இலங்கையிலும் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலிலும் தென்படும். உலகப் பரப்பில் பொருளாதார வாய்ப்புக்களுக்கான அரசுகளை ஆட்சியில் அமர்த்துவதே நோக்கமாக கொண்டு மக்கள் வாகிகளிகிறார்கள். ஆனால் இலங்கை போன்ற நாடுகளில் இன்னுமே இன, மத, மொழி அடையாளங்களுக்கான தெரிவுகள் நிகழுகின்றன.

# 13 படும் பாடும் படுத்தும் பாடும்


சிலம்பு

தமிழினத்தின் ஒற்றுமை தமிழினத்தின் அடிப்படை இலட்சியங்களை நோக்காகக் கொண்டு சனாதிபதித் தேர்தலில் போட்டியிடுபவர்களுக்கு விடுக்கப்பட வேண்டிய கோரிக்கைகள் பற்றிப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மேற்கொண்ட முயற்சிகளின் இறுதியில் பதின்மூன்று கோரிக்கைகளை தயாரித்து அவற்றைப் போட்டியிடுபவர்களிடம் வைப்பது என்று முடிவாகியிருந்தது. இம்முயற்சியை மேற்கொண்டபொழுது தமிழ்த் தேசியத்தில் அக்கறைகொண்ட ஆறு கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளுக்கும் கட்சியினருக்கும் இடையில் பேச்சு ஓரளவு சுமுகமாகவே நடந்து வந்தது. ஆனால் ஒரு கட்டத்தில் சுமந்திரன் இதில் கலந்து கொண்டதும் அதன் பின்னால் நடந்தவைகளும் மக்களிடம் ஒரு குழப்பத்தை ஏற்படுத்திவிட்டது என்பது தெரிகிறது. இறுதியாகத் தயாரிக்கப்பட்ட கோரிக்கைகள் பதின்மூன்றில் ஐந்து கட்சிகளே கையெழுத்திட்டன. தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி கையெழுத்திடவில்லை.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தாம் கையெழுத்திடாததற்கான காரணத்தை விளக்கியிருந்தார்கள். ஆனால் அவர்கள் தேவையற்ற விதத்தில் குழப்பியதாகவும் மற்றவர்கள் கூறியிருந்தனர். எனினும் ஆனால் மாணவர் ஒன்றியம் தான் அங்கு என்ன நடந்தது என்பது பற்றிய தகவல்களை மக்களுக்குச் சொல்லவேண்டிய கடப்பாட்டில் உள்ளது.மாணவர் ஒன்றியச் செயலாளரின் கையொப்பமிட்ட கருத்துகள் என்று ஏடுகள் பெரிதாகப் போடாவிட்டாலும் முகநூலில் அவரது கையெழுத்துடன் வந்த தகவலின்படி பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் ஆறு கட்சியினரையும் கையெழுத்திட முடியவில்லை என்றும்,தமது கோரிக்கைகளை சனாதிபதி வேட்பாளர்கள் ஏற்காதவிடத்துத் தேர்தலைப் புறக்கணிப்பதே வழி என்றும் தாம் கூறியதாகவும் இருந்தது.

கோரிக்கைகள் வைக்கப்பட்டு நாள்கள் போய்க்கொண்டே இருக்கின்றன. கோதபாயாவும் சஜித்தும் எந்த நிபந்தனைகளையும் தாம் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்று திரும்பத் திரும்பக் கூறி வருகின்றனர். மக்கள் விடுதலை முன்னணி தாயகம் தன்னாட்சி போன்ற பலவற்றை ஏற்க முடியாது என்றும் சிலவற்றை ஏற்கலாம் என்றும் ஒட்டுமொத்தமாகக் கோரிக்கைகளை நிராகரிப்பதாகவும் கூறியுள்ளன.

இவைதான் முக்கிய கட்சிகளின் நிலைப்பாடாக இருக்கிறது. ஆனால் இப்பொழுது சம்பந்தனும் சுமந்திரனும் பிந்தியே கருத்துகளை தெரிவிக்கின்றனர்.சுமந்திரன் சொல்லுகிறார் பதின்மூன்று கோரிக்கைகளை வேட்பாளர்களிடம் முன் வைப்பதில்லை என்று .சம்பந்தன் சொல்லுகிறார் ஐந்துகட்சிகளின் பதின்மூன்று கோரிக்கைகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைகள்



அல்லவாம்.சுமந்திரன். மாணவர் ஒன்றியக் கூட்டத்தில் கலந்து கொண்டு குழப்பத்தை ஏற்படுத்தி விட்டு இப்பொழுது அங்கு தான் சார்ந்த கட்சியும் ஏற்றுக்கொண்ட கோரிக்கைகளை வேட்பாளர்களிடம் முன்வைக்கப் போவதில்லை என்று கூறித் தனது குழப்பத்தை மேலும் அதிகரித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது எது?. தமிழரசு. டெலோ. புளொட் ஆகியனவே தற்பொழுது அதில் உள்ளன. இது இன்னமும் பதிவு செய்யப்படவில்லை.ஆகவே இம்மூன்று கட்சிகளும் கலந்து பேசி ஒரு உடன்பாட்டிற்கு வந்து தயாரித்த கோரிக்கைகள் கூட்டமைப்பின் கோரிக்கைகள் அல்லவென்று சம்பந்தன் கூறுவது ஏன்.? அப்படி என்றால் முதலில் மாணவர்கள் அழைப்பு விடுத்தபோதே இதில் கூட்டமைப்புக் கலந்து கொள்ளாது என்று கூறியிருக்க வேண்டும். உறுப்புக் கட்சிகளைக் கலந்து கொள்ள வேண்டாம் என்று கூறியிருக்க வேண்டும்.ஆனால் அப்படிச் சொல்லாமல் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரனும் கலந்து கொண்டு தயாரிக்கப்பட்ட கோரிக்கைகள் கூட்டமைப்பின் கோரிக்கைகள் அல்ல வென்று சம்பந்தன் கூறுவதன் பின்னால் யார் இருக்கிறார்கள். மாணவர்களின் கோரிக்கைகளை தாம் வேட்பாளர்களிடம் வைக்கப்போவதில்லை என்று மாணவர்களிடம் சுமந்திரன் அப்பொழுதே கூறியிருக்கவேண்டும் அல்லவா. அப்பொழுது கூறாததன் பின்னணிதான் என்ன? இவர்களை ஆட்டுவிப்பவர்கள் யார்.?

மாணவர்களின் அழைப்பில் நடந்த பேச்சுக்களில் கலந்துகொண்ட சுமந்திரன் அதன் பின்னர் ரணிலுடன் மிக மிக நெருக்கமாகப் பல நிகழ்ச்சிகளிலும் சென்று வந்தார். அதாவது பொது நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வது அருகில் இருப்பது ஒன்றும் பெரிதல்ல. ஆனால் ஒன்றாகப் பயணிக்கிறார். உலங்கு வானூர்தியிலும் ஒன்றாகவே பறந்து சென்றுள்ளார். அப்பொழுது எல்லாம் இந்தப் பதின்மூன்று கோரிக்கைகள் பற்றிப் பேசியிருக்க மாட்டார்களா? இதற்கும் மேலாக ரணில் நடத்தும் ஊடகவியலாளர் சந்திப்பிலும் இவரும் கலந்துகொள்கிறார். இது ஒரு சாதாரண நிகழ்வல்ல. ஒருகட்சியின் பத்திரிகையாளர் மாநாட்டில் மற்றக் கட்சியினர் பங்குபற்றுவது உலகில் எங்குமே நடைபெறாத நடைபெற முடியாத நிகழ்வு ஆகும் ஆனால் ரணில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர். நாட்டின் பிரதமர் அவர் கூட்டிய ஊடகவியலாளர் சந்திப்பில் சுமந்திரன் கலந்துகொண்டது அவர் ரணிலின் கட்சியைச் சார்ந்தவர் அவரின் எண்ணங்களுக்குச் செயல்வடிவம் கொடுக்கிறார் என்பதையே உறுதி செய்வது போல் தானே உள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இரண்டாயிரத்து ஒன்பதுக்குப் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சிக்கே நிபந்தனை அற்ற ஆதரவை எப்பொழுதும் வழங்கி வருகிறது என்பது வெளிப்படையான ஒன்றாகும்.சரத் பொன்சேகாவை சனாதிபதித் தேர்தலில் ஆதரித்தது மைத்திரியை ஆதரித்தது என்பன உட்பட ஏராளமான சந்தர்ப்பங்களிலும் த.தே.கூ. நிபந்தனைகள் அற்ற ஆதரவையே வழங்கி வருகிறது. மைத்திரி ரணிலைப் பிரதமர் பதவியில் இருந்து நீக்கியபொழுது ரணிலுக்காக வழக்கு மன்றுக்கும் சென்றவர்கள் இவர்கள். தமிழ் மக்களின் குறைந்தபட்சக் கோரிக்கை என்று கேட்டு ஆதரித்திருக்க வேண்டியபொழுது எல்லாம் நிபந்தனை அற்ற ஆதரவை ரணிலுக்கு வழங்கியமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐ.தே.க.வின் கிளை என்பதையே பல்வேறு கால நிகழ்வுகளும் காட்டி நிற்கின்றன.

இப்பொழுது சனாதிபதித் தேர்தலிலும் தமிழ் மக்களின் கோரிக்கைகள் இவை தான் என்று கூற விரும்பாமலேயே காலத்தைக் கழிக்கின்றனர்.சஜித் துக்கு தமிழ் மக்கள் வாக்களிக்க விரும்பமாட்டார்கள். ரணிலையே விரும்புவார்கள் என்று தொடக்கத்தில் ஒரு கருத்தைச் சுமந்திரன் முன் வைத்திருந்தார். ஆனால் சஜித் தான் வேட்பாளர் என்று முடிவாகியதும் அவரையே ஆதரிக்க முடிவு எடுத்த படியால் காலத்தை இழுத்தடித்து வந்தார்கள். ஆனால் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் கட்சிகளுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்த விழைந்தபொழுது அதனைத் தட்டிக்கழிக்க முடியாமல் அதில் கலந்து கொண்டார்கள். பதின்மூன்று கோரிக்கைகள் வரை சென்றபொழுது அதை நிராகரிக்க முடியாமல் கட்சித் தலைவர்கள் கையெழுத்திட்டனர். கையெழுத்திட்டவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்புக் கட்சிகளான தமிழரசு. டெலோ. புளொட் என்பனவும் முன்னர் த.தே.கூ வுடன் இருந்த விக்கினேஸ்வரனும் சுரேஷ் பிறேமசந்திரனும் ஆகும். ஆனால் இது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைகள் அல்லவென்று சம்பந்தனால் கூற முடிகிறது. அதேபோல் இக்கோரிக்கைகள் தமிழக் கட்சிகளின் விருப்பங்கள் எண்ணங்கள் மட்டுமே அல்லாமல் இவை சனாதிபதி வேட்பாளர்களுடன் பேசும்பொழுது நிபந்தனைகளாக வைக்கப்பட மாட்டாது என்று சுமந்திரனும் கூறுவதன் உண்மையென்ன? தமிழ்த் தேசியக்கூட்டமைப்பில் உள்ள கட்சிகளை சம்பந்தனும் சுமந்திரனும் மதிப்பதில்லை என்று பல தடவைகள் உறுப்புக் கட்சிகள் கூறிவந்துள்ளனர் என்பது தெரிந்ததே.

(17ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப் புலிகள் மீதான தடை நீங்குமா?

பிறைவாணன்

விடுதலைப் புலிகள் மீது சர்வதேச நாடுகளினால் விதிக்கப்பட்டிருந்த தடை உத்தரவை நீக்குவதற்கு பல நாடுகள் முன்வந்து கொண்டிருக்கின்றன. இலங்கையில் போர் முடிவடைந்து விடுதலைப் புலிகளின் ஆயுதம் மௌனிக்கப்பட்ட நிலையில் விடுதலைப் புலிகள் மீது தடையை விதித்த நாடுகள் இந்த முடிவினை எடுப்பதற்கு முன்வந்துள்ளன என்று உலக செய்திகள் மூலம் அறியவந்துள்ளது.

விடுதலைப் புலிகள் மீதான தடை சட்டம் தொடர்பான விசாரணைக்காக ஆணையர் சங்கீதா பின்ரா செகல் தலைமையில் குழுவினர் டெல்லியிலிருந்து விமானம் மூலம் கடந்த 18 ஆம் திகதி காலை மதுரை வந்தடைந்தனர். மதுரை பயணியர் விடுதியில் 21-ம் தேதி வரை 4 நாட்கள் விசாரணை நடைபெற்றுள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலைக்குப் பின் இந்திய அரசு விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு தடை விதித்தது. பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ், இந்தத் தடை விதிக்கப்பட்டது. இந்நிலையில், விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடையை நீக்குவது குறித்த விசாரணையில் ம.தி.முக பொதுச் செயலாளர் வைகோ, மற்றும் ஆதரவாளர்கள் கலந்துகொண்டு விடுதலைப் புலிகள் மீதான தடையை ஏன் நீக்க வேண்டும் என்பது தொடர்பாக தங்களின் கருத்துகளை விசாரணை குழுவினரிடம் பதிவு செய்ய மத்திய அரசு அறிவுறுத்தியது.

அதன்படி, விடுலைப் புலிகள் மீதான தடைச்சட்டம் தொடர்பான விசரணைக்காக, விசாரணை ஆணையர் சங்கீதா பின்ரா செகல் தலைமையில் குழுவினர் மதுரை வந்துள்ளனர். அவர்களுக்குப் பலத்த பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கிறது. அவர்கள் மதுரையில் முகாமிட்டிருக்கும் 4 நாட்களில் முக்கிய பிரமுகர்கள் விசாரணைக்காக முன்னிலையானார்கள் என்று இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

தொடர்ந்து இந்த விசாரணைக் குழுவானது மதுரையில் உள்ள இலங்கை அகதிகள் முகாமிலும் விசாரணை மேற்கொள்ளும் எனத் தெரிகிறது.

நீதிமன்றம் மூலமாக விடுதலை புலிகள் மீதான தடையை நீக்க இயலும் என்ற நம்பிக்கை இருப்பதாக ம.தி. முக பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார். விடுதலை புலிகள் இயக்கத்திற்குத் தடை நீட்டிக்கப்பட்டது தொடர்பாக சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்பு தீர்ப்பாயத்தின் கருத்துக் கேட்பு கூட்டம் நடைபெற்று வருகிறது. முதல் கூட்டம் கடந்த ஜுலை 26 ஆம் திகதி டெல்லியில் நடைபெற்ற நிலையில் , இரண்டாவது கருத்துக் கேட்பு கூட்டம் சென்னை சேப்பாக்கத்தில் உள்ள புதிய அரசு விருந்தினர் மாளிகையில் நடைபெற்று வருகிறது.

நீதிபதி சங்கீதா அமர்வில் ம.தி.மு.க பொதுச்செயலாளரும் மாநில எம். பி.யுமான வைகோ முன்னிலையாகி விடுதலை புலிகள் இயக்கத்திற்கு ஆதர வாக வாதங்களை முன்வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம்



## கோரிக்கைகளும் விசாரணைகளும்...

வைகோ பேசியதாவது: சில பத்திரிகை களில் என்னை அனுமதிக்கவில்லை என்று செய்திகள் வெளியாகியுள்ளன. பழைய முறைப்படி என்னை அனுமதித்து இருக்கிறார்கள் என்றும் என்னை எதிர்வாதம் செய்வதிற்கு மட்டுமே அனுமதிக்கவில்லை. நீதிபதி மூலமாக குறுக்கு விசாரணை செய்யும் அந்த மூன்று முறை மட்டுமே எனக்கு அனுமதி கொடுக்கவில்லையெனிலும் என்னை அனைத்து தரப்பு பற்றியும் வாதாட அனுமதித்தார்கள் என்றும் வைகோ தெரிவித்துள்ளார்

அமெரிக்காவில் விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குமாறு விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் போராளிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். அமெரிக்க வெளியுறவு விவகாரங்களுக்கான செனட் சபை உறுப்பினர்கள், விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் போராளிகளை முதல் முறையாக சந்தித்து கலந்துரையாடல்களை நடத்திய சந்தர்ப்பத்திலேயே இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு அண்மையில் பயணம் மேற்கொண்டுள்ள அமெரிக்க செனட் சபை உறுப்பினர்கள், விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்களை யாழ்ப்பாணத்தில் சந்தித்து கலந்துரையாடல்களை நடத்தியிருந்தனர். மாறிவரும் தேசிய மற்றும் சர்வதேச அரசியல் நிலைமாற்றங்கள் தொடர்பில் இந்த சந்திப்பின் போது அதிக கவனம் செலுத்தப்பட்டதாக ஜனநாயக போராளிகள் கட்சியின் ஊடகப் பேச்சாளரும், விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினருமான க.துளசி ஜ.பி.சி தமிழிடம் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இலங்கையில் கடந்த ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல் சம்பவம், இலங்கையின் தென் பகுதியில் அரசியல் காய்நகர்த்தல்கள், அரசியலமைப்பின் பொறிமுறை மற்றும் தமிழர்களுக்கான சாத்தியப்பாடான தீர்வுத்திட்டம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் இதன்போது கலந்துரை யாடப்பட்டுள்ளன. தமிழர்களுக்கான தீர்வு முயற்சிகள் தொடர்பாக அரசிய லமைப்பு பொறிமுறைகளில் தமக்கு ஏற்பட்டிருக்கும் நம்பிக்கையீனங்கள் குறித்தும் அமெரிக்க பிரதிநிதிகளிடம் எடுத்துரைத்ததாக க.துளசி குறிப்பிடுகின்றார்.

இந்தியாவின் தலையீட்டில் கொண்டு வரப்பட்ட அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்ட ஏற்பாட்டு நடைமுறைகள் மற்றும் புரையோடிப் போயிருக்கின்ற தமிழர்களின் இனப் பிரச்சனைகளுக்கான தீர்வு ஆகியன குறித்தும் அமெரிக்க பிரதிநிதிகளுக்கு தெளிவூட்டப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். அமெரிக்காவின் நலன்களுக்கு எதிராக விடுதலைப் . புலிகள் ஒருபோதும் குறுக்கிடவில்லை எனச் சுட்டிக்காட்டியுள்ள விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் போராளிகள், இந்த விடயத்தை கருத்தில் கொண்டு விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கை அரசின் நிர்ப்பந்தம் காரணமாக, விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு பல நாடுகள் தடை விதித்தன. குறிப்பாக 2001-ம் ஆண்டு செப்டம்பர் 11ஆம் திகதி அமெரிக்காவின் இரட்டை கோபுரம் தகர்க்கப்பட்ட நிகழ்வுக்கு பிறகு, தீவிரவாதத்திற்கு எதிராக கடுமையான நிலைப்பாடை பெரும்பாலான நாடுகள் எடுத்தன. அந்த வகையில்தான் 28 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட ஐரோப்பிய யூனியன் மொத்தம் 22 அமைப்புகளுக்கும், 13 தனி நபர்களுக்கும் தடை விதித்தது. தடை செய்யப்பட்ட அமைப்புகளில் விடுதலைப் புலிகள் இயக்கமும் அடங்கும். புலிகள் இயக்கத்தை 2006ஆம் ஆண்டும் ஐரோப்பிய யூனியன் தடை செய்திருந்தது.

இதை எதிர்த்து லக்ஸ ம்பர்க்கில் உள்ள ஐரோப்பிய யூனியன் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டது.

இந்த வழக்கினை அடுத்து புலிகள் இயக்கம் மீதான தடையை நீக்கியது. '2009ஆம் ஆண்டு இராணுவரீதியாக புலிகள் தோற்கடிக்கப்பட்ட பிறகு அந்த இயக்கத்தால் ஆபத்து ஏற்படும் என சொல்ல முடியாது. அதற்கான எந்த ஆதாரத்தையும் ஐரோப்பிய யூனியனால் சமர்ப்பிக்க முடியவில்லை. எனவே புலிகள் மீதான தடை விலக்கிக் கொள்ளப்படுகிறது' என நீதிமன்ற தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதை பின்பற்றி இந்தியாவும் புலிகள் மீதான தடையை நீக்கவேண்டும் என பழ.நெடுமாறன் உள்ளிட்ட தமிழக தலைவர்கள் பலர் வேண்டுகோள் வைத்துள்ளமையும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.

துன்னாலைச்செல்வம்

# காணாமல் போனோரும்.... காணாமல் ஆக்கப்பட்டோரும் மறுப்புகளும்... மறைப்புகளும்

ஜனாதிபதியாக எவர் வந்தாலும் தமிழர்களுக்கு எதுவும் கிடைக்கப்போவதில்லை என்பது ஜனாதிபதி வேட்பாளர்களாக களத்தில் இறங்கியிருப்பவர்கள் வெளிப்படையாக தேர்தல் பிரசார மேடைகளில் முழங்கத் தொடங்கிவிட்டனர். தாம் ஆட்சிபீடம் ஏற வேண்டும் என்றால் பெரும்பான்மையாகவுள்ள சிங்கள மக்களின் மனங்களை வெல்ல வேண்டும். அப்படி வெல்வ தென்றால் முன்னுரிமை சிங்கள மக்களுக்குத்தான் தமிழர்களுக்கு அவர்கள் முன்வைக்கும் எதை யுமே வழங்கமாட்டோம் என்ற உறுதிமொழியை சிங்கள மக்களுக்கு வழங்க வேண்டும். ஜனாதிபதி வேட்பாளர்களாக தேர்தல் களத்தில் இறங்கிய சஜித்தும் கோத்தாவும் உறுதிமொழியை வழங்கிவிட்டார்கள்.

இறுதிப் போரில் இராணுவத் தினரிடம் தமது உறவுகளை ஒப்படைத்தபோது காணாமல் ஆக்கப் பட்டதாக காணாமல் ஆக்கப்பட்டவர் களின் உறவினர்கள் தெரிவிக்கின்ற னர். காணாமல் ஆக்கப்பட்டவர் களின் உறவினர்கள் சாட்சியாக இன்று இருக்கும் போது காணாமல் போனது காணாமல்போனதுதான் என்று ஜனாதிபதி வேட்பாளர்களாக கள மிறங்கியிருக்கும் சஜித் பிரேமதாசா, கோட்டபாய ராஜபக்ஷ தெரிவித்திருக் கும் நிலையில் நாளை இவர்கள் ஜனாதிபதியாக வந்தால் தமிழ்மக்களுக்கு விமோசனம் ஏற்படப்போவதில்லை என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

தகவலறியும் உரிமை சட்டத்தின் கீழ் எழுப்பப் பட்டுள்ள கேள்விக்கு கிடைத்த பதிலில் இலங்கையில் இறுதிக் கட்ட யுத்தத்தின் போது சரணடைந்தோரின் எண்ணிக்கை தொடர்பாக முன்னுக்குப் பின் முரணான தகவல்கள் வெளியாகியுள்ளதாக தெரியவந்துள்ளது. இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்ட யுத்தத்தின் போது இராணுவத்திடம் சரணடைந்து காணாமல் போனோரை கண்டறியும் வகையில் பல்வேறு போராட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், யுத்தம் இடம்பெற்ற தருணத்திலும், யுத்தம் நிறைவடைந்த தருணத்திலும் இராணுவத்திடம் சரணடைந்தோர் காணாமல் ஆக்கப்பட்டதாக காணா மல் ஆக்கப்பட்டோரின் உறவினர் கள் தொடர்ச்சியாக குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர்.

இதன்படி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாள ரும் முன்னாள் பாதுகாப்புச் செயலா ருமான கோட்டபய ராஜபக்ஷ விடம், இறுதிக் கட்ட யுத்தத்தின்போது சரணடைந்தோர் தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டது.

கொழும்பு ஷங்கிரில்லா ஹோட்டலில் கடந்த 15ஆம் திகதி நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே ஊடகவியலாளர் கள் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் கேள்வி எழுப்பியிருந்தனர்.

பாதுகாப்பு அமைச்சக செயலாளராக பணியாற்றியபோது 13,784 பேர் சரணடைந்திருந்ததாகவும், அவர்கள் அனைவரும் இரண்டு வருட காலப் பகுதிக்குள் புனர்வாழ்வளிக்கப்பட்டு மீள்குடியமர்த்தப்பட்டதாகவும் கோட்டா பய ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

அவ்வாறாயின், இறுதிக்கட்ட யுத்தத்தின்போது சரணடைந்தோர் காணாமல் போயுள்ளதாக அவர்களது உறவினர்கள் கூறி வருகின்றமை பொய்யான குற்றச்சாட்டா என ஊடக



வியலாளர்கள் இதன்போது கேள்வி எழுப்பியிருந்தனர்.

யுத்தம் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் தாக்குதல்களுக்கு இலக்காகி அடையாளம்தெரியாத அளவிற்குப் பரவு உடல்கள் சிதைந்து போனதாக வும், அவ்வாறு உடல் சிதைந்து உயிரிழந்தோரை அவர்களது உறவினர்கள் அடையாளம் காணாத நிலையிலேயே காணாமல் போனோர் தொடர்பில் கருத்துக்கள் வெளியிடப்பட்டு வருவதாகவும் கோட்டாபய ராஜபக்ஷ பதிலளித்தார்.

இந்த நிலையில், பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ வெளியிட்ட தகவலுக்கும், அரசாங்கம் தற்போது வெளியிட்டுள்ள தகவலுக்கும் இடையில் பாரிய பரஸ்பரம் காணப்படுவது தொடர்பாக இலங்கையில் வெளியாகும் தமிழ் பத்திரிகையான 'தமிழ் மிரர்' செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கும் முதல் இந்திய வம்சாவளி தமிழர் இறுதிக் கட்டயுத்தத்தின் போது சரணடைந்தோரின் எண்ணிக்கை தொடர்பில் முன்னுக்குப் பின் முரணான தகவல்கள் வெளியாகியுள்ள தாக அந்த செய்தியில் சுட்டிக்காட் டப்பட்டுள்ளது. தகவலறியும் உரிமை சட்டத்தின் கீழ் எழுப்பப்பட்டுள்ள கேள்விக்கு அமையவே இந்த விடயம் வெளியாகியுள்ளதாக அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சரணடைந்தோர் தொடர்பில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளரான பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவின் அறிவிப்புக் கும், தகவலறியும் சட்டத்தின் ஊடாக, புனர்வாழ்வு ஆணையாளர் நாயகப் பணியகத்தின் தகவலுக்கு அமையவும் 2,994 பேருக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில், எங்குமே கணக் கில்லை என அதில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

இந்த நிலையில், தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழான விண்ணப் பத்துக்கு, புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ஆர்.எம்.ஜே.ஏ.ரத்நாயகவால் கையெழுத்திட்டு அனுப்பப்பட்டிருக்கும் பதில் கடிதத்தில், 'முன்னாள் போராளிகள் 10,790 பேர் புனர்வாழ்வுக்காக, 19ஆம் தேதி மே மாதம் 2009ஆம் ஆண்டு ஒரே நேரத்தில் சரணடைந்தனர்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளதாக அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, விடுதலைப் புலிகள் எவரும் இராணுவத்திடம் சரணடைய வில்லையென இராணுவம் தொடர்ந்து மறுத்து வருகிறது. இது தொடர்பான தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழான விண்ணப்பத்துக்கு 'இராணு வத்திடம் புலிகள் சரணடையவில்லை எனவும், அவர்கள் அரசாங்கத்திடமே சரணடைந்தார்கள்' என பதில் வழங்கியிருந்தது.

இது தொடர்பான தகவல்களைப் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகப் பணியகத்தில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் இராணுவம் அண்மையில் பதில் வழங்கியிருந்தது. இதன்படி புனர்வாழ்வு ஆணையாளர் நாயகப் பணியகம் வழங்கியிருந்த தகவல்களின்படி இறுதி யுத்தக் காலப்பகுதியில் 2009ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதி ஒரு நேரத்தில் வெறும் 10 ஆயிரத்து 790 பேரே சரணடைந்தனரெனத் தெரிவித்துள்ளது.

இராணுவத்திடம் சரணடைந்த தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பில், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய.ராஜபக்ஸ குறிப்பிடும் தொகைக்கும் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகப் பணியகம் குறிப்பிட்டுள்ள தொகைக்கும் பாரிய வேறுபாடுகள் காணப்படுவதாக அச்செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற யுத்தம் நிறைவடையும் சந்தர்ப்பத்தில் இராணுவத்திடம் சரணடைந்த 13,784 பேர் முறையாக புனர்வாழ்வளிக்கப் பட்டு மீள்குடியமர்த்தப்பட்டுள்ளதாக பாதுகாப்பு முன்னாள் செயலாளரும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளருமான கோட்டாபய ராஜபக்ஷ தெரிவிக்கின் றார்.

யுத்தம் நிறைவடைந்த சந்தர்ப்பத் தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டி லிருந்து இராணுவத்திடம் 13,784 பேர் சரணடைந்திருந்ததாக அவர் சுட்டிக் காட்டினார். அவ்வாறு சரணடைந்த விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு, விடுதலைப்புலிகளுடன் காணப்பட்ட தொடர்புகளின் அடிப்படையில் ஒவ்வொ ருவருக்கும் 6 மாதங்கள், ஒரு வருடம் அல்லது 2 வருடம் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு, அனைவரும் மீள்குடிய மர்த்தப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார். யுத்தம் இடம்பெற்ற எந்தவொரு நாட்டிலும் இவ்வாறான புனர்வாழ்வு திட்டமொன்று முன்னெடுக்கப்படவில்லை என சுட்டிக்காட்டிய கோட்டாபய ராஜபக்ஷ, இலங்கையில் மிக வெற்றிகரமாக அந்த திட்டம் முன்னெடுக்கப்பட்டதாகவும் கூறினார்.

அவ்வாறாயினும், இராணுவத்திடம் சரணடைந்த எவரும் காணாமல் ஆக்கப்படவில்லையா என ஊடகவிய லாளர்கள் இதன்போது கேள்வி எழுப்பினர். இதற்கு பதிலளித்த கோட்டாபய ராஜபக்ஷ, சரணடைதல் என்பது வேறு, காணாமல் போகின் றமை என்பது வேறு எனக் கூறினார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

# வீட்டுக்குள் நுழைந்துள்ள யானை

செல்லமுத்து

இலங்கைத் தமிழரசுக்கட்சியை தந்தை செல்வா 1949 இல் தொடங்கிய பொழுது அவருடன் இருந்தவர்களில் டாக்டர் நாகநாதன், வன்னியசிங்கம், சிவபாலன் போன்ற பலர் மக்களுக்குத் தெரிந்த அரசியவாதிகள் ஆவர்..ஆனால் இவர்களை விட அக்கட்சித் தொடக்க வேண்டும் என்று நேரடி அரசியலில் ஈடுபடாத தமிழினப்பற்றாளர்கள் பலர் இருந்துள்ளனர். அவர்களில் குறிப்பிடக்கூடியவர்கள் சைவப் பெருமக்களாகிய திருவிளங்கம். டாக்டர் பரமநாயகம் ஆகியோர் ஆவர். இவர்கள்தான் செல்வாவைத் தமிழினத்திற்குத் தலைமை ஏற்று வழி நடத்த வேண்டும் என்று வலியுறுத்தியவர்களில் முதன்மையானவர்கள். கட்சி தொடங்கிய காலங்களில் இருந்த தொல்லைகள் இடைஞ்சல்கள் ஏராளம். ஆனால் தளராத முயற்சி கொள்கைப் பற்று என்பனவும் வன்னியசிங்கத்தின் முழுநேர உழைப்பு,. இலங்கையிலேயே அதிக வருமானவரி கட்டிய பெரும் டாக்டர் நாகநாதனின் உழைப்பு என்பன பிரிந்து கிடந்த தமிழ் மக்களை ஒன்றுபடுத்தின என்பது வரலாறு . யாழ்ப்பாணம் ,வன்னி மட்டக்களப்பு என்று பிரிந்திருந்த தமிழ்த் தேசத்தை ஒன்றாக ஒரே அணித் தலைமையில் கொண்டு வந்தது தமிழரசுக்கட்சி. தமிழரசுக்கட்சி தனது அடிப்படைக் கொள்கையாகத் தமிழினம் கவுரவத்துடனும் தன்மானத்துடனும் இத்தீவில் வாழவேண்டுமென்றால் அதற்கு ஏற்றது சமஷ்டி அரசியல் அமைப்பே என்று கூறி அதனையே தனது அடிப்படைக் கொள்கையாக க்கொண்டு. திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மூலம் தாயக மண் பறிபோவதையும, அதன் தாக்கத்தையும் மக்களுக்கு விளக்கியதுடன் நில்லாது பின்னர் கட்சி பலமான நிலையை அடைந்தவுடன் தமிழ் இளைஞர்களை அழைத்துச் சென்று வன்னிக்காட்டில் குடியேற்றிய வரலாறும் உண்டு.

தமிழினத்திற்கு ஏற்பட்ட இன்னல்கள் ஒவ்வொன்றையும் மக்களுக்கு விளக்கி அறவழிப்போராட்டத்தின் மூலம் தான் எமது உரிமைகளைப் பெறலாம் என்று தெளிவுபடுத்தியது செல்வா தலைமையிலான தமிழரசுக்கட்சி. ஆனால் இக்கட்சிக்குள் இடைக்கிடையில் சிலர் ஊடுருவல் செய்து கட்சியில் சில உடைப்புக்களை ஏற்படுத்த முனைந்துள்ளனர். ஆனால் அவை பெரிதாக எடுபடவில்லை. ஏனெனில் தந்தை செல்வாவின் தூ ய்மையான அரசியலை மக்கள் நன்கு புரிந்து கொண்டதால் மக்கள் செல்வாவின் பின்னாலேயே நின்றனர். தமிழரசுக்கட்சி என்றால் தந்தை செல்வாவே அனைவரின் கண்ணுக்குள்ளும் நிற்பார். அந்த உருவம் பார்க்கின்சன் நோய் காரணமாக தள்ளாடித் தள்ளாடி நடக்கும் ஆனாலும் அவரின் தமிழினம் பற்றிய உறுதியான கொள்கை மக்களிடம் அவரை ஒரு தலைவராக இறக்கும் வரை நிலைத்து நிற்க வழி கண்டது..



தமிழினத்தின் ஒற்றுமைக்காக அவர் எதனையும் விட்டுக்கொடுக்க ஆயத்தமானவர் தமிழினத்தின் உரிமைகளை எதற்காகவும் விட்டுக்கொடுக்காமல் இருந்தவர். ஆனால் இடைக்கால ஏற்பாடுகளாகப் பிரதம மந்திரிமார்களுடன் ஒப்பந்தங்கள் செய்தாலும் அவற்றை இடைக்கால ஏற்பாடாகவே அவர் கருதியிருந்தார். சமஷ்டியே தமிழினத்திற்கு உள்ள ஒரே வழி என்றிருந்தவர் பின்னர் சிங்களத் தலைமைகள் ஒருபோதும் தமிழரின் உரிமைகளை வழங்காது என்பதால் வட்டுக்கோட்டையில் தமிழீழத் தனியரசுக்கான தீர்மானத்தை நிறைவேற்றினார். அதை அவரைப் பின்பற்றிவந்தவர்கள் கைவிட்டனர். செல்வாவின் நினைவிடத்தில் நின்று செல்வா விட்டுச்சென்ற உயில் தமிழீழம் என்று உறுதி மொழி எடுத்தவர்கள் கோட்டே ஜெயவர்த்தனபுரவிற்குச் சென்று புதிய அரசியல் யாப்பைத் தயாரித்தால், நாம் நல்லூரில் எமது அரசியல் யாப்பைத் தயாரிப்போம் என்று உறுதி எடுத்து விட்டு யாவற்றையும் கைவிட்டு முதலில் மாவட்ட அபிவிருத்திச் சபைகளையும், நாடாளுமன்றத்தில் வழி மொழிந்து ஏற்றுக்கொண்டுவிட்டுப் பின்னர் மாகாணசபைகளையும் ஏற்று மாபெரும் வரலாற்றுத் துரோகத்தை இனத்திற்குச் செய்ததோடு எந்த இலட்சியத்தை ஊட்டி வளர்த்தாரோ அந்தப் பெரும் தலைவர் செல்வாவுக்கும் துரோகம் இழைத்தனர் அவர் வழி வந்தவர்கள்.

தமிழரசுக்கட்சி வன்னியசிங்கம், நாகநாதன் ஆகியோரினால் ஒரு அறவழிப்போராட்ட அமைப்பாகவே வளர்த்தெடுக்கப்பட்டது. தொண்டர்கள் தெரிவு போராட்ட வழிமுறைகள் எல்லாம் அவர்களுக்குவழங்கப்பட்டன. வன்னியனாரின் மறைவு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. ஆனாலும் கொள்கை உறுதி தளராமலே இருந்தது.

ஆனால் பின்னர் கட்சிக்கு வந்தவர்கள் கட்சியை வெறும் நாடாளுமன்ற அரசியல் கட்சியாகவே பார்த்தனர். அவ்வாறு வந்தவர்கள் கட்சியிலிருந்து நீக்கப்பட்டபொழுது செல்வா கூறிய ஒரு வரியை இங்கு குறிப்பிட்டாகவேண்டும். கொள்கை தான் பெரிது,எமது இலட்சியம் தமிழினத்தின் உரிமைக்கானது இந்த இலட்சியத்திலிருந்து செல்வநாயகம் விலகினாலும் நீங்கள் கட்சிக்கொள்கைனைத்தான் பின்பற்றவேண்டும் தன்னைப் பின்பற்றக்கூடாது என்று அவர் கூறினார். ஆனால் இன்று சமஷ்டி போய்விட்டது 'எக்கியராஜ்ஜே' என்ற ஒற்றை யாட்சியைத் திணிக்கும் செயலைச் சுமந்திரன் முன்னின்று செய்கிறார். அப்படியானால் இந்தச் சுமந்திரனின் நோக்கம் என்ன? இவரது இலக்கு என்ன? எங்கிருந்து வருகிறார், அல்லது அனுப்பப்பட்டார்? என்று பார்க்க வேண்டியுள்ளது. அதற்கு முன்னர் தமிழரசுக்கட்சிக்குள் நுழைந்த சிலரையும் நோக்கவேண்டும்.

1965 ஆம் ஆண்டுத் தேர்தலில் யாழ்ப்பாணத் தொகுதில் போட்டியிட இளைப்பாறிய மாவட்ட நீதிபதியாகிய சி.எக்ஸ். மார்ட்டினைத் தந்தை செல்வா அழைத்து வந்து மக்களுக்கு அறிமுகப்படுத்தினார். நீதிபதியாக இருந்தவர் நேர்மையானவர் தமிழினத்துக்காக உழைக்க வந்துள்ளார் என்று செல்வா கூறினார்.யாழ்ப்பானத் தொகுதியைக் கட்சிகைப்பற்ற அப்படியான ஒருவர் தேவையாகவும் இருந்தது.ஆனால் அவரால் அத்தேர்தலில் வெற்றி பெற முடியவில்லை.ஆனால் அவர் அடுத்த எழுபதாம் ஆண்டுத் தேர்தலிலும் போட்டியிட்டு மிகக் குறைந்த வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். அவரைக் கட்சி கொண்டு வந்தபொழுது அவரின்மேல் ஒரு பெரிய குற்றச்சாட்டு வைக்கப்பட்டது. அவர் சிறிமாவோவின் கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் என்பது, டைம்ஸ் நாளேட்டின் பங்குதாரர் என்றும் கூறப்பட்டது. அவர் திட்டமிட்டு நுழைந்தாரா அல்லது தற்செயலானதா? என்பது தெரியவில்லை. ஆனால் அவர் எழுபத்திரண்டாம் ஆண்டு அரசியல் யாப்பு விவாதங்களில் பங்குகொண்டு அரசின் தீர்மானங்களை ஆதரித்துப் பேசினார். தந்தை செல்வா அரசியல் யாப்பு அவையில் இருந்து வெளியேறிய பின்பும் தொடர்ந்து பங்குபற்றி அரசியல் யாப்பை ஆதரித்து வாக்களித்துப் பெரிய துரோகம் இழைத்தார்.

இதே காலப்பகுதியில் திருகோணமலையில் போட்டியிடச் சம்பந்தன் விருப்பம் தெரிவித்தபொழுது செல்வா அதனை ஏற்க மறுத்துவிட்டார். சம்பந்தன் 1961 இல் நடைபெற்ற கச்சேரி மறியல் போராட்டத்தில் பங்குகொண்டு பனாகொடை இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டபோது தான் "தமிழரசுக்கட்சிகாரனல்ல போராட்டத்தில் விருப்புடன் பங்குகொள்ளவில்லை" என்று சிறிமாவோ பண்டாரநாயக்கவுக்கு எழுத்தில் கொடுத்துவிட்டு வெளியில் வந்தவர் .எனவே இவரை வேட்பாளராக நியமிக்கச் செல்வாவும் விரும்பவில்லை மக்களும் விரும்பவில்லை.ஆனால் 1977 தேர்தலில் அமிர்தலிங்கம் இவரை வேட்பாளராக்கினார். இவர் என்ன நோக்கத்துடன் கட்சிக்குள் வந்தார்? என்பது தான் இப்பொழுது எழுந்துள்ள வினாவாகும்.

இதேபோல் தான் பொத்துவில் கனகரத்தினத்தையும் அவர் எந்தக் கட்சி என்று தெரியாமல் பொத்துவில் தொகுதியில் போட்டியிட வைத்தனர். அவர் வென்றபின் ஐக்கியதேசியக் கட்சிக்குப் போய்விட்டார், கட்சிமாறிய மையினால் அவர் பதவி இழந்ததாக அறிவிக்கும்படி வழக்கு வைத்தனர் . இதில் வேடிக்கை என்னவென்றால் அவர் தமிழரசுக்கட்சியிலோ விடுதலைக் கூட்டணியிலோ உறுப்பினராக இருக்கவில்லை அவர் ஐக்கியா தேசியக் கட்சி உறுப்பினர் என்று வழக்கு மன்றில் உறுதி செய்யப்பட்டது. இவ்வாறுதான் காலத்துக்குக் காலம் கட்சிக்குள் ஊடுருவல்கள் நடைபெற்று வந்துள்ளன. இப்பொழுது கடைசியாகச் சுமந்திரன் திட்டமிடப்பட்டு மிகவும் நுட்பமாக ஊடுருவி உள்ளதாகத் தகவல்கள் உறுதி செய்கின்றன. கட்சியின் தற்போதைய செயல்களை நோக்கும் பொழுது அது உண்மையாகவே தெரிகிறது.

சுமந்திரன் வடமராட்சியைச் சேர்ந்தவர் என்றாலும் கொழும்பில் படித்தவர் என்றும்

(14ஆம் பக்கம் பார்க்க)

# சமூகக் குணப்படுத்தலில் சமூக மூலதனங்கள்

மருத்துவர் சி.யமுனானந்தா

ஓர் சமூகம் பாரிய உளநெருக்கீடுகளை எதிர்கொண்டபோது அது எவ்வாறு அதன் தாக்கங்களிலிருந்து மீளுகின்றது என்பதில் சமூக மூலதனங்கள் (Social Capital) செல்வாக்குச் செலுத்துகின்றது. இத்தகைய சமூக மூலதனங்களின் பிரயோக சமூகக் குணப்படுத்தல் (Social Therapy) தொடர்பாக உலகில் பாரிய இனப்படுகொலைகள் நடந்தேறிய தேசங்களின் சமூகக் குணப்படுத்தல் அனுபவங்கள் எமக்கு ஓர் கற்பிதமாக உள்ளன. ருவாண்டா, கம்போடியா, குவட்டமாலா, சோமாலியா, உகண்டா, எதியோப்பியா, சியாராலியோன் போன்ற நாடுகளில் சமூகக் குணப்படுத்தலில் சமூக மூலதனங்களின் பிரயோகம் செல்வாக்குச் செலுத்துகின்றது. இத்தேசங்களில் பாரிய இனப்படுகொலைகள் நிகழ்ந்துள்ளது. அந்த வகையில் ஈழத்தமிழ்ச் சமூகமும் பாரிய சமூகக் குணப்படுத்தலை வேண்டி நிற்கின்றது.

யுத்தத்தால் நொருங்கிய சமுதாயத்தைக் கட்டியெழுப்ப சமூக மூலதனம் ஓர் பாலமாகவும், ஓர் பிணைப்பாகவும் அமையும். சமுதாயத் தொடர்பமைப்புக்கள், பொதுமக்களின் பங்களிப்பு, பொதுசன அடையாளம், ஒத்துழைப்பிற்கான வழமைகள், சமூகத்தின் மீதான நம்பிக்கைகள் என்பன சமூகக் குணப்படுத்தலின் பிரதிபலிப்புக்கள் ஆகும். யுத்தம், இனவழிப்பு என்பன சமூக மூலதனத்தில் தேய்மானத்தையும், (Social Capital Atrophy) இன முரண்முனை நிலையினையும் (Ethinic Polarization) கூட்டான செயற்திறனில் (Collective efficacy) பங்கத்தினையும் ஏற்படுத்தி உள்ளது.

சமூக மூலதனங்கள் சமுதாய அகில வளைத்தளத்தை (Fabric Space of Social Universe) மாற்றத்திற்கு உள்ளாக்கி வரும். சமூக மூலதனங்கள் புலமைசார் சமூக மூலதனங்களாகவும் கட்டமைப்புசார் சமூக மூலதனங்களாகவும் அமையும் சமூகக் கட்டமைப்புகளுக்கு இடையே பாலமாகவும், பிணைப்புகளாகவும் கிடைச் சமூக மூலதனங்கள் அமையும். (Horizontal Social Capital) புலமைசார் சமூக மூலதனங்கள் மக்களின் உணர்ச்சி வெளிப்பாடுகளாகவும், கட்டமைப்புசார் சமூக முதலீடுகள் மக்களின் செயற்பாடுகளாகவும் பிரதிபலிக்கும்.

சமூக மூலதனம் மூலமான சமூக குணப்படுத்தல் மக்களின் உள ஆரோக்கியத்தையும் மேம்படுத்தும். ஆலயங்களிற்கும், மதவழிபாடுகளுக்குமான சமூக மூலதனம் ஆன்மீக ஆரோக்கியத்தை அதிகரிக்கும்.

வன்முறையின் சாட்சியங்களாக சமூகம் எதிர்நோக்கியவைகள் கொலைகள், பாலியல் வன்முறைகள், சித்திரவதைகள், தடுத்து வைத்தல், கொள்ளையிடல், சொத்தழிப்பு, கடத்தப்படல், சமூகத்தில் ஒதுக்கப்படல், நாட்டைவிட்டு வெளியேறல் என்பன கூட்டாக ஒரு சமூதாயத்தைப் பாதித்துள்ளது. இவற்றினால் அதிகம் பாதிக்கப்பட்டவர்களாக விதவைகள், தபுதாரர்கள், அநாதைகள், அங்கவீனமுற்றவர்கள், சிறைக்கைதிகள், சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டவர்கள், அகதிகள், ஆயுதமோதலில் ஈடுபட்டவர்கள் என்பவர்கள் அமைகின்றனர். இவர்களுக்கு பாரபட்சமற்ற சமூக மூலதனங்கள் அவசியமாகும்.

சமூக மூலதனத்திலுள்ள பாதிப்புக்கள் உளநோய் ஏற்படுவதிலும், உளநோய் அதிகரிப்பிலும் செல்வாக்குச் செலுத்துகின்றன.

அதிகம் பாதிக்கப்படக்கூடியவர்களில் நுண்நிதிய மேம்பாட்டுடனான ஆற்றுப்படுத்தல்கள், செயற்திறன் பட்டறைகள் அவசியமாகும். பொதுவாக அரசியல் வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்களில் வெட்கம், குற்ற உணர்வு, நம்பிக்கையீனம், மாற்றான் தன்மை ஏற்படல் போன்ற இயல்புகள் ஏற்படும். இவர்களுக்கு கட்டமைப்புசார் சமூக மூலதனத்துடன் புலமைசார் சமூக மூலதனமும் அவசியம். சமூக முரண்நிலையில் அதிகமாக பாதிக்கப்படுபவர்கள் பாரிய உளநோக்கங்களான உளப்பிளவை நோய், மிகை எழுச்சி நோய்நிலை, மனச்சோர்வு நோய்நிலை உடையவர்களாகவும் காணப்படுகின்றனர். இவர்களிற்கு உரிய உளமருத்துவமும் மிகவும் இன்றியமையாதது ஆகும்.

புலமைசார் சமூக மூலதனமே சமூகப் பெறுமதி, தேசவழமை, குடிமகனுக்குரிய பொறுப்புணர்வு என்பவற்றை மேம்படுத்தும். மேலும் மீள்நிலைக்கு வரல், பிறருக்கு உதவல், தன்னம்பிக்கை, சமூகம் மீதான நம்பிக்கை என்பன மேம்பட உதவும்.

எமது மக்களுக்கான மூலதனங்களில் பெருமளவு அரச நிதித்திட்டமிடல் மூலமே கிடைக்கின்றது. இவை செவ்வன் சமூக மூலதனங்கள் ஆகும். (Vertical Social Capital) வைத்தியசாலைகள் அமைத்தல், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், தொழில்நுட்பக் கல்லூரிகள் என்பனவற்றை விரிவாக்கல் என்பன செவ்வன் சமூக மூலதனங்கள் மேலும் நெடுஞ்சாலைக் கட்டமைப்புக்கள், மின்சாரவசதி, விமான நிலையம் அமைத்தல் என்பனவும் செவ்வன் சமூக மூலதனங்கள் ஆகும்.

இத்தகைய செவ்வன் சமூக மூலதனங்கள் பாதிக்கப்பட்ட சமுதாயத்திற்காக சமூகக் குணப்படுத்தலில் உற்றதுணையாக அமைதல் அவசியம். இங்கு இனத்துவ முனைவுத்தன்மை உள்ளடங்கல் ஆகாது.

சமுதாய அகில வளைத்தளத்தில் (Fabric Space of Social Universe) சமூக மூலதனங்கள் சமூக வெம்துளையினுள் (Social Worm Holes) இட்டுச் செல்லலாம். அதாவது அழிவுக்கு முன்பான சமூக நிலைக்கு சமூக மூலதனங்கள் இட்டுச் செல்லலாம். இதற்கு சமுதாயத் தொடர்பமைப்புக்கள், பொதுசனப் பங்களிப்பு அவசியம். சமுதாய அடையாளம் பேணப்படல் வேண்டும். ஒத்துழைப்பிற்கான வழமைகள் பேணப்படல் வேண்டும். சமூகத்தின் மீது நம்பிக்கை வைத்தல் வேண்டும்.


இனமுரண்நிலை அதிகரிப்பின் சமூக அகிலவளை தளத்தில் சமூக மூலதன மலிதல் ஏற்பட்டு, சமூக கருந்துளையினுள் (Social Black Holes) நுழையவேண்டிய சூழல் ஏற்படும். இதனால் சமூகக் கூட்டான செயற்திறன் பாதிக்கப்படும். எனவே இன அழிவுக்கு உட்பட்ட சமூகம் சமூக மூலதனத்தை எவ்வாறு செவ்வனே அணுக வேண்டிய தார்ப்பரியத்தினை சமூக வெம்துளைகளும், சமூக கருந்துளைகளும் சமூக அகிலவளைத்தளத்தில் சுட்டுகின்றன.

கட்டமைக்கப்பட்ட வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்கள் தமது சுய இருப்பினையும், பாதுகாப்பினையும், சனநாயக உரிமைகளையும் முழுமையாகப் பெறுவதற்கு சமூக மூலதனங்கள் பங்களிக்க வேண்டும். ஆனால் இரத்த வாடையுடனான தேர்தல் உறுமல்கள் சிறுபான்மைச் சமூகத்தினைப் பெரும்பான்மைச் சமூகத்தில் இருந்து விலத்தி வைக்கும். இது சமூக அகிலவளைத்தளத்தில் சமூகக் கருந்துளைளையே ஏற்படுத்தும்.

பாதிப்படைந்த மக்கள், பொருளாதார வறுமை, அதிகார வறுமை என்பவற்றினால் மேலும் பாதிக்கப்படுவர். இவற்றுக் கிடையேயான சமூக மூலதனங்கள் அணுகவேண்டும். அடுத்து உள ஆரோக்கியம், இனப்பெருக்க ஆரோக்கியம், சமுதாய மருத்துவம் என்பவற்றிற்கான சமூக முதலீடுகள் மிகவும் முன்னுரிமையுடன் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

சமூக மூலதனங்களின் பிரயோகம் பரிதி நோக்கியதாக்வும், (Decentralization) மக்களின் பங்களிப்புடனானதாகவும், சமூகத்தின் உள்ளடங்கலாகவும், சமூக வ்லுவூட்டலாகவும், சமூகத்தின் அடிநிலையினை பலப்படுத்துவதாகவும் அமைதல் நன்று.

இலங்கையில் கடந்த நூற்றாண்டுகளாக உள்ள இனமுரண்பாடு, தன்னிலை அடைவதற்கு இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையே தரைவழிப்பாதையாக சேது பாலத்தினை சர்வதேச சமூகத்தின் உதவியுடனேயே கட்டியமைத்தல் இப் பிராந்தியத்தின் அமைதிக்கான மிகப் பாரிய செவ்வன் சமூக முதலீடாக அமையும்.



சமுதாய அகில வளைத்தளம்
(Fabric Space of Social Universe)

# தகுதியற்றவர் சுமந்திரன்...!

## ஜெயபாலன் சாடல்

நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் அரசியல் செயற்பாடுகள் பற்றி மக்கள் ஐயுறவு கொள்ளத் தொடங்கியுள்ளனர். கடந்த வாரத்தில் பிரதமர் ரணில் வட பகுதிக்கு விஜயத்தினை மேற்கொண்டபோது அவதானித்த சுமந்திரனின் செயற்பாடுகளிலேயே இவ்வாறு மக்கள் சந்தேகம் தெரிவிக்கின்றனர். அவர் ரணில் பங்கு பற்றிய பல நிகழ்வுகளில் தானும் பங்கெடுத்ததோடு அவரது உரையைத் தமிழில் மொழி பெயர்க்கும் பணியையும் செய்திருக்கிறார். ரணில் சொன்னதைக் காட்டிலும் இதற்கு உப்புச் சப்புச் சேர்த்துச் சொல்லும் தருணம் வந்தபோதெல்லாம் 'இது அவர் கருத்து. இதனை என் கருத்தாக எடுக்க வேண்டாம்" என்று சொல்லிச் சொல்லி அந்தப் பணியைச் செவ்வனே நிறைவேற்றிப் பல இடங்களில் ரணிலைக் காப்பாற்றியிருக்கிறார்.

ஒரு நாட்டில் அதுவும் ஜனாதிபதித் தேர்தலுக்கு மக்கள் வாக்களிக்கக் காத்திருக்கும் சமயத்தில், குறிப்பாக தமிழ் மக்கள் தாம் யாருக்குத் தங்களது வாக்கைக் கொடுப்பது என அறியாது திண்டாடுகிற நிலையில், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் இப்படி ரணிலோடு தேனிலவைக் கழிப்பதென்பது தமிழ் மக்களை மட்டுமல்ல அனைவரையும் ஒரு கேள்விக் குள்ளாக்குகின்ற கேலிக் கூத்து என்று கூடச் சொல்லலாம். சுமந்திரன் திட்டமிட்டு நடத்திய நாடகம் இது என்று கூட பலரும் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

இச் சமயத்தில் பலரிடம் உள்ள கேள்வி இதுதான். இந்தச் சுமந்திரன் யார்? ஒரு கட்சியின் அடி மட்டத்தில் இருந்து கட்சி ரீதியாகத் தன்னை வளர்த்துக் கொண்டு அதிகாரக் கதிரையைப் பற்றிக் கொண்டவரல்ல சுமந்திரன். அதிகாரவர்க்கத்தினால் இடைச் செருகலாகத் தமிழரசுக் கட்சிக்குள் கொண்டுவரப்பட்டவர். இவரை வா என்று எவரும் வெற்றிலை வைத்து அழைக்காமலே கட்சிக்குள் வந்தேறுகுடியானவர். கட்சிக்குள் வந்ததும் அவரை மதம் பிடித்துக் கொண்டது. தன்னைக் காப்பாற்ற ஒரே வழி மதத்தைப் பிடித்துக் கொளவது என்பதை அவர் விளங்கிக் கொண்டார். மதரீதியாகத் தமிழரசுக் கட்சியையோ அல்லது தமிழ் தேசியக் கூட்டமைப்பையோ பிரித்த பெருமை சுமந்திரனையே சாரும். இதை சிவ சேனைத் தலைவர் சச்சிதானந்தன் பல இடங்களில், பல தடவைகளில் செவ்வனே விளக்கியுள்ளார்.

கட்சிக்குள் இருந்த தலைமைகளின் பலவீனம் என்ன என்பதைச் சரியாகக் கணக்கிட்டு அவர்கள் பலவீனத்தைத் தனது பலமாகக் கொண்டு கட்சிக்குள் மிதந்தவர், இன்னும் பல வழிகளில் மிதந்து கொண்டிருக்கிறார். அரச சலுகைகளை அதிகம் அனுபவிக்கின்ற அரசியல் பிரமுகர்களில் இவரும் சம்பந்தரும் அடங்குவதாக அரசியல் வட்டாரம் தமது அதிருப்தியை வெளியிட்டிருக்கிறது.

தனக்குள் தமிழ் மக்கள் மத்தியில் அதிக செல்வாக்கு இல்லை என்று நன்கு அறிந்தும் சம்பந்தரின் செல்லப் பிள்ளையாகியதால் கட்சித் தொண்டர்கள் பலரை இவர் அவமதித்ததும் உண்டு எனவும் பலர் கூறுகின்றனர்.

இவர் கரைச்சல் தாங்காது கட்சியை விட்டு வெளியேறியதும் உண்டு. ஆனால் 2015 இல் இவர் ஒரு கறுத்த ஆடு என்பதையும், மந்தையை அழிக்கவல்லது என்றதையும் ஒருவர் இனம் கண்டு, ஒரு பகிரங்கக் கடிதத்தை கீழ் கண்டவாறுஎழுதியிருக்கிறார்.

## சுமந்திரன் எம்.பி.க்கு ஒரு பகிரங்கக் கடிதம்



கிழக்கை இழந்து வடக்கு என்று தேய்ந்து போகாமல் வட–கிழக்கென ஈழ தமிழரை மீண்டும் ஒருங்கிணைத்த சம்பந்தரின் ஆளுமையின் நிழலில் அரசியலுக்கு வந்த உங்களுக்கு வாழ்த்துக்கள். கட்சி கொடுக்கும் குறித்த பணிகளை பொறுப்பேற்றுச் செய் வதில் நீங்கள் திறமையுள்ளவர் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் வட–கிழக்கு மக்க ளின் தலைவிதியை நிர்ணயிக்கும் தலை மைத் தீர்மானம் எடுக்கும் தகுதி இன்னும் உங்களுக்கு வாய்க்கவில்லை.


நீண்ட கட்சிப் பணிகளின் அனுபவத் தாலும் மக்களின் நம்பிக்கையை வெல்வ தாலும் மட்டுமே நீங்கள் அத்தகைய தகை மையைப் பெறமுடியும். மேற்கு நாட்டுப் பிரமுகர் சிலரது அனுசரணையால், ரணிலு டைய நட்பினால் குறுக்கு வழியில் அந்தத் தகைமையை நீங்கள் பெறுவது ஒருபோதும் சாத்தியமில்லை.

வரலாற்றில் இலங்கை தமிழரின் விதி யோடு விளையாடுவது யாருக்கும் அத்தனை இலகுவான ஒரு ஆட்டமாக இருந்ததில்லை. இனியும் இருக்காது என்றே தோன்றுகிறது. இதனை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண் டும்.

ரணில் எல்லாம் வல்லவருமல்ல, மேலும் தனது வல்லமைக்குள் தமிழ் மக்களது பிரச்சி னைக்குத் தீர்வுகாண விரும்புகிறவருமல்ல என்பதை புரிந்து கொள்ளுங்கள் நீங்கள், அவர் ஜே.ஆர். வழிவந்த ஒரு கடைந்தெடுத்த மாக்கியவல்லியின் சிங்கள அரசியல்வாதி மட்டும்தான். அவரை நம்பி தமிழருக்கு நன்மை செய்துவிடலாம் என தாங்கள் கருதினால் முதலில் அரசியல் கைதிகளை விடுவிக்கும்படி அவரிடம் கேளுங்கள். அதை விடுத்து அரசியல் கைதிகளை புனர்வாழ்வு முகாம்களுக்கு அனுப்பும் சதிக்கு உடந்தை யாக இருக்காதீர்கள். அரசியல் இலக்குகளை பணயம் வைத்து ஆடுகிற சூது இராஜதந் திரமல்ல என்பதையும் சகுனியால் பாரதப் போரை வெல்ல முடியவில்லை என்ப தையும் தெரிந்து கொள்ளுங்கள்.

விக்னேஸ்வரனின் பிரச்சினை உங் களின் வீட்டுச் சிறையில் இருந்து தப்பி ஓடியதுதான். மாவை சேனாதிராசா போன்ற முன்னணித் தலைவர்கள் சம்பந்தரை உங்க ளின் வீட்டுச் சிறையில் இருந்து விடுதலை செய்யவேண்டும். உங்களுக்கு கட்சியை குத் தகைக்கு கொடுக்கும் முயற்சியை தலைவர் கள் கைவிட்டு உங்களை உடனடியாக கட்சிக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும்.

நீங்கள் தனித்து இயங்குவதை அனுமதிக் காமல் கூட்டமைப்பு குழுவினரில் ஒருவராக இயங்க செய்தல் காலத்தின் அவசியம். இந்தத் தருணத்தில் திறமையுள்ள யாரையும் இழக்க முடியாது. அதேசமயம் எஞ்சியுள்ள எங்கள் வரலாற்றை எந்தக் கொம்பனிடமும்



வ.ஐ.ச.ஜெயபாலன்.

பறி கொடுத்து விடவும் முடியாது.

தமிழ் அரசியல் கைதிகளின் பொது மன்னிப்பு மட்டுமே சமாதானத்துக்கும் நல்லிணக்க செயற்பாடுகளுக்குமான அரசி ன் அழைப்பாக அமைய முடியும். அத்தகைய அழைப்பு இன்னமும் அரசிடமிருந்து தமிழ் மக்களுக்கோ தமிழ்த் தேசியக் கூட்டமைப் புக்கோ கிடைக்கவில்லை என்பதை சம் பந்தர், மாவை, சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், சிறீதரன், விக்னேஸ்வரன் மற்றும் நீங்கள் உட்பட வட., கிழக்கு தலைவர்கள் அனைவரும் ஒரே குரலில் பிரகடனப்படுத்த வேண்டிய கடைசி த் தருணம் இதுதான். எங்கள் அரசியல் கைதி கள் விடுதலை செய்யப்படவில்லை, எனவே இலங்கை அரசு இன்னும் சமாதானத்துக்கோ, நல்லிணக்கத்துக்கோ முன்வரவில்லை என்பதை கூட்டமைப்பு உலகறிய சொல்ல வேண்டிய தருணமிது.

இப்படிக்கு,
அன்புடன்,
வ.ஐ.ச.ஜெயபாலன்.

2015 நவம்பர் 19 ஆம் திகதி தினக் குரல் பத்திரிகையில் வெளியான அந்த விடயம் உங்களுக்குச் சிலவற்றை நினைவுபடுத்தும் என்பதால் அதனைத் தருகிறோம்.

இலங்கை நாடாளுமன்ற உறுப்பி னர் சுமந்திரன் எம்.பி க்கு ஈழத்துக் கவி ஞரும், திரைப்பட நடிகரும், அரசியல் ஆய்வாளருமான வ.ஐ.ச.ஜெயபாலன் எழுதிய பகிரங்கக் கடிதத்தை காலத்தின் தேவை கருதித் தற்போது மறு பிசுரம் செய்கிறோம். தொடர்ந்து படியுங்கள்.

கிழக்கை இழந்து வடக்கு என்று தேய்ந்து போகாமல், வட- கிழக்கென ஈழத் தமிழரை மீண்டும் ஒருங்கிணைத்த சம்பந்தரின் ஆளுமையின் நிழலில். அரசியலுக்கு வந்த உங்களுக்கு வாழ்த்துக்கள். கட்சி கொடுக்கும் பணிகளைப் பொறுப்பேற்றுச் செய்வதில் நீங்கள் திறமையுள்ளவர் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் வட-கிழக்கு மக்களின் தலைவிதியைத் நிர்ணயிக்கும் தலைமைத் தீர்மானம் எடுக்கும் தகுதி இன்னும் உங்களுக்கு வாய்க்கவில்லை.

நீண்ட கட்சிப் பணிகளின் அனுபவத் தாலும் மக்களின் நம்பிக்கையை வெல்வதாலும் மட்டுமே நீங்கள் அத்தகைய தகமையைப் பெறமுடியும். மேற்கு நாட்டுப் பிரமுகர்கள் சிலரின் அனுசரணையால், ரணிலுடைய நட்பினால் குறுக்குவழியில் அந்தத் தகமையை நீங்கள் பெறுவது ஒரு போதும் சாத்தியமில்லை.

வரலாற்றில் இலங்கை தமிழரின் விதியோடு விளையாடுவது யாருக்கும் அத்தனை இலகுவான ஒரு ஆட்டமாக இருந்ததில்லை. இனியும் இருக்காது என்றே தோன்றுகிறது. இதனை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். ரணில் எல்லாம் வல்லவருமல்ல. மேலும் தனது வல்லமைக்குள் தமிழ் மக்களது பிரச்சினைக்குத் தீர்வுகாண விரும்புகிறவருமல்ல என்பதைப் புரிந்து கொள்ளுங்கள் நீங்கள். அவர் ஜே.ஆர் வழிவந்த ஒரு கடைந்தெடுத்த மாக்கிய வல்லியின் சிங்கள அரசியல்வாதி மட்டும்தான். அவரை நம்பித் தமிழ ருக்கு நன்மை செய்துவிடலாம் எனத் தாங்கள் கருதினால் முதலில் அரசியல் கைதிகளை விடுவிக்கும்படி அவரிடம் கேளுங்கள். அதை விடுத்து அரசியல் கைதிகளைப் புனர்வாழ்வு முகாம் களுக்கு அனுப்பும் சதிக்கு உடந்தை யாகாதீர்கள். அரசியல் இலக்குகளைப் பணயம் வைத்து ஆடுகிற சூது இராஜதந்திரமல்ல என்பதையும் சகுனியால் பாரதப்போரை வெல்ல முடியவில்லை என்பதையும் தெரிந்து கொள்ளுங்கள்.

விக்கினேஸ்வரனின் பிரச்சினை உங்களின் வீட்டுச் சிறையில் இருந்து தப்பி ஓடியது மட்டுமே. மாவை போன்ற முன்னணித் தலைவர்கள் சம்பந்தரை உங்கள் வீட்டுச் சிறையிலிருந்து விடுதலை செய்ய வேண்டும். உங்களுக் குக் கட்சியைக் குத்தகைக்குக் கொடுக் கும் முயற்சியைத் தலைவர்கள் கைவிட்டு உங்களை உடனடி யாகக் கட்சிக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவேண்டும். நீங்கள் தனித்து இயங்குவதை அனுமதிக்கா மல் கூட்டமைப்பு குழுவினரில் ஒரு வராக இயங்கச் செய்தல் காலத்தின் அவசியம். இந்தத் தருணத்தில் திறமை யுள்ள யாரையும் இழக்க முடியாது. அதே சமயம் எஞ்சியுள்ள எங்கள் வரலாற்றை எந்தக் கொம்பனிடமும் பறிகொடுத்துவிடவும் முடியாது.

தமிழ் அரசியல் கைதிகளின் பொது மன்னிப்பு மட்டுமே சமாதானத்துக்கும் நல்லிணக்கச் செயற்பாடுகளுக்குமான அரசின் அழைப்பாக அமைய முடியும். அத்தகைய அழைப்பு இன்னமும் அரசிடமிருந்து தமிழ் மக்களுக்கோ, தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கோ கிடைக்கவில்லை என்பதைச் சம்பந்தர் , மாவை, சுரேஸ் பிரேமச் சந்திரன், செல்வம் அடைக்கல நாதன், சிறீதரன், விக்கினேஸ்வரன் மற்றும் நீங்கள் உட்பட வட, கிழக்குத் தலைவர்கள் அனைவரும் ஒரே குரலில் பிரகடனப் படுத்த வேண்டிய கடைசித் தருணம் இதுதான். எங்கள் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படவில்லை. எனவே இலங்கை அரசு இன்னும் சமாதானத்துக்கோ, நல்லிணக்கத்துக்கோ முன்வரவில்லை என்பதைக் கூட்டமைப்பு உலகறியச் சொல்ல வேண்டிய தருணமிது.

இப்படிக்கு அன்புடன்
வ.ஐ.ச.ஜெயபாலன்.

4 வருடங்களாகியும் இலங்கை அரசு இன்னும் சமாதானத்துக்கோ நல்லி ணக்கத்துக்கோ தமிழருக்கான தக்க தீர்வுக்கோ தயாரில்லை என்பதை அண் மைக்கால சிங்கள அரசியல் கட்சிகளின தும் தலைமைகளினதும் அறிக்கைகள் கூறுகின்றன. அன்றும் இன்றும் தமிழன் நிலை ஒன்றுதான்.!

# மணிபல்லவம் சிவபூமியா? புத்த பூமியா?

மாசிலான்

மணிபல்லவம் என்ற வரலாற்றுக்கு முந்திய பெயரைக்கொண்ட இலங்கைத் தீவில் தற்பொழுது சிங்கள புத்த மேலாண்மை முன்னர் இருந்ததிலும் பார்க்க ஓங்கி ஒலிக்கத் தொடங்கியுள்ளது. அநாகரிக தர்மபாலாவினால் பௌத்த மதவாதச் சிந்தனை விதைக்கப்பட்டு, வளர்ந்த நிலையில் வெள்ளையரின் வெளியேற்றத்தின் பின்னர் இலங்கை முழுவதையும் சிங்கள பௌத்த திணிப்புக்குள் கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஜனநாயகம் என்ற பெயரில் ஆட்சி அமைத்த பேரினவாதிகள் புத்த பிட்சுக்களைத் தமிழ் பள்ளிகளுக்கு அனுப்பிச் சிங்களத்தைப் பள்ளிகள் மூலம் பரப்பினர். சிங்களம் கற்பிக்கச் சாதாரண ஆசிரியர்களை இங்கு அனுப்பாது பிட்சுக்களை ஆசிரியர்களாக அனுப்பியதே ஒரு மறைமுக பௌத்த மயமாக்கலின் நுண்ணிய அணுகுமுறையாக இருந்தது. இத்திட்டம் ஐக்கிய தேசியக் கட்சியால் தான் கொண்டுவரப்பட்டது. ஆனால் இது சிங்களம் மட்டும் சட்டம் 1956 இல் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டதன் பின்னர் பிக்குகள் திரும்பிச் சென்றதால் குறைந்து ஐம்பத்தெட்டு இன வன்முறையினால் முற்றாக இல்லாமல் போய்விட்டது. பிக்குகள் இங்கு மீண்டும் வரவில்லை. ஆனாலும் ஆட்சியாளர்களும் புத்த சங்கங்களும் இத்தீவை முற்றாகப் புத்த பூமியாகவும் சிங்கள மக்களுக்கே உரிய பூமி என்றும் கூறி வந்தனர். உலகில் வேறு நாடு எதுவும் சிங்கள மக்களுக்கு என்று இல்லாதபடியால் இதுவே சிங்கள மக்களின் புத்த பூமி என்றும் இங்கு வாழ்பவர்கள் அனைவரும் அதனை ஏற்று வாழக் கற்றுக்கொள்ளவேண்டும் என்றும் கூறி வந்தனர், வருகின்றனர்.

### சிறிலங்கா என்றால் சிங்களத்தில் பொருள் உண்டா ?

சிங்களத்தில் இத் தீவுக்கு எவ்வாறு எப்பொழுது சிறிலங்கா என்ற பெயர் வந்தது என்று யாரும் சொல்ல முடியாது. லங்கா என்றால் சிங்களத்தில் என்ன பொருள் என்றும் எவருக்கும் தெரியாது. ஆனால் தமிழ் மொழியில் ஒரு பெயர் இருக்குமானால் அது பொருளுணர்ந்த சொல்லாகவே இருக்கும். அது தான் தமிழின் சிறப்பு. லங்கா என்பது இலங்கை என்பதன் சிங்கள வடிவமேயாகும். இதனை ஏற்றுக்கொள்ள மறுத்தாலும் இதுதான் உண்மையாகும். காலத்துக்குக் காலம் வடதுருவம், இமயமலை போன்ற இடங்களில் இருந்து பனிப்பாறைகள் உருகுவதால் பாரிய நிலப்பரப்புகள் கடலில் மூழ்குவது இயற்கை. இப்பொழுதும் சில ஆண்டுகளில் மாலைதீவு அவ்வாறு மூழ்கிவிடும் என்று கூறியுள்ளார்கள். தற்பொழுது சென்னை மும்பை துறை முகங்களுக்கும் இவ்வாறான மூழ்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாகக் கூறியுள்ளார்கள். இந்துப் பெருங்கடலில் பாரிய நிலப்பரப்பு இவ்வாறு மூழ்கிய பொழுது ஒரு சிறு பகுதி நிலப்பரப்பு பெருங்கடலில் தோன்றியது அல்லது தென்பட்டது. அதாவது இலங்கியது என்று அழகு தமிழில் கூறினர். அவ்வாறு இலங்கிய பகுதிதான் இலங்கை ஆனது. இதுதான் உண்மையான பொருள் பொதிந்த பெயராக இத்தீவுக்கு வந்து சேர்ந்தது. இந்த இலங்கை தான் நாளடைவில் லங்கா என்று சிங்களத்தில் மாற்றமடைந்தது. இந்த லங்காவிற்கு முன்னால் ஸ்ரீ என்று போட்டு இது சிறி லங்கா என்று சிங்களத்தில் ஆனது. இவ்வாறுதான் சிங்களத்தில் இத்தீவுக்குப் பெயர் வந்தது. சுருங்கக்கூறின் லங்கா என்பது இலங்கை என்ற தமிழ்ச் சொல்லின் வடிவமேயாகும். எனவே இத்தீவு தமிழ் மக்களுடைய தீவு என்பது மறுக்கப்பட முடியாத உண்மையாகும்.

விசயனின் வருகைக்குப் பின்னரே இங்கு சிங்கள இனம் தோன்றியது என்பது அவர்களது வரலாறு என்பர். அப்படியானால் விசயன் வரும்பொழுது இங்கு வாழ்ந்த மக்கள் யார்? அவர்கள் பேசிய மொழி தான் என்ன.? என்பதற்கு விடை கூற வேண்டியவர்கள் அவர்களே. ஏனெனில் தற்பொழுது இராவணனையும் தங்களின் இனமாகக் கூறுபவர்கள் இராவண சேனை என்று ஓர் அமைப்பையும் வைத்திருப்பவர்கள். இராவணன் எவ்வாறு சிங்கள இனத்தவனாக முடியும் என்று கூறச் சான்றுகள் எதுவுமே இல்லாமல் தானே உள்ளார்கள். இராமாயண காலம் என்பது ஆறாயிரம் அல்லது ஏழாயிரம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்திற்குரியது என்பதுடன், இராவணன் ஒரு சிவபக்தன் என்பதும் தான் இதிகாசத்தில் கூறப்பட்டுள்ளது. இராவணன் மேலது நீறு என்று தானே எங்கள் தேவாரத்திலும் பாடப்பட்டுள்ளது. எனவே இராவணனைத் தங்களின் சிங்கள இனம் என்று எவ்வாறு கூறுகின்றனர் என்பது விநோதமாகவே உள்ளது. இராவணனை ஏற்றுக்கொள்ளும் பொழுது இது முற்றிலும் ஒரு சிவபூமி என்பதையும் அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள்.

### இலங்கையின் பஞ்ச ஈஸ்வரங்கள்

இலங்கையில் பண்டுதொட்டு 'பஞ்ச ஈஸ்வரங்கள்' என அழைக்கப்படும் சிவன் கோயில்கள் ஐந்து இலங்கைத் தீவைச் சுற்றி உள்ளன. மன்னாரில் திருக்கேதீச்சரம் திருகோணமலையில், திருக்கோணேஸ்வரம் கீரிமலையில் நகுலேஸ்வரம், தேவேந்திரமுனையில் பட்டீஸ்வரம், சிலாபத்தில் முன்னேஸ்வரம் என்பன அந்த ஐந்து சிவன் கோயில்கள் ஆகும். இலங்கையை சுற்றி இவை இருப்பது இலங்கை ஒரு சிவபூமி என்றதற்குச் சான்றாக அமைந்துள்ளன. இலங்கைத் தீவின் தென்முனையில் உள்ள தேவேந்திரமுனையின் உண்மையான பெயர் தேவமாடந்துறை என்றும், அங்கு இருந்த சிவன் கோயில் கடலில் மூழ்கிப்போயிற்று என்றும் அகழ்வாராய்ச்சிகள் கூறுகின்றன. பிரேமதாசாவின் ஆட்சிக்காலத்தில் தேவமாடந்துறைக் கடலில் கண்டெடுக்கப்பட்ட சில தெய்வச்சிலைகள் கொழும்பு அருங்காட்சியகத்திலும் வைக்கப்பட்டுள்ளன. சிலாபம் சிவன் கோயில் முன்னைய ஈஸ்வரம் என்று பொருளைக் கொண்டது. இராவணனைக் கொன்றபின் இராமர் அங்கு வந்து முதலில் பிரமகத்திப் பழியைப் போக்கினார் என்று கூறுவர். அதற்கான சிலைவடிவம் ஒன்றும் அங்கு உள்ளது இங்கு கவனிக்கத்தக்கதாகும். எனவே இப்பூமி என்பது சிவபூமியாகவே தொன்று தொட்டு இருந்துள்ளது என்பது இதிகாச மூலமாகவும் வரலாற்றுச் சான்றுகளாலும் தெளிவாகிறது

### புத்தமதம் இங்கு யாரால் கொண்டுவரப்பட்டது

கலிங்கத்துப் போரின் கொடுமையை உணர்ந்த அசோகன் அன்பு, அகிம்சை என்பனவற்றைப் போதிக்கும் முகமாக மகிந்தனையும் சங்கமித்தையும் ஈழத்திற்கு அனுப்பியதாகவும் அவர்கள் இங்கு புத்த சமயத்தைப் பரப்பியதாகவும் கூறப்படுகிறது. அப்படியெனில் மகிந்தனும் சங்கமித்தையும் இங்கு வந்தபொழுது இங்கு வாழ்ந்த சிங்கள மக்கள் என்ன சமயத்தைப் பின்பற்றினர் எந்தத் தெய்வத்தை வழிபட்டனர் என்று பார்த்தால் அம்மக்கள் சிவனையும் முருகனையுமே வழிபட்டனர் என்பது தான் வரலாற்று உண்மை. அத்துடன் கண்ணகியையும் பத்தினித் தெய்வம் என்று அன்றும் வழிபட்டனர் இன்றும் வழிபடுகின்றனர். அப்படியெனில் கண்ணகி யார்? அவர் ஒரு முழுத் தமிழிச்சி அல்லவா. சிவனும் முருகனும் தமிழ்த் தெய்வங்கள்தானே. இப்படி இருக்கும்பொழுது சிங்கள இனமும் புத்தமும் தான் முந்தியது. மற்றையவர்கள் பின் வந்தவர்கள் என்று எவ்வாறு சான்றுகளின்றிக் கூற முடிகிறது இவர்களால்.

இதே நேரம் இங்கு குறிப்பிடப்பட வேண்டியது என்னவெனில் பௌத்தம் மகிந்தன் சங்கமித்திரை ஆகியோரால் இங்கு கொண்டு வருவதற்கு பல ஆண்டுகளுக்கு முன்னரே மணிமேகலையால் இங்கு கொண்டுவரப்பட்டுவிட்டது என்பதாகும். மாதவியின் மகளான மணிமேகலை புத்த மதத்திற்கு மாறி மணிபல்லவம் என்று அழைக்கப்பட்ட இலங்கைத் தீவுக்கு வந்து புத்த மதத்தை பரப்பினார் என்பது மணிமேகலையில் கூறப்பட்ட வரலாறாகும். அவர் பிச்சா பாத்திரம் ஏந்தி மக்களுக்கு உணவு அளித்தார் என்பதும் வரலாறாகும் அவரால் இங்கு கொண்டுவரப்பட்டது மகாயான புத்தமதமாகும். சிங்கள மக்கள் பின்பற்றுவது தேராவாத புத்தமதமாகும். தமிழ் மக்கள் புத்தமத்தைப் பின்பற்றி வாழ்ந்த அடையாளங்களும் சான்றுகளும் இப்பொழுதும் காணப்படுகின்றன. இவ்வாறு காணப்படும் சான்றுகளை வைத்து புத்தமதம் தங்களுடையது என்றும், அது தமிழர் நிலங்களில் இருப்பதனால் அவை சிங்கள புத்த அடையாளங்கள் என்றும் கூறி முழு இலங்கையும் சிங்களவருக்கே சொந்தமானது என்றும் தவறாகச் சிங்கள மக்களுக்குச் சொல்லிக்கொடுத்துப் பிரிவினையை வளர்க்கின்றனர். இதில் அரசியல்வாதிகளிலும் பார்க்க புத்த சங்கங்களே கூடிய பங்கை வகிக்கின்றன. புத்த மதத்தைப் பின்பற்றிய தமிழ் மக்கள் பின்னர் பல காரணங்களால் அம்மதத்தைக் கைவிட்டு மீண்டும் சிவனையும் முருகனையும் வழிபடத் தொடங்கிவிட்டனர். ஆனால் இவை யாவற்றையும் மறைத்து விட்டு இலங்கைத் தீவு முழுமையும் சிங்கள பௌத்த மக்களுக்குச் சொந்தம் என்ற அடிப்படையில் இன வேற்றுமையை வளர்த்து வந்தனர்.



( 19ஆம் பக்கம் பார்க்க )

# உண்மையைத் தேடுகிறோம்... நடந்தது என்ன?

## யாழ்.பல்கலைக்கழகம் பற்றியது

எம்.அனுசரண்

சென்றவாரம் மருத்துவ பீடத்தில் சித்தியடையாமல் விசேட சந்தர்பங்கள் வழங்கப்பட்டபோதும் அவற்றையும் வீணடித்த வயோதிப மாணவருக்குப் போராசிரியர் விக்கினேஸ்வரன் துணைவேந்தர் நல நிதியத்திலிருந்து ரூபா.4000 வழங்கப் பணித்திருந்தார் எனக் கூறியிருந் தோம் அல்லவா? அதற்கான காரணம் இப்போது வெளியிடப்பட்டுள்ளது. சென்றவாரத்தில் ஒரு நாள் யாழ். நகரப்புறத்திலுள்ள தேசியக் கட்சி ஒன்றின் அலுவலகத்தில் பேராசிரியர் விக்கினேஸ்வரனுடன் அந்த மாணவர் காணப்பட்டுள்ளார்.

துணை வேந்தர் பதவிக்கு மீண்டும் போட்டியிடும் அவருக்கு அந்த மாணவனின் சிபார்சு தேவைப்படுகிறது போலும். இதன் பின்னணியில்தான் தேர்தல் இணைக் குழுவுக்குத் துணைவேந்தர் நியமன நடவடிக்கைகளைப் பின்போடுமாறு அவர் அளித்துள்ள புகாரையும் நோக்க வேண்டும்.ஆட்சி மாற்றம் ஏற்பட்டால் அது தான் மீண்டும் துணைவேந்தராக வர உதவக்கூடும் என அவர் கருதியிருக்கலாம்.

இது இவ்வாறிருக்க, 1000 சதுர ஏக்கர் பரப்பில் மூன்று பீடங்களை தன்னகத்தே கொண்டு அமைந்துள்ள கிளிநொச்சி வளாகத்தில் எழுந்துள்ள மதச் சர்ச்சையை இவ்வாரம் நோக்குவோம்.

கிளிநொச்சி வளாகத்தின் விவசாய பீடத்தின் பிரதான கட்டடம் புலிகளின் காலத்தில் தமிழ்ப் பல்கலைக்கழகத்துக்கென அமைக்கப்பட்டது. அத்துடன் அவர்களின் ஊடகக் கற்கை நிலையமும் அங்கு பிறிதொரு கட்டடத்தில் அமைந்திருந்தது. இதனருகில் ஒரு மரநிழலில் பிள்ளையார் சிலையொன்று காணபபட்டது. அக்காலத்தில் காட்டுக்கு வேட்டையாடவும், விறகு வெட்டவும் செல்பவர்கள் இப்பிள்ளையாரை வழிபட்டே செல்வர் எனக் கூறப்படுகிறது. புலிகள் காலத்தில் இப்பிள்ளையாருக்கு குந்தகம் ஏதும் விளைவிக்கப்படவில்லை. இராணுவம் இவ்விடத்தைக் கைப்பற்றிய பின்னரும் பிள்ளையாருக்கு ஏதும் நிகழவில்லை ஆனால் இராணுவம் கைப்பற்றிய பின்னர் தமது வழிபாட்டுக்கென புதிதாக புத்தர் சிலையொன்றை நிறுவியிருந்தது. கிளிநொச்சி வளாகத்துக்கென இந்நிலப்பரப்பும் கட்டமும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு கையளிக்கப்பட்டபோது தாம் அமைத்து வழிபட்ட புத்தர் சிலையை தம்முடன் கொண்டு செல்லவே இராணுவம் விரும்பியிரந்தனராம். ஆனால் அப்போது விவசாயபீடாதிதியாக இருந்தவர் இங்கு கற்கவரும் சிங்கள மாணவர்கள் புத்தரை வழிபடுவர் எனக் கூறி தடுத்துவிட்டதாகக் கூறப்படுகிறது. யாழ்ப்பாணத்துக்கு தற்காலிகமாக இடம்பெயர்ந்திருந்த விவசாயபீடம் மீளவும் கிளிநொச்சியில்




ஆரம்பிக்கப்பட்டு மாணவர்கள் கற்கை நெறிகள் நடைபெறத் தொடங்கின. இக்காலகட்டத்தில் பொறியியல் பீடமும் ஆரம்பிக்கப்பட்டது. (தொழில்நுட்ப பீடம் அதற்குப் பின்னர் ஆரம்பிக்கப்பட்டது) ஒரு நாள் காலை புத்தபெருமானின் சிலை சேதமடைந்திருக்கக் காணப்பட்டது. அதிர்ச்சியடைந்த பல்கலைக்கழக நிர்வாகம் இப்பிரச்சினை குறித்த தீவிரமாக சிந்திக்கத தொடங்கியது.

சேதமடைந்த புத்தர் சிலையை ஒரு அலுமாரியில் வைத்துப் பூட்டிவிட்டு, பொறியியல் பீடாதிபதி வவுனியாவுக்கு அப்பால் விரைந்து சென்று புதிய புத்தர் சிலையை சேதமடைந்த புத்தர் சிலை இருந்த அதே இடத்தில் நிர்மாணித்தார். எதிர்காலத்தில் மத சர்ச்சைகள் உருவாகாமல் இருக்க பல்கலைக்கழ நிர்வாகம் குழு ஒன்றை அமைத்து ஆராய்நதது. அந்தக் குழுவின் தீர்மானப்படி நூறு ஏக்கர் பரப்பளவிலான கிளிநொச்சி வளாத்தில் 4 ஏக்கர் பரப்பளவு 4 மதத்தினருக்குமென ஒதுக்கப்பட்டது. ஒவ்வொரு மததத்தைச் சேர்ந்தவர்களும் தமக்கென எதுக்கப்பட்ட 1 ஏக்கரில் 1/2 ஏக்கர் நிலத்தில் ஆலயத்தை அமைக்கமுடியும். அடுத்த 1/2 ஏக்கர் பொதுவான நிலப்பரப்பு. இதில் இரங்களை நட்டு வளர்க்கவேண்டும் அடுத்து வரும் 1 ஏக்கரில் 1/2 ஏக்கரில் பிறிதொரு மத ஆலயமும் அடுத்த 1/2 ஏக்கரில் மரங்களும் நடப்படட்டு இந்து, பௌத்த, கிறிஸ்தவ, இஸ்லாம் மதத்தினருக்கு இக்குறிப்பிட்ட ஒழுங்கில் நிலங்கள் ஒதுக்கப்பட்டன. இந்த நில ஒதுக்கல் இடம்பெற்ற பிரதேசத்துக்கு வெகு தூரத்துக்கு அப்பால் பழைய பிள்ளையாரும், பழைய புத்தரும் தொடர்ந்தும் அமர்ந்திருந்தனர். புதிய ஏற்பாடுகளின்படி இந்த இரு தெய்வங்களும் புதிய இடத்துக்கு கொண்டு செல்லப்படவேண்டும்.

ஆனால் அவ்வாறு நடைபெறவில்லை. பழைய பிள்ளையாரை மட்டும் இரகசியமாக இரவோடு இரவாக எங்கோ கொண்டு சென்ற பொறியல் பீடாதிபதி பழைய புத்தர் சிலையை இருந்த இடத்திலேயே விட்டுவிட்டார்.

மதவழிபாட்டுக்கென புதிதான ஒதுக்கபட்ட காணியில் பெரிய விகாரை ஒன்று வளர்ந்து வருவதாகக் கூறுப்படுகிறது. அவ்வாறே மசூதியும் விரைவாக வளர்ச்சியடைய. கிறிஸ்தவ தேவாலயமும், இந்துக் கோவிலும் வெறுமனே சிலுவையும், பிள்ளையார் சிலையுமாகக் காட்சி அளிக்கிறது. பொறியியல் பீடத்தில் சிரேஸ்ட விரிவுரையாளராகக் கடமைபுரியும் ஒரு சிங்கள பௌத்த தீவிர சிந்தனையாளர். இவ்விகாரை கட்டுமானத்தில் முக்கிய பங்கு வகிக்கிறார். பழைய பிள்ளையாரை இரவோடு இரவாக கடத்திய பொறியியல் பீடாதிபதி இநத சிங்கள பௌத்த இனவாதியில் செயற்பாட்டை ஊக்குவித்து வருவதாகவும் கூறப்படுறிது.

இதனால் சினமடைந்து போயுள்ள ஒரு சில விரிவுரையாளர்களும், மாணவர்களும், ஊழியர்களும் பழைய குளத்தடி பிள்ளையார் இருந்த இடத்தில் விநாயகர் சதுர்த்தித் தினத்தன்று பொங்கலிட்டு வழிபட ஆரம்பித்துள்ளனர். இவர்கள் விநாயகர் சதுர்த்தியை கொண்டாட ஆரம்பித்தவுடன்தான் பல்கலைக் கழகத்தின் தகுதிவாய்ந்த அதிகாரி பேராசிரியர் கந்தசாமி விழிப்படைந்து நடடிவடிக்கை எடுக்க முற்படுகிறார். பழைய புத்தரையும், பழைய பிள்ளையாரையும் Relogious hub எனப்படும் மத வழிபாட்டுக்கென ஒதுக்கப்பட்ட பிரதேசத்துக்கு கொண்டுசெல்ல முயல்கிறார். ஆனால் தீவிரமத சிந்தனையாளர்கள் இருபுறமும் உருவாகிவிட்ட நிலையில் இது தவறான காரியமில்லை மறுபுறத்தில் Relogious hub உருவாக்கப்பட்டபோது விதிக்கப்பட்ட அளவுப் பிரமாணங்களை மீறி விகாரை பிரமாண்டமாக வளர்ந்துவிட்டது. முல்லைதீவுக்கு பிறகு மத சர்ச்சை உருவாகப்போகும் அடுத்த இடமாக கிளிநொச்சி வளாகம் அமையப்பெறலாம். இவ்வாறு நடந்தால் அதற்கான முக்கிய காரணமாக பொறியியல் பீடாதிபதியே விளங்குவார்.



# அறிவியல் கல்விக்கு அடித்தளமிட்டவர் ஜோன் டூயி

இரா.நடராசான்

உலகெங்கிலும் கல்வி முறையில் புரட்சிகர மாற்றங்களை விதைத்து வேரூன்ற வைத்து மனித நேய கல்விக்கு வித்திட்டு அதற்காக இறுதி வரை போராடியவர்களைப் பற்றி இத்தொடரில் பார்த்து வருகிறோம். கல்வி என்பதே மதபோதனையாக இருந்த காலகட்டத்திலிருந்து உலகக் கல்வியை மீட்டு போதனைக் கல்விக்கு மாற்றாக புதிய அறிவியல் கல்வியை ஒரு மாற்று கல்விப்பாதையாக முன் மொழிந்து உலகெங்கும் கல்வி என்பது (தவிர்க்க இயலாமல்) ஒரே பாடத்திட்டமாக மாறிய நிலை இன்று உள்ளதென்றால் அதற்கான முதற் போராளி தான் ஜோன் டூயி

சார்லஸ் டார்வின் முன் மொழிந்த பரிணாம வளர்ச்சிக் கோட்பாட்டை பிடிவாதமாய் ஆதரித்த முதல் அமெரிக்க தத்துவ அறிஞர் ஜோன் டூயி என வரலாற்றாளர்கள் அவரை போற்று கின்றனர் கற்பித்தல் - கற்றல் செயல்முறையில் பயிற்சி மாறுதல் (எனும் பதத்தை அறிமுகப்படுத்தியவர் அவர் அது குறித்து இக்கட்டுரையில் வேறுறொரு இடத்தில் பார்க்க இருக்கிறோம் . ஜோன் டூயி கல்வி கோட்பாட்டியலை முதலில் நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்

நமது கல்வி முறையின் வரலாறு இருக்கிறதே அது பல வகைப்பட்ட துரோகங்களால் பின்னப்பட்டது. மனிதன் ஒரு மாணவனாகவோ மனித குழந்தையாகவோ தன்னை உணர்வதற்கு முன்னாலேயே ஒரு இந்துவாக் கிருத்துவனாக இசுலாமியனாக உணர வைக்கப்டுகின்றான். வெறும் மதமல்ல. பிறகு வரும் சாதிய அடுக்குகளையும் நாம் உதிர்ப்பதற்கில்லை. பள்ளி கல்வி தொடங்கும் முன்னரே மத போதனை தொடங்கி விடுகிறது.

எனவே கல்வியளிப்பதை தனது கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள மதம் என்றுமே தவறியதில்லை. உலகிலேயே சிறந்தது நமது ஆச்சிரமக் கல்வி தான் என்றும் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் சொல்லிக் கொடுத்ததை இன்றய கல்வி வழங்க முடியாது என்றும் வாதிடும் பேரறவுப் பெருந்தகைகளை நாம் பார்க்கிறோம். ஆசிரமக் கல்வி மனு தர்ம மத போதனை தான் என்பதையும் திண்ணைப் பள்ளி என்பது அது போட்ட குட்டிகளில் ஒன்று தான் என்பதையும் திரும்ப திரும்ப நிரூபிக்கத் தேவையில்லை.

ஆசிரமக் கல்வி வெகுஜன கல்வி அல்ல சமூகத்தின் ஒரு மேற்பட்ட சாரார் அனுபவித்தது திண்ணைப் பள்ளி தான் இருக்க வேண்டும் என்று கேட்டால் போதும் அதன் உண்மை நோக்கம் முகமூடி கிழிந்து நம் முன் ரத்தப் புன்னகை புரியும் இதை இன்னொன்று விதமாகவும் அணுகலாம் நமது வீட்டின் உள்ளே ஒரு சிறு சமூக ஆராய்ச்சி செய்வோம். நமது அப்பா எந்த வகுப்பு வரை (அல்லது கல்லூரி படிப்பு) படித்தார். அம்மா? சரி அம்மா பள்ளிக்கூடம் போனவர் என்றால் எதுவரை? பாட்டி, பாட்டன் அவர்கள் பள்ளிக்கூடம் போயிருக்கிறார்களா? வீட்டுக்குள்ளிருந்து கல்வி குறித்த மனித நேயப் போராட்டத்தின் வரலாறு உங்களை மோசமாக தாக்கி விடும் உண்மை நிலை என்ன ? தாயும் தந்தையும் ஓராளவு படித்தார்கள். தாத்தா கற்க அனுமதிக்கப்பட்டார். ஓரளவு வரை அதுவும் நமது சாதி மதம் சம்மந்தப்பட்டது பாட்டி படித்தார்களா படிக்கவில்லை என்றால் ஏன் படிக்கவில்லை? படித்தார் என்றால் எதுவரை? எங்கே ?

அன்று கல்வி என்பது ஜனநாயகப் படுத்தப்பட வில்லை என்பதை மேற்கண்ட சிறு கள ஆய்வு (நீங்கள் எப்படிபட்ட குடும்பத்தை சேர்ந்தவராக இருந்தாலும்) உங்களுக்கு நேரடி நிரூபணமாக கண்முன் நிற்பதை காண்கிறோம் இன்றைக்கு செயல்பட்டு வரும் ஒரு பள்ளியை கொஞ்சம் அருகே சென்று நோக்குவோம். இன்றைய கல்வியின் போதனா முறையிலும், செயற்பாட்டிலும் நமக்கு எவ்வளவோ மாற்றுக் கருத்துக்கள் இருக்கலாம் வெறும் ஏட்டு சுரக்காய் என நாம் எள்ளி நகையாடலாம். இன்றையக் கல்வி ஒரு வன்முறை என்று மனித உரிமை அமைப்புகள் முழக்கமிடலாம்

ஆனால் இன்றைய கல்வி ஒரு வடிவமாக தன் மட்டில் நம் அனைவரையும் சம அறிவு வாய்ப்புள்ள மனிதர்களாகக் கருதுவதை பார்க்கின்றோம். இங்கே பெண் என்றால் ஒரு கல்வி, ஆண் என்றால் ஒன்று இன்ன சாதி இன்ன மதத்திற்கு ஒன்றென பாடப்பொருள் இல்லை. தாம் பொதுவான உலகளாவிய ஒரு பாடப் பொருளினால் (syllabus) இணைக்கப்பட்டுள்ளோம் பள்ளிச் சீருடையிலிருந்து பல பொது அம்சங்கள் நமது வேற்றுமைகளை களைந்து ஒரு பொதுவுடமை சூழலில் சிந்தனையை கல்வி நோக்கி செலுத்த ஏதுவாக ஆக்கப்பட்டுள்ளதை பார்க்கிறோம். வேறு எத்தனை குறைபாடுகளும் இருந்தாலும் மெக்காலே கல்வி முறை எனப்படும் இந்த கல்வியின் பெரிய பலம் மேற்கண்ட தனிமனித அடையாள உதிர்ப்பில் அடங்கியுள்ளதைக் காண்கிறோம்

உண்மை என்னவென்றால் இது மெக்கலோ கல்வி முறை அல்ல. இது ஜோன் டூயியின் கல்வி முறை ஆகும். இந்திய ஆட்சியை பிரித்தானியர் தக்க வைத்திருந்த காலத்தில் மெக்காலே உலகில் தொழிற் துறை நாடுகளில் பின்பற்றப் பட்ட அறிவியல் ரீதிக் கல்வியான டூயி கல்வி முறையை இந்திய தொழில்சால் சமூகத்தை உருவாக்க ஒரு பயனீட்டும் நோக்கில் இங்கே புகுத்தினார் என்பதே வராலாற்று உண்மை

ஜோன் டூயி நேர்வழியாளர்கள் (Pragmatists) எனப்பட்ட தத்துவ பள்ளியை சார்ந்தவராக முதலில் அறியப்பட்டிருந்தார். 1859இல் அமெரிக்க வெர்மாண்ட் மாகாணத்தில் பார்லிஸ்டனில் அவர் பிறந்தார். பல்கலைக்கழகத்தில் உளவியல் தத்துவ இயல் பயின்று 1879இல் தனது இருபதாவது வயதில் சேர்ந்து ஆரம்ப நிலை பள்ளிக் கூடம் ஒன்றில் ஆசிரியராக பென்சில்வேனிலாவில் மூன்றாண்டுகள் கழித்தார். அந்த வேலையில் ஈடுபட்ட போது அப்போதிருந்த பழைய கல்வி அமைப்பின் மீதும் அது சார்ந்திருந்த வாட்டிகான் அரசியல் மீதும் கடும் சினமுற்று வேலையை துறந்தார்.

ஜோன் டூயியை தனது தத்துவ ஆசான்களில் ஒருவராக ஏற்கும் நோம்சோம்ஸ்கி, இந்த கால கட்டத்தில் கெகல் முதல் இமானுவேல் காண்ட் வரை அனைவரையும் படிக்க தேர்ந்ததால் டூயி அப்போது நிலவிய மதசார்ந்த கல்வியை ஒரு சமூக நோயாக பார்க்க முடிந்ததாக கூறுகிறார்.

திரும்பவும் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்ட ஆய்வாளராக அவரை வாழ்க்கை விரட்டியிருக்க வேண்டும். தனது பள்ளியும் சமூகமும் (the School and the society(1903)) புத்தகத்தில் ஜோன் டூயி எழுதுகிறார் முற்றிலும் பாசாங்கு இல்லாத அப்பாவிக் குழந்தைகளின் விழிகளை பார்த்தேன் அது யாரும் வந்து படம் வரைய காத்திருக்கும் வெற்று சுவராக இருந்தது மத துவேசத்தை தவிர இவர்கள் எதையும் அதில் பதிய விடப்போவது இல்லை

பிரச்சினையின் சாரத்தை மட்டுமே சுட்டிக்காட்டி விட்டு ஜோன் டூயி ஓடி ஒளியவில்லை, மெக்சிகன் பல்கலைக்கழகத்தில் தத்துவ பேராசிரியராக இருந்தபடியே புதிய அறிவியல் சிந்தனை சார்ந்த ஆரம்பக்கல்வி, பள்ளிக்கல்வி, அதை தொடந்து வரும் உயர் கல்வி என தனது 12 புத்தகங்கள் மூலம் உலக கல்வியின் தரத்தை மேம்படுத்தினார் முற்போக்கு கல்வி என அதற்கு அளிக்கப்பட்ட பெயர் வெறும் பாசாங்கு அல்ல என்பதை அடுத்து வரும் சம்பவங்கள் காட்டின. விரைவில் எப்படி சிந்திக்கிறோம் (How we think 1990) தத்துவத்தில் டார்வினின் ஆளுமை (Influence of Democracy on philosophy) கல்வியியல் ஜனநாயகம் (Democracy in Education) போன்ற நூல்களும் அவை காட்டிய வழிமுறைகளும் பெரிய மாற்றத்தை கொண்டு வந்தன.

சமூக சிந்தனையில் மிக ஆழமான சிந்தனை மாறு பாட்டை அவரது வழி முறைகள் தூண்டின பெண் கல்வி முதல் பொது கல்வி வரை அவரது செயல் பாடுகள் பலரையும் திறந்த மனதோடு விவாதிக்க தூண்டிய அமெரிக்க அரசு நூறு ஆண்டு கால போராட்டத்திற்கு பிறகுதான் பெண்களுக்கு வோட் உரிமை வழங்கியது 1941 வரை பெண்களை கால் செறிகளில் நுழைய விடாத சூழலே இருந்தது. 1915இல் ஜோன் டூயியின் நாளைய பள்ளிகள் (The School of tomorrow) வெளிவந்த போது அது ஏற்படுத்திய தாக்கம் உலக அளவினதாக இருந்தது உடனடியாக பிரஞ்சு அரசாங்கம் சேர்ஜ்சுகளிடமிருந்து பள்ளிக் கல்வியை பிடுங்கி அரசுடமையாக்கும் முதல் படியை எடுத்தது வைத்ததது.

1941 இற்குள் உலகின் 27 நாடுகள் கல்வியை அரசின் கடமைப்பட்டியலில் சேர்த்தன. மனிதனின் (சமுதாயத தன்மை) குறித்தே ஜோன் டூயி குறி வைத்து இயங்கினார். 20ஆம் நூற்றாண்டில் ஈடு இணையற்ற அறிவியல் வளர்ச்சிக்கு கல்வி தான் முழுக்காரணம். அது வழங்கிய தகவல் பரவல் வரலாற்றில் ஒப்புமை இல்லாத சாதனை அதற்கு காரணியாய் அமைந்தது. அதை ஜனநாயக்கப் படுத்திய நிகழ்வு தேவாலயங்கள் மற்றும் மதங்களின் கையிலிருந்த நேரடி ஆளுகையிலிருந்து பள்ளிக் கல்வி பிடுங்கப்பட்டதை நாம் இப்படி தான் அணுக வேண்டும் அதற்கான பங்களிப்பிற்காக ஜோன் டூயி நாம் போற்றுவதற்கு கடைமைப்பட்டுள்ளோம் வற்றிக்கானின் ரகசிய கொலைப்பட்டியலில் 7 வருடம் அவரது பெயர் இருந்ததில் ஆச்சரியமேயில்லை.

ஜோன் டூயி கல்வி சார்ந்த சிந்தனைகளை கீழ் கண்ட வாறு பட்டியலிடலாம் -

கல்வி கற்கும் ஒரு மனிதன் வரலாற்றில் வைத்து தன்னை உணர வேண்டும் பள்ளி என்பது கற்றலை கற்பிக்குமிடம் எப்படி கற்பது என்பதை அறியும் ஒருவர் வாழ்நாள் முழுவதும் கற்றலை தொடர வேண்டும். உண்மையான கல்வி பள்ளியை விட்டு



நாம் வெயியேறிய பிறகே நடக்கிறது. கல்வி கற்க கற்ற ஒருவரே விடுதலை அடைந்த மனிதன் சமூகம் என்பது ஒரு தனி மனிதன் உருவாக்கம். அதே போல தனி மனிதனும் அச் சமூகத்தில் ஒருவிளைவாக்கம் கல்வி முறையில் அறிவியலுக்கும் பெரிய முக்கியத்துவம் வழங்க வேண்டும் கல்வியில் கற்றலை தனது இடையறாத வாழ்வின் பணிகளில் ஒன்றாக கருதுகிறவன் மட்டுமே இறந்த பிறகும் எனக்கு பிறகு வாழ்கிறவர்களுக்கு நம்பிக்கையை விட்டு செல்வான் சமுதாயத்திடம் செல்ல வேண்டும் எனும் திசை மார்க்கத்தையே தருவதே கல்வி. அதனிடமிருந்து விலகி தனிமையில் சுகம் காண்பதை ஆண்மீக சுய தேடலை அளிக்க முயலும் ஒரு கல்வி உண்மை மனிதனை முழு மனிதனை முடவனாக்கி இடம் பெயர லாயக்கு அற்றவணாக்கி விடுகிறது.

இச் சிந்தனைகள் ஊடாக கற்பித்தல் - கற்றல் செயல் முறையில் பயிற்சி காணுதல் (Transer of Learning ) என்பதை அவர் அடைந்தார் கல்வி என்பது ஆரம்பக் கல்வி நடுநிலை பள்ளிக் கல்வி உயர் நிலை பள்ளிக் கல்வி கல்லூரி அளவிலான உயர் கல்வி என கற்றலின் தொடர் மாறுதலால் (transfer) இருப்பதை முதலில் சுட்டிக் காட்டி நமது கல்வி முறையின் உலகளாவிய படி நிலைகளை சாதித்த ஜோன் டூயி இரண்டாம் உலக போரின் போது அதை எதிர்ததற்காக அமெரிக்க அரசால் சிறை வைக்கப்பட்டு பல விதமான அவமதிப்புகளுக்கு ஆளாகி சீனாவில் சில காலம் கல்வி மாறுபாடுகளில் தன்னை அர்ப்பணித்தார். உலக சிந்தனை மரபான கார்னல்வெஸ்ட் ஹீஷி மற்றும் நோம் சோம்ஸ்கி என தனது வழி வந்த மாமணிகளை தந்த ஜோன் டூயி 1952இல் காலமானார்.

நன்றி : புத்தகம் பேசுது 2009

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

# வீட்டுக்குள் நுழைந்துள்ள...

இந்தியாவில் பின்னர் படித்தவர் என்றும் கூறுவார்.இவர் வடமராட்சியை விட்டுச் சென்றதற்கு என்ன காரணமோ தெரியவில்லை? ஆனால் போராட்ட காலத்தில் இவரது தகப்பனார் இயக்கத்துக்கு எதிரான செயல்களில் ஈடுபட்டதனால் எச்சரிக்கைத் தண்டனை பெற்றவர் என்று பலரும் முகநூ லில் பதிவிட்டுள்ளனர். அதற்கு எவரும் மறுப்பு தெரிவிக்கவில்லை. எடுத்ததற்கெல்லாம் மறுப்பும் கண்டனமும் தெரிவிக்கும் எவரும் இந்தப்பதிவுக்கு பதில் பதிவு போடாதது அதனை உறுதி செய்கிறது. அடுத்து அவர் கொழும்பில் படித்து விட்டு இந்தியாவுக்குச் சென்றுள்ளார். எனவே இவருக்கு அங்கும் ஏதாவது டெல்கி மட்ட அரசியல் தொடர்புகள் இருக்குமோ என்று ஐயப்பட வேண்டியுள்ளது. இரண்டாயிரத்து ஒன்பது வரை யாரென்று தெரியாமல் இருந்த சுமந்திரன் இரண்டாயிரத்துப் பத்தில் தமிழர்களின் அரசியலுக்குள் நுழைகிறார். அப்படியானால் அவர் அது வரை அரசியிலில் இல்லாமல் இருந்தாரா அல்லது வேறு ஏதாவது கட்சியில் இருந்தாரா என்ற கேள்வி எழுகிறது. இதை ஆய்வு செய்தபொழுது 2010 இல் ஐக்கியதேசியக் கட்சியின் தேசியப் பட்டியலில் இவரது பெயர் இருந்தது தெரியவந்ததாக உறுதிப்படுத்தப் பட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன. இதன்படி உண்மையில் அவர் ஐக்கியதேசியக் கட்சியின் உறுப்பினர், ஆனால் திட்டமிட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குத் நுழைந்துள்ளார் என்பது தெரிகிறது. சம்பந்தனும் இதைத் தெரிதுகொண்டு தான் பின்னர் கூட்டமைப்புத் தேசியப் பட்டியலில் இவரை இணைத்து நாடாளுமன்ற உறுப்பினராக்கி உள்ளார் என்பது புலனாகிறது. ஐக்கியதேசியக் கட்சியின் நோக்கங்களைத் தமிழ்த் தேசியக் கட்சியினூடாக நடைமுறைப்படுத்த இவர் கூட்டமைக்குள் புகுந்துள்ளார் என்பது தெரிகிறது.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பாதுகாப்பிற்காக காவற்றுறையினர் தான் இருக்கின்றனர். ஆனால் சுமந்திரனுக்கு மட்டும் சிறப்பு அதிரடிப்படையினரின் பாதுகாப்பு எதற்காக? தமிழ் மக்களின் உறுப்பினர்களுக்கு தமிழ் மக்களிடம் வருவதற்குப் பாதுகாப்புத் தேவையா..? அப்படி என்றால் தமிழினத்திற்கு எதிரான செயல்பாடுகளைக் கொண்டவரா இவர். அப்படியானபடியால் தான் அவருக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமென்றால், புலிகளும் இல்லை சிவகுமார்களும் இல்லாத நிலையில் இவ்வளவு பாதுகாப்பு எதற்கு.? உண்மையில் இவர் ஒரு பெரிய தலைவர் என்ற உளவியல் எண்ணத்தை மக்களிடம் காட்டுவதற்காகவே இவ்வேறபாடு ஆகும்.

இவர் தனக்கென ஒரு வட்டத்தைக் கட்சிக்குள் ஏற்படுத்தியுள்ளார். அதே நேரம் சேனாதிராசாவோ வேறு எவருமோ கட்சியின் நிலை பற்றிப் பேசமுடியாத ஒரு நிலையை ஏற்படுத்தியுள்ளார். தான் சார்ந்த ஐதேக வின் கொள்கையான ஒற்றை ஆட்சியை எவ்வாறு திணிப்பது என்பதில் சுமந்திரனின் பணி நுட்பமானதாகும். ஒற்றை ஆட்சி என்ற சிங்களச் சொல்லை மூன்று மொழிகளிலும் யாப்பில் போட்டுவிட்டு 'ஒற்றை ஆட்சி' ,யூனிற்றறி என்ற தமிழ் ஆங்கிலச் சொற்களை நீக்கிவிட்டு ஒருமித்த என்று போட்டு தமிழினத்தை ஏமாற்றும் பெரிய கைங்கரியத்தில் ஈடுபட்டுள்ளார் சுமந்திரன். 'எக்கியராஜ்ய' என்பது ஒற்றை ஆட்சி என்பது அனைவருக்கும் தெரியும் ஆனால் இதை முற்றாக மறைத்து ஐதேகவின் திட்டத்தை அக்கட்சியை சாராத ஒருவர் நிறைவேற்றுவாரா?.

ரணிலின் அண்மைக்கால வடபகுதிக்கான பயணத்தின் பொழுது அவருடன் ஒன்றாகப் பயணிப்பதும் அவரது கூட்டங்களில் ரணிலின் உரைகளை மொழிபெயர்ப்பதும் சுமந்திரன் தானே. அது மட்டுமா பிரதமர் பங்குபற்றும் தமிழ் மண்ணின் அரசியல் நிகழ்வுகள் அனைத்திலும் பங்குபற்றுகிறார் . ஊடகவியலாளர்களுடனான சந்திப்புகளிலும் ரணிலுடன் கூட இருக்கிறார் சுமந்திரன். இவர் ததேகூ வின் உறுப்பினரா அல்லது ஐதேகா வின் உறுப்பினரா? என்று ஆராய்ந்தால் ஐதேக உறுப்பினர் என்பதாலேயே ரணிலுடன் அவ்வாறு அனைத்து நிகழ்ச்சிகளிலும் தமிழ் மண்ணில் கூடித் திரிகிறார். வேறு கட்சிக்காரர் என்றால் இவ்வாறு ஓட்டி நடமாட ரணில் அனுமதிப்பாரா? என்று சிந்திக்க வேண்டியுள்ளது. உலக வரலாறில் எங்குமே காணாத நிகழ்வே இந்த ரணில் சுமந்திரன் கூட்டு.

இப்பொழுது சனாதிபதித் தேர்தலிலும் முதலில் சஜித்துக்கு தமிழ் மக்கள் வாக்களிக்க மாட்டார்கள் ரணிலுக்கு வாக்களிப்பார்கள் என்று கூறி சனாதிபதியாக ரணிலைக் கொண்டுவர முயற்சித்தார். ஆனால் சஜித்தின் திட்டம் வெற்றி பெற்றதால் சங்கடப்பட்ட சுமந்திரன் எப்படியும் தான் சார்ந்த ஐதேக வெற்றியடைய வேண்டுமென்ற காரணத்தினால் மாணவர் ஒன்றியக் கோரிக்கைகளை முன் வைக்காமல் யாரால் அதிக பாதிப்பு இல்லையோ என்று பார்த்து அவருக்கு ஆதரவு என்று புதிய திட்டத்தை போட்டுள்ளார். இதன் மூலம் தமிழ் மக்கள் எதிர்பார்த்த மாணவர்களின் கோரிக்கைகளைக் குழி தோண்டிப் புதைத்து விட்டார்.

தந்தை செல்வாவால் தமிழ் மக்களின் உரிமைக்காகத் தொடங்கப்பட்ட தமிழரசுக்கட்சி. பின்னர் தலைவர் பிரபாகரனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக மக்களிடம் கொண்டு செல்லப்பட்ட அமைப்பு இன்று சுமந்திரனின் ஊடுருவலால் சமஷ்டியை விட்டு ஒற்றை ஆட்சிப்பௌத்த நாட்டை தமிழ் மக்களை ஏற்றுக்கொள்ள வைக்கும் திட்டம் மிகவும் நேர்த்தியாக ஐக்கியதேசியக் கட்சியினால் நிறைவேற்றப்படுகிறது என்ற ஆய்வாளர்களின் கூற்றுக்கள் உறுதி செய்வதாகவே அமைகிறது என்ற மக்களின் சந்தேகம் வலுப்பெறவே செய்கிறது.

( 07ஆம் பக்கத் தொடர்ச்சி )

# காணாமல் போனோரும்...

யுத்தம் இடம்பெற்ற போது இராணுவத்தில் கடமையாற்றிய உயர்நிலை அதிகாரிகள் மற்றும் சிப்பாய்கள் என சுமார் 4000 இற்கும் அதிகமானோர் இன்றும் காணாமல் போயுள்ளதாக அவர் குறிப்பிட்டிருந்தார்.

யுத்தக் காலத்தில் பலர் அடையாளம் தெரியாத அளவிற்கு சிதைவடைந்து உயிரிழந்ததாகவும், அவ்வாறு உயிரிழந்தவர்களை உறவினர்கள் அடையாளம் காணாமையினால், இன்றும் அவர்கள் காணாமல்போன பட்டியலில் உள்வாங்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

யுத்தம் இடம்பெறுகின்ற காலப் பகுதியில் இவ்வாறான விடயங்கள் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட உறவினர்கள் மீள திரும்பவில்லை என வடக்கிலுள்ள குடும்பங்கள் கூறுகின்றன. அவ்வாறாயின், அந்த குடும்பத்தினர் பொய் கூறுகின்றார்களா? என இதன்போது கோட்டாபய ராஜபக்ஷவிடம் வினவப்பட்டது.

"ஆம், சிலர் அவ்வாறு கூறுகின்ற னர். அது ஒரு குற்றச்சாட்டாகும். இந்த விடயம் தொடர்பில் நாம் விசாரணைகளை நடத்தினோம். ஆணைக் குழுக்களை நியமித்தோம். ஆனால் குறிப்பிட்ட நபர்கள், குறிப்பிட்ட தேதிகளில், குறிப்பிட்ட இடத்தில் காணாமல்போயுள்ளதாக யாரும் கூறவில்லை.' என கோட்டாபய ராஜபக்ஷ இதன்போது குறிப்பிட்டார்.

பரணகம ஆணைக்குழு காணாமல்போனோர் தொடர்பான தகவல்களை வெளியிட்டதை, ஊடகவியலாளர்கள் இதன்போது கோட்டாபய ராஜபக்ஷவிடம் சுட்டிக்காட்டினர். அவ்வாறு கிடையாது என கோட்டாபய ராஜபக்ஷ ஊடகவியலாளர்களிடம் மீண்டும் பதிலளிக்க, ஊடகவியலாளர்கள் பரணகம அறிக்கையில் காணாமல் போனோர் தொடர்பான தகவல்கள் வெளியிடப்பட்டதாகக் கூறினார்கள்.

யுத்தம் மற்றும் யுத்தத்திற்கு முன்னதான காலப் பகுதியில் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தினால் கடந்த ஆண்டு வெளியிடப்பட்ட ஆண்டறிக்கையில், காணாமல் போனோர் தொடர்பான தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.



இந்த ஆண்டறிக்கையின் பிரகாரம், 2018ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15ஆம் தேதி வரையான காலப் பகுதிக்குள் மாத்திரம் 14,641 ஆவணங்கள், காணாமல் போனோர் தொடர்பில் தமக்கு கிடைத்துள்ளதாக அந்த அலுவலகத்தின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையிலுள்ள அனைத்து மாவட்டங்க ளிலிருந்தும் இந்த முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்த ஆவணங்களை விடயத்திற்கு பொறுப்பான அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டு, அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் ஓமந்தை சோதனை சாவடியில் வைத்து இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்ட, யுத்தத்துடன் தொடர்புபடாத தமது உறவுகளை ஒப்படைக்குமாறே தாம் கோரி வருவதாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர். தமது உறவினர்களை தாம் இராணுவத்திடம் ஒப்படைத்தமை உண்மை எனவும், ஆனால் கோட்டாபய ராஜபக்ஷ இன்று உண்மைக்கு புறம்பான கருத்துக்களை முன்வைத்து வருவதாகவும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

# பிள்ளை சுமத்தல் என்னும் பேரனுபவம்: ச.விசயலட்சுமியின் உயிர்ப்பு

## எழுதும் பெண்களும் எழுதப்படும் பெண்களும் - 18


விசயலட்சுமி

மனித வாழ்வின் அனுபவங்களில் பொதுவான அனுபவங்களைப் பொது நிலைப்பார்வையில் எழுதுவதைத் தாண்டிப் பெண்ணெழுத்தாக முன்னிறுத்த விரும்புபவர்கள் பெண்ணுக்கே உரிய அனுபவங்களைத் தேடிக் கண்டடைந்து பதிவுசெய்கிறார்கள். அப்படித் தேடிக் கண்டடைந்தில் முதன்மையாக இருப்பது பெண்ணின் உடல். பெண்ணின் உடல் ஆண்களால் விதம் விதமாக வருணிக்கப்பட்டும் புனையப்பட்டும் கவிதைகளாக்கப்பட்டுள்ளன. அப்புனைவுகளிலும் வருணனைகளிலும் முன்வைக்கப்பட்ட பெண் உடல் ரசிக்கத்தக்கதாகவும் மாயாஜாலங்கள் நிரம்பிய போதையூட்டும் ஒன்றாகவும் முன்வைக்கப்பட்டுள்ளன. அதனை மறுதலித்தே பெண்கவிகள் தங்களின் கவிதைகளில் பெண் உடலை வேறுவிதமாக மாற்றி முன்வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதன் நீட்சியாகப் புனைகதைகளிலும் பெண் உடல் வேறுவிதமாக எழுதப்படுகிறது. அப்படி எழுதப்பெற்ற கதையாகச் ச.விசயலட்சுமியின் உயிர்ப்பு கதையைச் சொல்லலாம்.

பெண்ணுக்கே உரிய தனித்த அனுபவமாக அவர் தேர்வு செய்து முன்வைக்கும் வினை ஆணால் உணர முடியாத ஒன்று. இயல்பூக்கம் உள்ள ஒரு பெண்ணுடல் கருவைச் சுமப்பதையும், பிள்ளையாகப் பெற்றுக்கொள்வதையும் பெண்ணுக்கே உரிய அனுபவமாக வைக்க விரும்பும் ச.விசயலட்சுமி, கருவைத் தாங்கிய பெண்களின் இரவுகளை விரிவாக எழுதுகிறார். மற்ற நாட்களில் எல்லாருக்குமேயான இரவாக - இருளும் வெளிச்சமும் கொண்ட இரவாக இருந்தைத் தாண்டிக் கருவைச் சுமக்கும்போது அது தந்த அனுவங்களை எழுதும்போது இதுபோன்ற எழுத்தை ஆணொருவர் எழுத முடியாது என்பதை உறுதியாகச் சொல்ல முடிகிறது. ஆணொருவரால் எழுத முடியாத அந்த எழுத்தே பெண்ணெழுத்தின் சிறப்பு வெளிப்பாடு.

உயிர்ப்பு (காளி,2018, பாரதி புத்தகம் பேசுது வெளியீடு) என்ற தலைப்பிட்ட கதை இப்படி முடிகிறது. கருவில் சுமந்து பிள்ளையாகப் பெற்றெடுத்த அந்தப் பெண்ணின் கூற்றாக வரும் சொற்கள் இவை:

இது என் உடல். பெரும் அதிசயங்களை மாயாஜாலத்தோடு ஒப்பிட முடியாத, ஆற்றலைக் கொண்டு இருக்கிற உடல். இன்று பெருக்கெடுத்து நீர்மமாய் வழிந்து கொண்டிருக்கிறது

இன்னும்... இன்னும்... இன்னும்... எனும் மருத்துவரின் குரலை இடையீடு செய்து வீலென அலறிய சத்தத்தோடு தூக்கிக் காட்டினர். ஆதங்கத்தோடு பார்த்தேன். அந்த இரவிலும் விடியலின் வெளிச்சம் குருதி வாசனையோடு மெல்ல பரவியது.

பிள்ளையைச் சுமக்கும் நாட்கள் முழுவதும் இரவாகவே கதையில் எழுதப்பெற்றுள்ளன. கதையில் எழுதப்பெற்ற ஒரே பகல் அந்தக் குழந்தை பிறந்த அந்தத் தருணம்தான்.

மேடிட்ட என் வயிற்றில் வரியோடிக் கிடக்கிறது. அவ்வப்போது நமைச்சல் காணுகிறது. கொஞ்சம் எண்ணையை எடுத்து தேய்த்து ஆசுவாசப் படுத்திக் கொள்கிறேன். அம்மா பக்கத்தில் இருந்தால் நன்றாக இருக்கும். என்னைத் தவிர எல்லோரும் உறங்கிக் கொண்டிருக்கின்றனர். வயிற்றில் துள்ளிக்குதித்துக் கொண்டிருக்கிற குழந்தையை ஆறுதலாய் வருடிவிட, அமைதியாய் பூனைக் குட்டியைப் போல அடங்கிவிட்டது

வயிற்றில் எடை கூடக்கூட உடம்பில் பெருத்த மாற்றம். ஆங்காங்கே சதை கூடிவிட்டது. நடந்தால் பெருமூச்சு விடுகிறேன். இரத்த அழுத்தம் சமீபமாய்க் குறைந்து இருக்கிறது. அடிக்கடி பசிக்கிறது என்பதை மீறி இரவு எனக்கும் என் குழந்தைக்குமான இணக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தது

பிள்ளையைச் சுமக்கும் அந்த நாட்களின் ஒவ்வொரு நிகழ்வும் குழந்தையோடானதாக மாறுவிடுவதுதான் தாய்மையை உணர்தல். தாய்மையை உண்ர்தல் என்பதைப் பாத்திரமாக உணர்தலாகக் கருதாமல், தாயாக இருக்கும் பெண்ணுடலை உணர்தலாகக் கருத வேண்டும். ஒரு மழைநாளை எழுதுகிறார். அதில் வெளிப்படும் மெல்லிய உணர்வுக்குள் பெரும் இழப்பும், இழப்புக்குப் பின் பெறப்போகும் பெரும் ஆர்ப்பரிப்பும் கொண்ட வரிகள் அவை:

மழை அவ்வப்போது பெய்து கொண்டிருந்தது. மழைக் காற்றின் ஈரப்பதம் தூக்கத்தை மிக இலகுவாக்கியது. இன்னும் கொஞ்சம் வேண்டும் வேண்டுமெனக் கண்கள் இறைஞ்சிக் கேட்கும்படியான தூக்கத்தை துறந்து நாட்கள் ஆகிவிட்டன.

எனது இயலாமையை என் மீது செலுத்தும் வஞ்சகத்தை நினைவூட்டும் இரவுகள் வெறுப்பின் விளிம்புக்கே இட்டுச் சென்றுவிடும். தன்னைத்தானே வெறுக்கும் அவலத்தில் கடைசி விளிம்பு அது.. மீட்டுக்கொள்ளப் போராடிப் போராடி தன்னிடம் தானே தோற்கும் இரவது.

(தொடரும்)

**அ.ராமசாமி**

# பார்த்தேன் ரசித்தேன்

## இறைவழிபாடும் ஒலிபெருக்கிகளும்

"யாழ்ப்பாணத்தில் ஒலிபெருக்கிகளால் ஒலி மாசு அதிகரித்து வருவதாகவும், மாணவர்கள், நோயாளர்கள், வாயோதிபர்கள் பலர் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள்." - இது சென்ற வருடச் செய்தியொன்று.

அறுபதுகளை ஞாபகப்படுத்திப் பார்க்கிறேன். அப்பொழுதெல்லாம்இந்த ஒலிபெருக்கிகளை எங்கே காணமுடிந்தது? கோவில் திருவிழாக் காலத்தில், ஊர்ச் சிவன் கோவிலில் சின்ன மேளக் கச்சேரிகள் இடம்பெறும்போது.ஆலமரத்தின் கிளைகளிடையே இதைக் கண்டிருக்கிறேன்.கல்யாண வீடுகளிலும் இதை உயரமாகப் பொருத்தி பாடல்களை சப்தமாக ஒலிபரப்புவதுண்டு. வீட்டுக்குத் தள்ளியிருந்த சினிமாக் கொட்டகை ஒலிபரப்பிகளும், காட்சி தொடங்கும்போதும், முடியும்போதும், சினிமாப் பாடல்களை ஒலிபரப்புவார்கள். இதெல்லாம் பழைய கதை..



இப்பொழுது கணனி உலகம்..வாழ்க்கை பல்வேறு அதிரடி மாற்றங்களை சந்தித்து வருகிறது..இனிச் சந்திக்கவும் போகின்றது. ஆலயங்களில் பூசைப்பலி ஒப்புக் கொடுக்கும்போது. "ஓர் ஊசி விழுந்தால்கூட சப்தம் கேட்கும் என்று என் பால்ய காலத்தில் பெரியவர்கள் சொல்வது காதில் வீழ்ந்திருக்கின்றது. நிஜமும் அப்படித்தான். குருவரும் லத்தீன் மொழியில்தான் பூசைப் பலியை ஒப்புக் கொடுப்பார். இந்து மதக் கோவில்களில் கொஞ்சம் "சத்தம் சந்தடி" இருந்தாலும், பக்தி மயமாக "(என்மனைவி உட்பட) இறைவழிபாடு செய்வதை நான் பார்த்து ரசித்திருக்கிறேன். தூக்குக் காவடியில் வலிமறந்து தொங்கிக் கொண்டிருப்பவர்களைப் பார்த்து எனக்கு வலிப்பதுண்டு. இறைபக்தி வலியை எப்படி ஒரேயடியாக முழுங்கி விடுகின்றது என்பதைப் பார்த்து ரசித்து வியந்திருக்கிறேன். தபசு காலங்களில் சிலுவைகளில் தொங்கி, இந்த வேதனையைத் தாங்கும் பக்தர்கள் என்னைப் பரவசப்படுத்தி இருக்கிறார்கள். எப்படி இவர்களால் முடிகிறது என்று நான் அதிசயித்திருக்கிறேன். மௌனமாக நடக்கும் ஆலய வழிபாடுகளிலும் கல்ந்து, அங்கு நிலவிய அசாதாரண அமைதியைப் பார்த்து ரசித்திருக்கிறேன்.

அன்றைய கதை இது.. இன்று நடப்பது முற்றிலும் மாறுபட்டதாக இருக்கின்றதே. 'பார்த்தேன் ரசித்தேன்' என்று சொல்ல முடியவில்லையே. எங்கள் வீட்டுத் தெற்கிலுள்ள சுவாமி அறை வாசலில் நின்றால் இந்து சமயப் பக்திப்பாடல்களின் ஒலிபரப்பு மாலை தொடங்கி விடும. ஐயர் சமஸ்கிருதத்தில் வேதம் ஓதுவது ஆரம்பித்து விடும. மேற்கு வாசல் கதவில் நின்றால், கிறிஸ்தவ பாடல்கள் ஒலிபெருக்கி ஊடாக காதில் வந்து விழும். மதகுருவின் பிரசங்கம் இடைநடுவே வரும். இதன் முடிவில் பலிப்பூசை ஒப்புக் கொடுப்பது, சேர்ந்து பாடுவது எல்லாமே ஒலிபெருக்கி ஊடாக வந்து காதை நிறைக்கும். நான் எந்த மதத்திற்கும் விரோதியல்ல. நான் கிறிஸ்தவன் எனது மனைவி இந்து, மகன் இந்து, மருமகள் கிறிஸ்தவம். எனவே எம்மதமும் எனக்கு சம்மதந்தான் என்பதை மறுபடியும் ஒப்புவிக்க வேண்டியதில்லை. வீட்டுக்கு நடுவில் நின்றால், இரண்டு வழிபாடுகளும் கலந்து, ஒரு கலவை காதில் விழும். வீட்டுத் தொலைக்காட்சியை பார்க்க முடிந்தாலும், தெளிவாக செவிமடுக்க முடிவதில்லை. இரண்டு கட்சிக்காரர்கள் வரிந்து கட்டிக் கொண்டு தேர்தல் பிரச்சாரத்தில் இறங்கிவிட்டார்களோ என்றும் நினைக்கத் தோன்றும்.

"பரமபிதாவே இவர்களை மன்னித்தருளும் அறியாமல் செய்கிறார்கள்".... என்று அண்ணாந்து பார்த்து இறைவனை வேண்டலாம் போலிருக்கும். தெற்கில் நவராத்திரி பூஜையாம். மேற்கில் மாதாவுக்கான 10 நாள் ஆராதனைகளாம். மிக நல்ல விடயம். கோவில் இல்லா ஊழ் பாழ். இறைவழிபாடுகள் இல்லையென்றால், ஊரே நாசமாகி விடும். ஆனால் எதற்கு இந்த ஒலிபரப்பும், "அடிபாடுகளும்"? எவருக்காக இந்த ஒலி பெருக்கிகளை ஆலய நிர்வாகிகள் பொருத்தியிருக்கிறார்கள்? சுமாராக 1கி.மீற்றர் தள்ளியுள்ள எங்கள் வீட்டிலேயே இவ்வளவு சப்தமென்றால், அயல் அட்டை வீடுகளின் கதி என்ன? இங்குள்ள பிள்ளைகள், தமது பாடசாலை வீட்டு வேலைகளை முழுக் கவனத்துடன்தான் செய்யத்தான் முடியுமா? மாலை 5 மணிக்கு ஆரம்பமாகும் ஒலிபரப்புகள் சுமாராக 7.45அளவில்தான் ஒரு முடிவுக்கு வருகின்றன. ஆலயச் சுவருக்குள் நடக்கும் புனிதமான இறைவேண்டுதலை ஏன் தெருவுக்கு கொண்டு வருகிறீர்கள்? ஒரு அரசியல்வாதியின் கூட்டம் என்றால் பரவாயில்லை. வாக்குத் தேட அவர் கத்தி முழங்குவது நாலுபேருக்கு போய்ச் சேரவேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு இருக்கிறது. உங்களுக்கு என்ன நிர்ப்பந்தம்? அம்பலத்தில் இருக்க வேண்டியது அம்பலத்திலேயே இருக்க, அறைக்குள் இருக்க வேண்டியவை அறைக்குள்ளேயே இருக்கட்டும். நமது வேண்டுதல்களை பொறுமையாகச் செவிமடுக்க, ஆண்டவன் ஒருபோதுமே தவறியதில்லை. தவறவும் போவதில்லை.

**யானைக்கு மட்டுமல்ல**
**மனிதனுக்கும் பிடிக்கிறது**
**மதம்!**

**- யாழுவன்.**



# தலைவன் எப்போதுமே தலைவன்தான்

ராஜேஸ்

உயிர் பிழைத்திருத்தல் என்ற விடயத்தில்தான் எல்லா உயிரினங்களின் வலிமையும் அடங்கியி ருக்கிறது. எப்படிப் பிழைத்திருக்கிறோம் என்பது ஒவ்வோர் உயிரினத்தின் உயிர் பிழைப்புக் கதை. பிறப்புக்கும் இறப்புக்கும் இடையில் எப்படி வாழ்ந்தன, சந்தர்ப்ப சூழ்நிலைகளில் எப்படியெல்லாம் மாறின என்பது ஒவ்வோர் உயிருக்குமான வரலாறு. மனிதன், விலங்கு, பறவை, மீன், பூச்சி, புழு என எல்லா உயிரினங்களும் உயிர் பிழைத்திருக்கும் விடயத்தில் ஒன்றுக்கொன்று சளைத்ததல்ல.

சாம்பியா (Zambia) வனப்பகுதியில் இருக்கிறது லுவாங்வ் (Luangw) தேசிய உயிரியல் பூங்கா. வடக்கிலிருந்து மேற்கு நோக்கிப் பாய்கிற ஆறு லுவாங்வா (Luangwa River). அந்த வனப்பகுதியில் இருக்கிற எல்லா உயிரினங்களுக்கும் கருணை காட்டுகிற ஒரே ஆறு. காலநிலைக்கு ஏற்ப தன்னை தகவமைத்துக் கொள்ளும் ஒரு நிலப்பகுதி. சிங்கம், யானை, மான், ஆபிரிக்க எருமை, சிறுத்தை, காட்டுப் பூனை, கழுதைப் புலி எனப் பல்வேறு உயிரினங்களைக் கொண்டது. சிங்கக் கூட்டத்தின் தலைவனாக இருப்பதற்குப் பெயர் பிரைட் (Pride).

கூட்டத்திலிருக்கும் ஆண் சிங்கமே கம்பீரமாக இருக்கும். அதைச் சார்ந்தே மற்றக் குடும்ப உறுப்பினர்கள் இருப்பார்கள். தலைமை சிங்கம் (Pride) இருக்கிற சிங்கம் எப்போது எங்கே செல்லும், மீண்டும் எப்போது குடும்பத்தைத் தேடிவரும் என்பதெல்லாம் அதன் மன நிலையைப் பொறுத்தது. அதற்கு தலைவன் (Chief) என்ற அடைமொழியும் உண்டு.

சிங்கத்திற்கு இருக்கும் ஒரே எதிரி கழுதைப்புலிக் கூட்டம்தான். ஒரு கழுதைப்புலி கூட்டத்தில் 15 இலிருந்து 20 கழுதைப்புலிகள் வரை இருக்கும். சிங்கத்திற்கும் கழுதைப் புலிகளுக்குமான சண்டைகள் பெரும்பாலும் உணவு விடயத்தில்தான் தொடங்கும். சிங்கம் போராடித் துரத்தி வேட்டையாடுகிற உணவை, கழுதைப் புலிகள் சிரமமேயன்றி எளிதாக உணவாக்கிக் கொள்ளும். இங்கிருந்துதான் இரண்டு விலங்குகளுக்கும் இனப்பிரச்சினையே ஆரம்பிக்கிறது.

கூட்டமாக இருக்கும் கழுதைப் புலிகள் சிங்கத்தின் உணவைக் கூட்டமாகச் சென்று உணவாக்கிக் கொள்ளும். பெண் சிங்கங்களிடமிருந்து எளிதாக உணவைப் பிடுங்கி விடுகிற கழுதைப்புலிகள் ஆண் சிங்கத்திடம் வாலாட்ட முடியாது. பிரைட் வருகிறதென்றால் மற்ற சிங்கங்களே ஒதுங்கி நிற்கும்போது, கழுதைப்புலிகள் தலைதெறிக்க ஓடிவிடும். கழுதைப் புலிகளின் உயிர் பிழைத்திருப்பு அதன் சூழ்ச்சியில் இருக்கிறது. சிங்கத்தின் உயிர் பிழைத்திருப்பு அதனுடைய வீரத்தில் இருக்கிறது.

சிங்கக் குட்டிகள் பிறந்தவுடன் கண் தெரியாது என்பதால், வாசனையை வைத்து தாய் சிங்கத்தின் மடியில் தாய்ப்பாலைக் குடிக்கின்றன. சிங்கம் தன்னுடைய குட்டிகளை மிகுந்த பாதுகாப்புடன் பாதுகாக்கிறது. வேட்டைக்குப் போகும் சிங்கம் வேட்டையாடிவிட்டு மீண்டும் தன் குட்டிகளுடன் நேரத்தைச் செலவிடுகிறது. குட்டிகளை மிகுந்த பாதுகாப்புடன் சிங்கங்கள் வளர்க்கும். மூத்த சகோதரர்களால் குட்டி சிங்கங்களுக்கு ஆபத்து நேருவதற்கும் வாய்ப்பிருக்கிறது. சிறுத்தைகளிடமிருந்தும், கழுதைப் புலிகளிடமிருந்தும் சிங்கங்கள் வேண்டுமானால் தப்பிப் பிழைக்கலாம். ஆனால் சிங்கக் குட்டிகளால் அவ்வளவு எளிதில் தப்பித்துச் செல்ல இயலாது. உயிர் பிழைத்திருப்பு விடயத்தில் எல்லா உயிரினங்களும் அத்துமீறுபவைதாம்.

சிங்கத்தின் கர்ஜனை 8 கிலோமீற்றருக்குத் தெளிவாகக் கேட்கும். டெசிபல் அளவின்படி ட்ரில்லிங் மிஷின் ஒலியின் அளவை விட 114 மடங்கு அதிக ஒலியை ஆண் சிங்கம் எழுப்பும். அதனுடைய எல்லைக்குப் பாதுகாப்புக்காக 'சார்ஜ்' எடுத்திருக்கிறேன் என அங்கிருக்கிற எல்லா விலங்குகளுக்கும் கர்ஜனை மூலம் செய்தியைச் சொல்லும். ஒருவேளை உத்தரவின்றி வேறு யாராவது உள்ளே நுழைந்திருந்தால் உடனே கிளம்ப வேண்டியதுதான்.

ஆண் சிங்கங்கள் தன் கூட்டத்துக்கு என்று ஒரு எல்லையை உருவாக்கி வைத்துக் கொள்ளும். இதைத் தன் வட்டத்தில் மலம், சிறுநீர் கழிப்பதன் மூலமும் கர்ஜிப்பதன் மூலமும் தன் நகத்தால் மரங்களில் கீரியும், இது தன் எல்லை என மற்ற சிங்கங்களுக்குத் தெரிவிக்கிறது. சிங்கக் கூட்டத்தின் தலைவனோ தலைவியோ கூட்டத்தின் ஓர் அங்கத்தினராகவே இருக்கவேண்டும். ஒரு கூட்டத்தில் பொதுவாக ஐந்து ஆறு வயதுவந்த பெண் சிங்கங்களும், ஒரு வயது வந்த ஆணும் சில குட்டிகளும் இருக்கும். கூட்டத்தின் அமைப்பில் பெண் சிங்கங்களே அதிக முக்கியத்துவத்தைப் பெறுகின்றன. ஒரு கூட்டத்தில் இருக்கும் பெண் சிங்கங்கள் எல்லாம் நெருங்கிய உறவினர்களாகவே இருக்கும்.

எல்லாமே வசந்தகாலம் வரைதான். எல்லா உயிரினங்களும் கோடைக்காலத்தில் உயிர்பிழைக்க வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்து ஓடியாக வேண்டும். அப்படி உயிர்பிழைப்பதற்காக ஓடுகிற காட்டு எருதுகள்தான், கோடை காலத்தில் சிங்கங்களின் இரை. கோடை காலம் லுவாங்வா ஆற்றுநீர் கொஞ்சம் கொஞ்சமாக வற்ற ஆரம்பிக்கிறது. விலங்குகள் அந்த நிலத்தில் கடைசியாக இருக்கிற புற்களைச் சாப்பிட்டு முடித்திருந்தன. அந்த வருடத்தின் கடினமான காலமாக செப்ரெம்பர் மாதம் இருக்கிறது. ஆற்றின் ஓரத்தில் சிங்கங்கள் தங்களின் இரைக்காகக் காத்திருக்கின்றன. குடும்பமாக இருக்கிற கூட்டத்தில் தாய் சிங்கமும் அதன் ஒரு குட்டியும் இருக்கின்றன.

எப்படியேனும் தண்ணீர்தேடி விலங்குகள் வரும் என்பது அவற்றின் நம்பிக்கையாக இருக்கிறது. ஆற்றின் மறு கரையில் இருக்கிற மான்களை வேட்டையாட முயல்கின்றன. ஆனால் அதுவும் தோல்வியில் முடிகிறது. ஆனாலும் சோர்ந்து போகாத சிங்கங்கள் அங்கேயே தங்குகின்றன. ஏனெனில் மிகப் பெரிய இரைக்கூட்டம் இந்தக் காலகட்டத்தில் ஆற்றைக் கடக்கும் என்பது அவற்றிற்குத் தெரிந்திருந்தது.

வறட்சியில் இடம்பெயர்கிற காட்டு எருதுகளும், யானைகளும் ஆற்றின் வழியாகத்தான் பயணங்களைக் கடந்தாக வேண்டும். அதிலும் எளிதாக, மெதுவாக எருதுகளை வீழ்த்திவிடலாம். எவ்வளவு எளிதாக வேலை முடிகிறதோ அதைவிட அதில் ஆபத்தும் இருக்கிறது. எருதுகள் தங்களின் கொம்புகளால் சிங்கங்களைத் தாக்கவும் வாய்ப்பிருக்கிறது. பகல் - இரவு என எருதுகளை எதிர்பார்த்து சிங்கங்கள் காத்திருக்கின்றன. காற்றின் சூடு குறைந்திருக்கும் இரவு வேளையில் எருதுகளின் கூட்டம் ஆற்றங்கரையை நோக்கி வர ஆரம்பிக்கின்றன. அதற்காகவே காத்திருந்த சிங்கக்கூட்டம் எருதுக் கூட்டத்தில் ஒன்றைக் குறிவைத்துத் துரத்துகின்றன.

தாய் சிங்கம் குட்டியோடு கூட்டத்தைப் பின்தொடர்ந்து ஓடுகிறது. மொத்த சிங்கங்களும் 'சுற்றுப்போட்டு' விடுகின்றன. தாய் சிங்கம் பாய்ந்து எருதின் கழுத்தைப் பிடித்துவிடுகிறது. சிங்கங்கள் எளிதாக எருதை வேட்டையாடி உணவாக்கிக் கொள்கின்றன. குட்டிச் சிங்கங்களும் பெரிய சிங்கங்களோடு எருதைப் பங்கிட்டுக் கொள்கின்றன. அடுத்த நாள் வேட்டையாடி மிச்சமிருக்கும் உடற்பாகங்களை, காட்டிலுள்ள செந்நாய்கள், கழுதைப்புலிகள், பிணந்தின்னிக் கழுகுகள் என எல்லாம் உணவாக்கிக் கொள்கின்றன. வேட்டையாடிய விலங்குகளை முழுவதுமாக உண்ணாமல் எலும்பு மற்றும் அதனை ஒட்டிய சதைப்பகுதிகளை அப்படியே சிங்கங்கள் விட்டுவிடும். இயற்கையின் உணவு சங்கிலி இதுதான். பெரும்பாலும் பெண் சிங்கங்களே வேட்டையாடும்.

நன்கு உண்ட சிங்கம் வேட்டைக்குப் பின்னர் பல நாள்களுக்கு வேட்டையாடுவதில்லை. ஆற்றுப்படுகை, சிங்கங்களுக்கு ஓய்வெடுக்கச் சிறந்த இடமாக இருக்கிறது. காட்டு எருதை வேட்டையாடிய களைப்பில் எல்லாச் சிங்கங்களும் ஓய்வெடுக்கின்றன. எருதை வேட்டையாடும்போது தாய்ச் சிங்கம் காயம்பட்டிருப்பது அடுத்த நாள்தான் மற்றவர்களுக்குத் தெரிந்தது. அதன் குட்டி அதனோடு படுத்துத் தூங்குகிறது. காயத்தோடு தாய் சிங்கம் படுத்திருந்தது. நான்கு நாள்கள் தாண்டி விட்டது.

இப்போதைக்குக் குட்டி சிங்கத்திற்கு இருக்கிற ஒரே நம்பிக்கை தாயும், அதனுடைய பாலும்தான். இன்னும் நான்கைந்து மாதத்திற்குக் குட்டிக்குத் தாய்ப்பால் அவசியம் தேவைப்படுகிறது. சிங்கத்தின் குட்டி பசியின் தீவிரத்தால் தாயிடம் பால் குடிக்க முயல்கிறது. காயம்பட்டு வலியில் கிடக்கிற தாய் சிங்கம் குட்டியைத் தள்ளி விடுகிறது. ஆனால், விதி விடுவதாக இல்லை. தாய் உயிர்பிழைக்க உடலோடு போராடிக் கொண்டிருக்கிறது. குட்டி உயிர் பிழைக்கத் தாயின் மடியில் போராடிக்கொண்டிருக்கிறது. தன்னிடம் பால் இல்லை என்றாலும் தாய் சிங்கம், குட்டிச் சிங்கத்தை நாக்கால் தடவிக்கொடுக்கிறது. அப்போதைக்கு குட்டி சிங்கத்திற்கு அந்த அரவணைப்பு தேவையானதாகவும் போதுமானதாகவும் இருக்கிறது. எருதை வேட்டையாடிய நினைவுகளைத் தவிர சிங்கங்களுக்கு இப்போதைக்கு வேறு உணவு இல்லை.

'உயிர் பிழைப்பு எப்போதும் பசியை நினைவுபடுத்திக்' கொண்டே இருக்கும். பசி எல்லா உயிரினங்களுக்கும் ஒரு எல்லைக் கோட்டை வகுத்திருக்கும். அதைத் தாண்டும் போதுதான் இரத்தம், காயம், உயிரிழப்பு எல்லாமே. அந்த எல்லைக் கோட்டை தாண்டி 'நான் ராஜா' ஆன விலங்குகள் மிகக் குறைவு!



# நான் வாக்காளன் சொல்லுறன். கேளுங்கோ...!



கூட்டமைப்பின்ரை எந்த நிபந்தனையையும் நாங்கள் ஒருபோதும் ஏற்கமாட்டோம். மஹிந்த ராஜபக்ச திட்டவட்டமாக அறிவிச்சுப் போட்டார். ஏனெண்டால் பிரபாகரனை விட சம்பந்தன்ரை கோரிக்கை பாரதூரமானவை எண்டு அவர் பதறுகிறாராம். இவர் ஒரு பக்கம் இப்பிடிச் சொல்லிப் போட்டார். அவருக்குப் பக்கப் பாட்டுப்பாடுற மாதிரி கோத்தாவும் உரிமை, கிரிமை எண்டு ஒண்டும் பேசப்பிடாது.வாய் பொத்துக் கொண்டு தமிழருக்கு எப்ப பசிக்கும், எப்ப தண்ணி விடாய்க்கும் எண்டு மட்டும் பேசுவம் எண்ட மாதிரிக் கதைக்கிறார்.

அதுக்கை சுமந்திரன் படுற பாட்டைப் பாருங்கோவன். தாங்கள் அரசாங்கத்தோடை பேசுறதெண்டால் தங்கடை விசியத்தையும், தாங்கள் என்ன கதைக்க வேணும் எண்டு நினைக்கிற விசியத்தையும் மட்டும் பேசுவினமாம். கொஞ்ச நாளைக்கு முன்னம் தமிழ்கட்சியள் ஐஞ்சு பேரும் சேந்து கையெழுத்து வைச்சதைப் பற்றித் தாங்கள் கதைக்க மாட்டினமாம் எண்டு அவர் தன்ரை பாடு. இரண்டு பொம்பிளையளைக் கலியாணம் செய்தவர் மாதிரி இப்ப சுமந்திரன் அரசியலிலை இருக்கிறார்.

இந்த இரட்டை வேஷம் போடுற சுமந்திரனைப் போல ஆக்களைத் தமிழ் சனம் ஒதுக்க வேணும் எண்டு நான் நினைக்கிறன். ஒரு பக்கம் தமிழ்தேசியக் கூட்டமைப்பின்ரை உத்தியோகப் பேச்சாளர். மற்றப் பக்கம் ரணில் போற போற இடங்களுக்கு ஓடிப் போய் அவற்றை பேச்சை மொழிபெயர்க்கிற- வேலை. உதுவும் மறைமுகமாகச் சனத்தை ஏமாத்திற வேலையைச் செய்யிறார். தமிழ் சனம் மொழிபெயர்ப்பு வேலைக்கு உவரை வோட்டுப் போட்டு பார்லிமெண்டுக்கு அனுப்பேல்லை. எங்கடை பிரச்சினையைப் போய் கதையுங்கோ எண்டதுக்காகத்தான் மினைக்கெட்டு உவரை அனுப்பினவை. உண்மையிலை சனத்துக்கு உவரிலை நல்ல ஆத்திரம் இருக்கு. முன்னமே உவரைப் பற்றிச் சனம் கதைக்கத் துவங்கிவிட்டினம். வாற எலக்சனிலை சனம் வோட்டுப் போட்டு உவரை வெல்லப் பண்ணாட்டிலும் உவருக்கு ஒரு சீற்றைத் தேசியப் பட்டியலிலை ரணில் குடுப்பரெண்டு. அப்ப அந்த உறுதிப்பாட்டோடைதான் தான்தோன்றித் தனமாக் கட்சியிலை சுமந்திரன் நடக்கத் துவங்கிவிட்டார் எண்டும் சனம் கதைச்சவை.

ஏன்? இப்ப கிட்டடியிலை நடந்த ஒரு கூத்தைப் பாருங்கோவன். ஐஞ்சு கட்சியளும் கையெழுத்துப் போடேக்கை பேசாமல் இருந்திட்டு இப்ப அதை வைச்சு சிங்களக் கட்சியளோடை பேரம் பேசமாட்டம் எண்டு சொல்லுறது ஒரு போக்கிரித் தனமெல்லே. அப்ப கையெழுத்து வைக்க முதலே சும்மா பொழுது போக்குக்காக வையுங்கோ. உதைக் கணக்கிலை எடுக்க மாட்டம் எண்டு வடிவாச் சொல்லி இருக்கலாம் தானே? கட்சிக்காரரை மட்டும் மில்லை குறிப்பாச் சனத்தை ஏமாத்தாமல் இருந்திருக்கலாம் எண்டது என்ரை நிலைப்பாடு. சனம் பாவம். உந்த அரசியல் போக்கிரியளை நம்பிக் கெட்டதுதான் மிச்சம். அந்த விசியத்திலை கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஜென்ரில்மேன். உது நடக்காத விசியத்தைத்தான் செய்யினம். தமிழரைக் குத்தகைக்கு எடுத்து வைச்சிருக்கிறதா நினைச்சுக் கொண்டு இருக்கிற அப்புக்காத்து உதுக்கு விடான். எண்டதை முன்னமே நல்லா அறிஞ்சு வைச்சவர்மாதிரி கையெழுத்து வைக்கமாட்டன் எண்டு சொன்னதைப் பாக்கச் சரி எண்டுதான் நான் நினைக்கிறன்.

இதை எல்லாம் கதைக்கேக்கை சுரேஸ் பிரேமச்சந்திரன்ரை பேச்சு ஞாபகத்துக்கு வருகுது. கஜேந்திரரகுமார் தங்களை இந்தியாவின்ரை ஏஜேன்ட் எண்டு அடிக்கடி சொல்லிக் கொண்டு வாறார். அப்ப அவர் சீனாவின்ரை ஏஜென்டோ? எண்டு கேக்கிறார். அப்ப உம்மைக் கேள்வி கேக்கிறவன் எல்லாம் சீனான்ரை ஏஜென்டாத்தான் இருக்க வேணுமோ? எண்டு நான் அவரைக் கேக்கிறன். ஏன் கஜேந்திர குமார் மட்டும் அப்பிடிச் சொல்ல வேணும்? நானும் அப்பிடிச் சொல்லலாம்தானே? சனம் அப்பிடித்தான் சொல்லுனம். ஐ.பி.கே.எவ் வோடை நிண்டதைச் சனம் மறக்கேலுமோ? வீடு வீடாப் போய் குழந்தை குட்டியளை இழுத்துக் கொண்டு வந்து அவையின்ரை முத்தத்திலை வைச்சு குருவியைச் சுட்டதைப்போலை சுட்டதைச் சனம்மறக் கேலுமோ? மண்டையன் குழுத் தலைவரா இருந்து தமிழ் சனத்தைச் சுட உத்தரவு குடுத்த உம்மை இந்தியாவின்ரை ஏஜென்ட் எண்டு சொல்லாமல் என்ன இஸ்ரேலின்ரை ஏஜென்ட் எண்டு சொல்லுறதோ? இப்ப நடந்தது நடந்து போச்சு. மறந்து மன்னித்துக் கொண்டு இனி நடக்கப் போறதைப் பாப்பம் எண்டு சொல்லுற ரணிலுக்கும், பஸிலுக்கும், உமக்கும் என்ன வித்தியாசம்? இல்லைத் தெரியாமல்தான் கேக்கிறன்?

இப்ப கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சொல்லக் கோபம் வருகுது. என்ன? உதை இடுப்பிலை துவக்கைக் கட்டிக் கொண்டு இந்தியன் ஆமியின்ரை ஜீப்பையும் எடுத்துக் கொண்டு தென்னிந்திய சினிமாவிலை வாற கதாநாயகனைப்போல வேசம் கட்டிக் கொண்டு திரியேக்கை யோசிச்சிருக்க வேணும். என்ன? இப்ப ரோசம் வருகிதெண்டால் அப்ப ஒரு சுய சிந்தனையோடையும், அரசியல் தர்மத்தோடையும் நடந்திருக்க வேணும். போக்கிரி அரசியல் செய்தவனுக்கு ரோசம் வரக்குடாது. சுரேஸ் வேணுமெண்டால் அரசியல் செய்யலாம். ஆனால் சனத்துக்கு அரசியல் செய்யவேணும் எண்ட தேவை இல்லை. சனம் இன்னும் தங்கடை காசிலைதான் தின்னினம். மானம், மரியாதையா உடுப்போடைதான் திரியினம். இன்னும் கெட்டு நொந்து போகேல்லை. சனம் இன்னும் அயோக்கிய அரசியலை விரும்பேல்லை. சுரேஸின்ரை எண்ணம் என்னெண்டால், செய்யிறதைச் செய்வம், அனுபவிக்கிறதை அனுபவிப்பம், பிறகு வில்லங்கம் வந்தால் சமாளிப்பம். இதுதான் அவற்றை சிந்தனையோ?

13 கோரிக்கையை வைச்சுக் கையெழுத்துப் போட்ட நீங்களே ஒரு கொஞ்சக் காலத்துக்குள்ளை அது சரிவராது எண்டு சொல்லத் துவங்கிவிட்டியள். இப்ப நாலைஞ்சு நாளைக்கு முன்னமே சுரேஸ் அதைப் பற்றிச் சொல்லி இருந்தார். சரிவராது எண்ட மாதிரி.சுமந்திரனும் அதைக் கதைக்க மாட்டதம் எண்டு சொல்லிப் போட்டார். அதைச் சத்தப் பொறுதி இல்லாமல் கேட்டுக் கொண்டு இருக்கிறியள். சுமந்திரனுக்கு வாய் காட்டினால் வில்லங்கம் எண்டு வடிவாத் தெரியுதெல்லே? ஆனபடியாலை விசர்க்கதை கதையாமல் வேலையைப் பாருங்கோ, என்ன?

## 13 படும் பாடும்...

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்படிக் கூறிவந்தாலும் பின்னர் சரணாகதி அடைந்து சுமந்திரன் சம்பந்தன் கூறுபவைகளுக்கு மற்றக் கட்சியினர் தலையாட்டுவது தான் வாடிக்கையாகும்.இப்பொழுது இவ்வாவணத்தில் கையெழுத்திட்ட த.தே.கூவின் உறுப்புக் கட்சிகள் என்ன செய்யப்போகின்றன.

பல்கலைக்கழக மாணவர்கள் அழைத்தார்கள் கலந்து கொண்டோம். கோரிக்கைகளில் கைய்ப்ப மிட்டோம்.ஆனால் இவற்றை நாம் மேற்கொண்டு எடுத்துச் செல்ல முடியாது என்று மாணவர்களுக்குச் சொல்லுவார்களா.அப்படிச் சொல்லும்பொழுது மாணவர் ஒன்றியம் என்ன செய்யப்போகிறது.. தங்களின் முயற்கி வீணடிக்கப்படுகிறது இந்தச் சுயநல அரசியல்வாதிகளால் என்பதை ஏற்றுக்கொள்ளப்போகிறார்களா அல்லது அமைதி காக்கப் போகிறார்களா?

முதலில் மக்கள் குமுகாயக் குழுக்கள் எடுத்த முயற்சி வெற்றி பெறாத நிலையில் மாணவர்கள் வந்து விட்டார்கள். ஒற்றுமை ஏற்படும் என்று மக்கள் நினைத்திருந்தார்கள். ஐந்து தடவை பேசிவிட்டார்களே ஒற்றுமை ஏற்படுமா ஏற்படாதா என்றிருந்த மக்களுக்கு ஒரு ஆறுதலை இவ்வொப்பந்தம் கொடுத்தது. ஆனால் அது வெற்று ஒப்பந்தமே என்று தெரிய வரும் நிலையில் மக்கள் விரக்தியின் நிலைக்கே சென்றுவிடுவார்கள்.. கூடிப் பேசி ஒரு ஆவணம் தயாரித்து அதை வீசி எறிவது என்பது எவ்வளவு மக்களை ஏமாற்றும் அரசியல் போக்கிரித்தனம் என்று கூறுவது. முன்பு ஒப்பந்தம் எழுதினோம் ஆட்சி யாளர்கள் ஏமாற்றி விட்டார்கள் என்று கூறிய நாங்கள் நாமே ஒரு உடன்பாட்டிற்கு வந்து ஆவணம் தயாரித்துவிட்டு அதை நாமே கிழித்து வீசுகிறோமே? இதை எப்படிச் சொல்வது.

சஜித் கொண்டு வரவுள்ள யாப்பு இப்பொழுதுள்ள வரைவுன் அடிப்படையில் தான் இருக்கும் என்று கூறியுள்ளார் அவர்.அதில் 'எக்கியராஜ்ஜே' என்ற சொல்லு சிங்களம், தமிழ், ஆங்கிலம் என்ற மூன்று மொழிகளும் வரவுள்ளது.அது ஏன். ஒற்றையாட்சி என்ற சொல்லும் யூனிட்டரி என்ற சொல்லும் இல்லாமல் யாப்புத் தயாரித்தால் சிங்கள மக்கள் சினமடைவார்கள் பொங்கி எழுவார்கள். எக்கியராஜ்ஜே என்ற ஒற்றை ஆட்சி என்று பொருள் உள்ள சொல்லை மூன்று மொழிகளும் போட்டு விட்டால் அவர்கள் ஏற்றுக்கொள்ளுவார்கள். நாம் தான் அதன் உண்மையான ஒற்றையாட்சி என்ற பொருளை மறந்து சுமந்திரன் சொல்லும், ஏமாற்றுச் சொல்லான ஒருமித்த நாடு என்று நம்பி மோசம் போவோம். எக்கியராஜ்ஜெயை ஏற்றுக்கொண்ட கூட்டமைப்பு எப்படித் தாயகம், தேசியம், சமஷ்டி என்பனவற்றை வலியுறுத்த முடியும். அதனாற்றான் இதைத் தமிழ்தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைகள் அல்லவென்று சம்பந்தன் கூறியுள்ளார்.

இப்பொழுது மாணவர் ஒன்றியம் சரியான வழிகாட்டலைத் தமிழ் மக்களுக்குக் காட்டவேண்டும். இன்னமும் அரசியல் வாதிகளின் மழுப்பல்களுக்குத் துணை நின்று இனத்தின் உரிமைகளை விற்று விடக்கூடாது என்பது தான் மக்களின் கருத்தாகும். சென்ற பொதுத்தேர்தலில் பிரிந்து நின்று யார் யாரையோ ஆதரித்தது போல் நடந்துகொள்ளாது. மாணவர் ஒன்றியம் எடுத்த கோரிக்கைகள் நிராகரிக்கப்படும்பொழ்து நல்ல முடிவினை எடுக்க வேண்டும் எடுக்கும் என்று நம்புவோம் மாணவர் ஒன்றியம் வரலாற்றுத் தவறு விட்டு விட்டது என்று அவப்பெயரை எடுக்காது என்று நம்புகிறோம்.

தமிழ் மக்கள் மேல் திணிக்கப்பட்ட மாகாண சபையும் பதின்மூன்றாம் திருத்தத்தால் வந்த வினை..இப்பொழுது பதின்மூன்று கோரிக்கைகள் என்பதிலும் தொக்கி நிப்பது பதின்மூன்றுதான். முதலாவது திணிக்கப்பட்டது. அது இன்று மேலும் வலுவிழந்து செயல் இழந்து நிற்கிறது. இப்பொழுது நாம் தயாரித்த பதின்மூன்று நம்மவர்கள் என்று சொல்லிக்கொள்பவர்கலாலேயே செல்லாக்காசாக வீசி எறியப்படும் நிலைக்கு வந்துள்ளது. இது தான் பதின்மூன்று படும் பாடும், படுத்தும் பாடுமாகும்.



# ரகசிய அறையில் தங்கக் குவியல்

சீனாவின் ஹைனன் மாகாண தலைநகரான ஹாய்காவ் நகரின் மேயராக 2008 முதல் 2010 வரை இருந்தவர் ஜாங் குய். அண்மையில் ஊழல் தடுப்பு பிரிவு அதிகாரிகள் ஹாய்காவ் நகரில் உள்ள ஜாங் குய் வீட்டில் அதிரடிச் சோதனை நடத்தினர்.

அப்போது வீட்டின் கீழ் தளத்தில் உள்ள ஒரு ரகசிய அறையில் குவியல் குவியலாக தங்க பிஸ்கட்டுகள், நகைகள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. மேலும் அமெரிக்க டொலர்கள், சீன யுவான் மற்றும் ஐரோப்பிய யூரோ என கட்டுக்கட்டாக பணமும் சிக்கியது. மொத்தமாக 300 மில்லியன் பவுண்ட்ஸ் மதிப்புடைய, 13 டன் எடை கொண்ட தங்க பிஸ்கட்டுகள் மற்றும் நகைகளையும், 30 பில்லியன் பவுண்ட் பணத்தையும் அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். ஜாங் குய் மீதான பொருளாதார குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால் அவருக்கு மரண தண்டனை விதிக்கப்படும். ஐயய்யோ எல்லாவற்றையும் விட்டுச் செல்லப் போகிறாரா?

**பழைய கிணறு**
**நிரம்பி வழிகிறது**
**குப்பைகள்.**

# மூதாட்டியை திருமணம் செய்த இளைஞர்




ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான உக்ரைனில் 18 முதல் 26 வயது வரையிலான ஆண்கள் கட்டாயமாக ராணுவத்தில் சேர்ந்து பணியாற்ற வேண்டும். அதே சமயம் ஒரு ஆண் உடல் ஊனமுற்ற ஒரு பெண்ணை திருமணம் செய்து, அவரை கவனித்து வந்தால் அந்த ஆணுக்கு கட்டாய ராணுவ சேவையில் இருந்து விலக்கு அளிக்கப்படும்.

இந்த நிலையில், அந்நாட்டின் மேற்கு மத்திய பகுதியில் அமைந்துள்ள வின்னிட்சியா நகரை சேர்ந்த அலெக்சாண்டர் கோண்ட்ரட்யுக் (வயது 24) என்ற இளைஞர் ராணுவத்தில் சேருவதை தவிர்ப்பதற்காக தனது நெருங்கிய உறவினரான ஜினாய்டா இல்லரியோனோவ்னா (81) என்ற உடல் ஊனமுற்ற மூதாட்டியை திருமணம் செய்துள்ளார் என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இது போலியான திருமணம் என்பது உறுதி செய்யப்பட்டால் அலெக்சாண்டரை ராணுவத்தில் பணியாற்ற அழைப்பு விடுக்க முடியும் என உள்ளூர் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

**மழைத்தூறல்**
**நனைந்தது நாளிதழ்**
**சுடச்சுடச் செய்திகள்.**

# இங்கே இவர்கள் இப்படி

**ஏ.ஜே.ஞானேந்திரன்**

# போலந்து நாட்டில் மகாத்மா காந்தி




மகாத்மா காந்தியின் 150ஆவது பிறந்தநாள் விழா இந்தியாவில் மட்டுமல்லாது வேறு பல நாடுகளிலும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. நேபாளத்தின் காட்மாண்டு நகரில் காந்தியின் சிலையை நேபாளத்துக்கான இந்திய தூதர் மன்ஜிவ் சிங் பூரி திறந்து வைத்தார். சீனாவின் இந்திய தூதரகத்தில் காந்தியின் பிறந்தநாள் விழா கொண்பாடப்பட்டது.

பாலஸ்தீனத்தில் காந்தி பிறந்தநாளையொட்டி சிறப்பு தபால் தலை வெளியிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து போலந்து நாட்டின் தபால் சேவை நிறுவனமான போக்ஸ்டா போல்ஸ்கா, மகாத்மா காந்தியின் உருவப்படத்தைக் கொண்ட சிறப்பு தபால் தலையை வெளியிட்டது. பிரான்ஸ், உஸ்பெகிஸ்தான், துருக்கி உள்ளிட்ட நாடுகளிலும் மகாத்மா காந்தியின் உருவப்படம் கொண்ட சிறப்பு தபால் தலை வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கது. முத்திரைகளோ அல்லது வேறு தபால் வெளியீடுகளோ 90க்கு மேற்பட்ட உலக நாடுகளால் வெளியிடப்பட்டு வருகின்றன.

**காந்தி தேசம்**
**சுதேசிக் கொள்கை**
**அந்நிய முதலீடு.**



# ஏலவிற்பனையில் ஆடம்பரக் கார்கள்

மிகச் சிறிய மேற்கு ஆபிரிக்க நாடான Equatorial Guinea இன், உதவி ஜனாதிபதி, சட்டத்தின் பிடியில் வகையாக மாட்டிக் கொண்டிருக்கிறார். பெட்ரோலிய உற்பத்தி மூலம் நிறையப் பணம் சம்பாதிக்கும் இந்தக் குட்டி நாடு, மோசடிகளால் சிதைந்த ஒரு நாடு என்கிறார்கள். Teodorin Obiang Nguemaக்கு சொந்தமான 25 ஆடம்பரக் கார்களை சுவிஸ் அரசு பறிமுதல் செய்து ஜெனிவாவில், ஏலவிற்பனை செய்திருக்கின்றது.

இதன் மூலம் 15.2 மிலியன் பவுண்ட்ஸ் தொகையை திரட்ட முடியும். நிதி மோசடிக் குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே இந்தப் பறிமுதல் நடந்துள்ளது. ஒரு "பிளேபோய்" என்று வர்ணிக்கப்படும் இவர் ஏற்கனவெ இன்னொரு நிதி மோசடி விவகாரத்தில், பாரிஸில் 3 வருட ஒத்தி வைக்கப்பட்ட சிறைத் தண்டனை பெற்றிருந்தார்.

**பழுத்தாலும்**
**இனிப்பதில்லை**
**மிளகாய் !**

# தீவுக்குள் நுழைய 1000 டொலர்

பல்லி இனத்தைச் சேர்ந்த கொமோடோ இராட்சத உருவமுடையது. கொமோடோ டிராகன் என்று அழைக்கப்படும் இந்த மிருகம், இந்தோனேஷியாவில் மாத்திரமே காணப்படுவதுதான் விந்தை. (அவுஸ்திரேலியாவுக்கு கங்காரு போல) உல்லாசப் பயணிகள் ஆண்டுக்கு 1000 டொலர் அங்கத்துவக் கட்டணம் கட்டினால் மாத்திரமே இனி வரும் காலங்களில் உள் நுழைய முடியும் என்கிறார்கள் அதிகாரிகள். வருகின்ற ஜனவரி தொடக்கம், இத் தீவின் மிருகங்களையும், அவற்றின் வதிவிடங்களையும் பாதுகாக்க மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்காக ஆறு மாத காலம் உள்நுழைவு நிறுத்தப்படும் என்று அரசு அறிவித்திருந்தது.

. தற்போதைய நுழைவுக் கட்டணம் 10 டொலர்கள். 2018இல் 176,000 உல்லாசப் பயணிகள் இங்கு வந்து போயிருக்கிறார்கள். மிருகங்களின் வாழ்க்கை முறையில் தாக்கம் ஏற்பட்டு அவை அழிந்து போகாமல் பாதுகாக்கவே இந்த மாற்றங்கள் என்கிறார்கள் இவர்கள். இவை 3 மீற்றர் நீளம் வளர்வதோடு, அதி நஞ்சுடைய பற்களைக் கொண்டுள்ளன. சுமாராக இத் தீவில் காணப்படுகின்ற மிருகங்கள்1700 !

ரசிக்க பின்னிணைப்பாக இன்னாரு ஹைக்கூ.

**உடைந்த வளையல் துண்டு**
**குளத்தில் எறிந்தேன்.**
**அடடே! எத்தனை வளையல்கள்.**



# இலங்கை இனத்துவ முரண்பாட்டு அரசியலில் கேலிச்சித்திரங்கள்


## அத்தியாயம் 3.1.1




இதன் பிரகாரம் 1919 இல் டேவிட் லோ ஹென்றி கட்பூரியுடன் இணைந்து 'த லண்டன் ஸ்ரார்' பத்திரிகையில் 1919 முதல் 1927 வரையான காலப்பகுதியில் பணியாற்றினார். மேலும் அவுஸ்திரேலிய உள்நாட்டுப் போர் மற்றும்



எத்தியோப்பியாவின் பிராந்தியப் படையெடுப்பு, 1936 இன் கோடைக்கால ஒலிம்பிக் விளையாட்டுக்கள், ஸ்பானிய உள்நாட்டுப் போர், மற்றும் போர்க்கால பிற நிகழ்வுகள் தொடர்பிலும் எண்ணிலடங்காத பல காட்டூன்களை வரைந்த பெருமை இவரையே சாரும். தவிரவும் லண்டன் சீன் ( London Scene) எனும் பத்திரிகையில் லோ அன்ட் ரெறி (Law & Terry) எனும் பெயரில் ஹொறாஸ் உடன் இணைந்து அவருடைய கட்டுரைகளுக்கான விளக்கப்படங்களையும் வரைந்தார்.



1937 இல் நாஜி பிரச்சார அமைச்சர் 'ஜோசப் கோப்பெல்ஸ்' பிரித்தானிய வெளியுறவுச் செயலாளர் 'லோட் ஹலிபக்ஸ்' என்பவருக்கு டேவிட் லோவின் காட்டூன்கள் ஆங்கிலேய, ஜேர்மன் உறவுகளைச் சேதப்படுத்துவதாகக் குறிப்பிட்டார். இவரது படைப்புக்கள் பல பிரிட்டிஸ் வரலாற்றுப் பாடப்புத்தகங்களில் இடம்பெற்றன. மேலும் இவரது படைப்புக்கள் ஹிட்லர், ஜோசப் ஸ்ராலின், முசோலினி, பிரான்ஸிஸ்கோ பிரான்கோ ஆகியோருக்குச் சிம்ம சொப்பனமாக விளங்கியது. இவரது வீரயமான காட்டூன்களால் பிரிட்டிஸ் செய்தி ஊடகங்கள் இவரை ஒரு போர் வீரர் என அடையாளப்படுத்தின.

டேவிட் லோவினால் யுத்தத்திலேயே வரைந்த காட்டூன்களை 'ஹிட்லரின் எழுச்சியும், வீழ்ச்சியும்' (Race and Full of Hidler)'என்ற தலைப்பின் கீழ் அடக்கமுடியும் எனக் குறிப்பிடுகின்றனர்.

மேற்குலகின் ஆதிக்கம் வாய்ந்த கார்டூனிஸ்டாக




வலம் வந்த டேவிட் லோவின் கார்டூன் படைப்புக்கள் தற்போதும் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. குறிப்பாக 'Evening Standard' எனும் பத்திரிகையில் வெளிவந்த கார்டூன்களை லண்டனிலுள்ள 'Political Cartoon Gallary'யில் ஹென்ட் பல்கலைக் கழகம் பாதுகாத்து வருகிறது. தவிரவும் 57 அசல் கார்டூன்கள் மற்றும்



கிட்லரின் பாசிசக் கரங்கள் உலக நாடுகளிடையே அதன் ஆதிக்கத்தை பரப்புகிறது




உலக மக்களின் முதுகில் கிட்லரின் ஒய்யாரப் பயணம்.




கிட்லரின் கோரப் பிடியில் உலக நாடுகள் சிக்கித் தவித்த நிலை.

பல்வேறு பத்திரிகைகளில் வெளியான கார்டூன்கள் அவுஸ்திரேலியாவின் தேசிய நூலகத்தில் பாதுகாக் கப்பட்டு வருகிறது. மேற்குலகின் ஆதிக்கம் வாய்ந்த கார்டூனிஸ்டாக வலம் வந்த டேவிட் லோ 19.09.1963ல் இலண்டனில் இறந்தார்.

(தொடரும்)

## மணிபல்லவம்...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதன் பிரதிபலிப்பே கடந்த எழுபது எண்பது ஆண்டுகளாக இம்மண்ணில் நடக்கும் ஒடுக்குமுறைகளுக்கும் அதற்கெதிரான எழுச்சிக்குமான காரணிகளாக உள்ளன. இது புத்த பூமி என்பதற்கு ஒரே காரணம் சிங்கள மக்கள் பெரும்பான்மையினராகப் புத்தத்தை பின்பற்றுவதேயாகும். ஆனால் யப்பான் சீனா தாய்லாந்து, வியட்நாம் திபெத்து போன்ற பல நாடுகளில் புத்தம் இருக்கிறதே. அவை புத்த நாடுகளல்லவா. புத்த பூமிகள் அல்லவா. சிங்கள மக்களுக்குரிய பூமி மட்டுமே புத்தபூமி ஆகுமா. புத்தர் பிறந்த நேபாளத்திலேயே புத்தம் இல்லாமல் போய்விட்டதே. அதுதான் புத்தர் பிறந்த பூமி எனவே அதைப் புத்த பூமி என்று கூறுவோம் என்றல்லவா குரல் கொடுக்க வேண்டும். இதை விட்டு விட்டு ஆறாயிரம் ஏழாயிரம் ஆண்டுகளாகச் சிவனை வழிபட்ட வழிபட்டுக் கொண்டிருக்கும் பூமியை இது புத்த பூமி என்று எவ்வாறு கூற முடியும்? இது உண்மையில் சிவபூமியாகத் தானே இருக்க முடியும்.

சிங்கள பௌத்த மேலாண்மையை நிலை நிறுத்த மகாசங்கங்களும் ஆட்சியாளர்களும் முயன்ற பொழுது அதை தடுத்து நிறுத்தியது போர் ஆகும். இவ்விரிவாக்கத்திற்கு போர் மிகப்பெரும் இடைஞ்சலாக இருந்தபொழுது அதற்கு பயங்கரவாத முத்திரை குத்தப்பட்டு அனைத்து நாடுகளிடம் ஆயுத தளபாடங்களைப் பெற்று ஒத்துழைப்பையும் பெற்று அசோகன் செய்த கலிங்கத்துப் போரிலும் பார்க்க மிகக் கொடிய இன அழிப்பை மேற்கொண்டு இரண்டாயிரத்து ஒன்பதாம் ஆண்டு ஆயுதங்களை மௌனிக்கச் செய்தனர். அதன் பின்னர் தீவிரமாகச் சிங்கள மயமாக்கலை வனவளப் பாதுகாப்பு என்ற பெயரிலும் தொல்லியல்துறை என்ற போர்வையிலும் மகாவலி அபிவிருத்தி என்ற பெயரிலும் தமிழர் நிலன்களில் புத்த மத அடையாளங்களிருப்பதாகக் கூறி ஆட்சியாளர்களும் புத்த சங்கத்தினரும் தமிழர் நிலங்களையும் வழிபாட்டுத் தலங்களையும் அபகரிக்கத் தொடங்கினர். தமிழ் மண் முற்றிலும் சிங்கள புத்த அடையாளங்கள் இருப்பதாகக் கூறி இது புத்தபூமி என்று ஓங்கி ஒலிக்கின்றனர். இதன் ஒரு கட்டம் தான் முன்னர் யாழ் முற்றவெளியில் ஒரு பிக்குவின் இறந்த உடலை எரித்தமையும் இப்பொழுது செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் நீதிமன்ற தீர்ப்பையும் மீறி இறந்த பிக்குவின் உடலைப் புனித தீர்த்தக்கரையில் எரித்ததுமாகும். எரித்ததற்குத் தலைமை தாங்கியவர் ஞானசாரர் என்ற பிக்கு ஆவார். அவர் நீதிமன்றத்தை அவமதித்த காரணத்தினால் ஆறு ஆண்டுகள் சிறைத் தண்டனை பெற்றுச் சிறையில் இருந்தவர். ஜனாதிபதி அவருக்கு மன்னிப்புக் கொடுத்து விடுதலை செய்தார். அவர் இப்பொழுது கூறுகிறார் "இது புத்தபூமி இங்கு புத்த மதத்திற்கே முன்னுரிமை உள்ளது எனவே மற்றவர்கள் இது பற்றிப் பேசக்கூடாது போய்விடுங்கள் நாம் விரும்பியவாறு உடலை எரிபோம்" என்றும் கூறியுள்ளார். இவர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக அதை அவமதித்து அதை மீறி உடலை எரிப்பதைத் தடுக்காத காவற்றுறை அச்செயலுக்குப் பாதுகாப்புக் கொடுத்தது என்றால் நாடு எங்கே போகிறது என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். இன்னொரு பிக்கு மிகவும் கோபமாக ஏசி நின்ற சிங்கள மக்களைத் தூண்டி வழக்காடிய சட்டவாளர்களையும் மாணவர்களையும் வேறு சில பொது மக்களையும் தாக்குவதற்குத் தூண்டி விட்டுள்ளார். இது தான் அன்பையும் அகிம்சையையும் போதிக்கும் புத்த தர்மமாம்.

வரலாற்றுக் காலத்துக்கு முன்பிருந்தே சிவபூமியாக இருந்த இலங்கைப் புத்தபூமி என்று கூறிக்கொண்டு சித்தார்தரின் வழியை மறந்து அன்பு அகிம்சை,பொறுமை என்பனவற்றை மறந்து இது சிங்கள மக்களுக்கான புத்தபூமி என்று கூறி ஒரு யுத்த பூமியாக இதை மாற்றிக்கொண்டிருக்கிறார்கள் இந்தச் சிவபூமி புத்த பூமியா? யுத்த பூமியா? என்றுதான் கேட்கத் தோன்றுகிறது.

# சுடலை முதல் வந்ததா? மக்கள் முதல் வந்தனரா?

யாழ்.தர்மினி பத்மநாதன்

"இந்த எல்லையில் புதுசாக யாரையும் காண முடியாது பிள்ளை. அப்பிடி யார் வந்தாலும் எங்கட சனம் சும்மா விடாது. எல்லாரும் ஒன்று சேர்ந்து கும்மிப் போட்டு தான் விடுவினம். சிட்டடியில 2 பெடியள் வாளோட மோட்டர் சைக்கிளில் வந்தவை .ஊர்ப் பெடியள் எல்லாம் கலைச்சுப் பிடிச்சு பொம்பிளையளும் சேர்ந்து அடி அடி எண்டு அடிச்சு, மோட்டர் சைக்கிளை நொறுக்கி, அவையள பொலிஸில குடுத்தது. அந்தளவுக்கு எங்கையும் சுத்தி சுத்தி எங்கட சனம் நிக்கும்" என்றவர் –


"வாங்கோ பிள்ளையள். கன நாளாச்சு கண்டு. இப்ப நாடகம் ஒண்டும் போடுறது இல்லையோ? ஆடல் பாடல் எண்டால் எனக்கு நல்ல விருப்பம் கால் தான் ஏலாது. ஒரு ஒப்ரேசன் செய்தது, ஊசியை மாறிப்போட்டு பிறகும் குத்திக் கிழிச்சு உடம்பில 90 ஊசி ஏத்தினாங்கள் ஆஸ்பத்திரியில. இப்ப உடம்பும் கூடி நடக்க முடியல." என்றவாறு கதிரையிலிருந்து கதையாடினார் முதிய பெண்மணி.

"அது என்னமோ தெரியாது பிள்ளை. ஆடிப் பாட நல்ல விருப்பம், இப்ப உள்ள பிள்ளைகள் குடுத்து வைச்சவை. எங்களுக்கு அப்பிடி ஆக்கமும் இல்லை." ஊக்கமும் இல்லை. – என்றவரிடம்...

"ஏன் ஆடிப் பாட விருப்பம்?" – என்றேன்.

"அப்பதானே சந்தோசமாய் இருக்கலாம். இல்லாட்டி தலைக்குள்ள, மனசுக்கு பாரமாய் இருக்கும். இது நாலு பேரை தெரிய வரும். மனசுக்கும் சந்தோசமாய் இருக்கும். எங்கட காலத்தில எங்களை படிக்கக் கூட விடேல்லை. படிக்க ஆசைப்பட்டும் என்னத்தைக் கண்டம்? நான் இப்பவும் கண்ணீர் விட்டு அழுகிறனான். எங்களுக்கு இப்பமாதிரி சந்தர்ப்பம் இல்லையே என்று கவலை. என்ர பிள்ளைகள் படிப்பிலகுறைவு ஆனால் ஒழுக்கம் கூட. பிள்ளைகள் வெளிநாடு போனதும் தப்பீட்டினம். பக்கத்தில படிக்க விருப்பம் இல்லாமல் ஓ.எல் படிச்சிட்டு வீட்டில இருக்குதுகள் அதுகளை பார்க்க கோவம் வருகுது. வந்து கதைச்சு பேசி அந்தப் பிள்ளைகளை படிக்க சொல்லுங்கோ."

"பக்கத்து வீட்டில ஒரு பிள்ளையும் பெடியனும் பள்ளிக்கு கூடம் போகாமல் நிண்டு பிறகு தகப்பன் போய்க் கதைச்சு விட்டவை. இப்பத்த பள்ளிக் கூடங்களும் பிள்ளையளை எடுத்த உடனை வெளிய கலைக்கிறது பிழைதானே. அவர்களின்ரை நிலைமை தெரியாமல் வாத்திமார் நடக்கினம். பொம்பிள பிள்ளையோ ஆம்பிள பிள்ளையோ வீட்டுக்க வைச்சு என்ன செய்றது?. அதுகளுக்கு புத்தியும் மங்கி, கஞ்சா கிஞ்சா எண்டுதான் சீரழியுங்கள் ஆம்பிள பிள்ளைகள் நோயாளிகளாகி நடுங்குதுகள், காசில்லை ஆனால் கஞ்சா இங்க வந்திட்டு. கலியாணம் கட்டுறதாய் இருந்தாலும் பிள்ளையள் படிச்சு இருக்க வேணும். அறிவு இல்லாமல் குடும்பம் நடத்த முடியுமா?. இப்ப உள்ள பிள்ளைகளுக்கு ஒன்றும் விளக்கம் சொல்ல ஏலாது. அந்தக் காலம் தாய் தகப்பன் சொல்லை நாங்கள் மீற ஏலாது பிள்ளை".



"நான் கொலசிப் சோதினை எழுதிட்டு பள்ளிக்கூடம் போகாமல் விட்டிட்டன். எங்கட ஐயா அடுப்படியில தான் எங்களை தள்ளிவிட்டவை. அந்த நேரம் எல்லாத்துக்கும் லூசு மூளை. அந்த லூசுகள் எங்களை படிக்க விடையில்லை. எங்கட வாத்திமார் நான் கெட்டிக்காரி படிக்க விடுங்கோ எண்டு வரச்சொல்லி ஆள் அனுப்ப எங்கட ஐயா விடேல்லை. பொம்பிளைப் பிள்ளை எப்பவும் படிச்சு இருக்க வேணும். படிக்கிறது கலியாணம் கட்டவோ உத்தியோகம் பார்க்கவோ மட்டுமில்லை. மண்டையில அறிவு இருந்தால்தானே வாழ்க்கையை வழிநடத்தலாம்."

"எங்கட அண்ணா தன்ர பிள்ளைகளை இப்ப படிப்பிக்கிறார். அவர் தான் படிச்சும் எங்களை படிக்க விட இல்லை. நாங்கள் 15 பேருக்கு கடகத்தில சூடு சோறு சுமந்தம். அடுப்பு மூட்டி, தாச்சி வைச்சு மிளகாய் மல்லி போட்டு வறுத்து தூள் இடிச்சுதான் சமைக்கிறது. காசு மட்டும்தான் தருவினம். நாங்கள்தான் கடைக்கும் போறது. சுடச் சுட சமைச்சு. போட்ட உடுப்பும் மாத்தாமல் வரம்புகளுக்கால விழுந்து எழும்பி கொண்டு போறது."

"சோறு தலையில சுடும். இடைக் கிடை கடகத்தை தூக்கிப் பிடிக்கிறது. பின்னேரம் தேத்தண்ணி கொண்டு போவம். இப்ப வெக்கத்தில வாளியில கொண்டு போகினம். இப்ப உள்ள பிள்ளைகள் இதுக்கு எல்லாம் ஓமாமே? பக்கத்தில போறதுக்கும் கவட்டுக்க மோட்ட சைக்கிள் வேணும். பிள்ளைகளுக்கு படிப்பு எப்பவும் தேவை என்றவரிடம்

"உங்கள் ஊர் பற்றி இவளவு கரிசனை எப்படி வந்தது?" என்று கேட்டேன்.

"25வருசத்துக்கு மேலாக ஒரு துண்டு காணிக்கே வசதி இல்லாமல் கஷ்டப்பட்ட மக்கள் தான் நாங்கள். இடம் இருந்தும் ஒரு சமூகம் மற்றவையை விடமாட்டன் என்று எங்களை மறிச் சவை. போராட்டம் நடத்தி நீதிமன்றம் போய்தான் மீட்டனாங்கள். 28, 30 வருசத்துக்கு முதல் கசிப்புக் காச்சிக் கெட்டது இந்த ஊர். சனம் சந்ததி இருக்க ஏலாது, அதை ஒழிக்கவும் போராட்டம் நடத்தினோம். எல்லாம் போராடித்தான். எங்கட சனம் மக்கள் நல்லா இருக்க வேணும் என்று செய்தம்."

"இப்ப உள்ள பிரச்சனை என்ன வென்றால் அங்கால ஒரு சுடலை இருக்கு. மக்களை பாதிக்காமல் சுற்று மதில் கட்டி இருக்கு. ஆனால் சுட லையை எடுக்கவேணும். மக்கள் இருக்க முடியலை. வேற இடம் மாத்த வேணும் . பொறுப்பானவை தான் அதை செய்ய வேணும். நாங்கள் பிறகு தான் வந்தனாங்கள்."

"சுடலை கிராமத்துக்குள்ள இருக்கிற தால எங்களுக்கு தான் பாதிப்பு. கான்சறால பாதிக்கப்பட்டு செத்தவை. நிறைய பேர் இருக்கினம். எரிகிற புகை முழுக்க வீடுகளுக்குள்ள தான் வரும். மணம். சாப்பிடக் கூட முடியிறதில்லை. பிரேதம் வரப்போகுது எண்டு தெரிஞ்சால் நேரத்தோட சமையல் சாப்பாடு முடிச்சிடுவம். சாப்பிட ஏலாது. சுடலை இருந்த நேரம் நாங்களாக வந்து இருந்திட்டம். அந்த நேரம் தெரியலை. ரெஜினோல்ட் கூரே இருந்த காலமும் வந்து பார்த்தவர். அழுது அழுது சொன்னோம். சுடலையை எடுக்க உதவுங்கோ எண்டு கேட்டம். எல்லா அதிகாரிகளும் அரசியல் காரரும் வருவினம். போவினம் அவ்வளவுதான்"

"தேர்தல் எண்டதும் ஒவ்வொரு அரசியல்காரரும் வந்த உடனுக்கும் சொல்றது எனக்கு போடுங்கோ நன் வந்ததும் முதல் வேலையாய் சுடலையை எடுப்பன் எண்டு. அரசியலுக்க வந்ததும் போனவை தான். வீடு வீடா பிச்சைக்கு வந்த பிச்சைக்காரர் எல்லாம் பிறகு இந்தப் பக்கம் எட்டியும் பார்க்கிறதில்லை. இவங்களா மனுஷரை பார்க்கிறவங்கள். அரசியல்வாதிகளில நம்பிக்கையே இல்லை. கள்ள ஏமாத்துக்காரர்."

"இருளன் இந்து மயானம். என்று தான் பெயர். இங்க சவக்காலையும் இருக்கு. தாக்கிறதில மணம் வராது ஆனால் பாதிப்புதான் மழை காலம். பக்கத்துக்கு கிணறுகள் மாசடையும். பிரேதங்கள் உக்கி ஊற்றுக்குள்ளால தண்ணி மணக்கும். கிணறு வடிவா கட்டாவிட்டால் கழிவு தண்ணி வரும். பிரேதம் இத்துப் போய் தண்ணியோட சேரேக்கை தண்ணிய பாவிக்க ஏலாது."

"எங்களுக்கு 2 சுடலையும் பிரச்சினைதான். வாற அதிகாரிகள் கேட்பினம் யார் முதல் வந்தது எண்டு. நாங்கள் சுடலை தான் வந்தது எண்டு சொல்லுவம். அப்ப ஒண்டும் சொல்லாமல் விட்டிட்டு போயிடுவினம். எங்கட இடத்தின்ர ஒற்றுமையை குலைக்கிறதுக்குதான் இப்பிடி ஒவ்வொருவரும் வந்து குழப்புறது. எங்களுக்கு காசு பணம் பெருசு இல்லை. எங்கட பிள்ளைகள் எங்கட கிராமம் நல்லா இருக்க வேணும்" என்ற ரஞ்சி அம்மாவின் மனதில் அவரது சமூகம் ஊர் யாவரும் நல்லா இருக்கவேணும். ஊர் உயரவேணும் என்பதில் நிறைய ஆர்வம் தேங்கிக் கிடைக்கவே செய்தது.

கடந்த 05.102019 அன்று பண்பாட்டு மலர்ச்சிக் கூட செயலாளிகளுடன் உரும்பிராய்க் கிராமம் சென்றோம். ஊருக்கு நடுவில் உள்ள சனசமூக நிலையத்தில் கிட்டத் தட்ட 40 பெண்கள் வரை ஒன்று கூடி இருந்தார்கள். அவர்கள் மாதர் சங்க சந்திப்பிற்காக ஒன்று கூடி இருந்தனர். அவர்களுடன் நாம் பல்வேறு கருத்தாடல்களை மேற்கொள்ள முடிந்தது. பெரும்பாலும் இயற்கை விவசாயத் தோட்டத்தை நம்பி வாழும் பெண்களை, குடும்பங்களை அதிகம் காண முடிந்தாலும் , கிராமிய ஒற்றுமையில் வல்லவர்கள் என்பதை ஒவ்வொருவரும் உறுதிப்படுத்திக் கொண்டனர்.

# தேயிலை தினம்

## டிசெம்பர் 15ஆம் திகதி

## ஹட்டன் மாநகரில் அறிமுகம்




மஸ்கெலியா நிருபர் சு.தி.பெருமாள்

(கடந்த வாரத் தொடர்ச்சி)

**மலையக மக்களின் கலை, பண்பாடு**

மலையக மக்களுக்கான சிறப்பான பண்பாடு இருந்தது. ஆனால் காலப்போக்கில் அவைகள் அழிவடைகின்றன. இன்று மலையகக் கலைகள், மலையக கலைஞர்களால் முன் கொண்டு செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அதற்கான காரணங்கள்

- கலைகளை அறிந்த சந்ததி மரித்தல்
- கலைகளால் வாழ்வுக்கு போதுமான வருவாய் கிடைக்காமை
- மலையக கலைகளைத் தாழ்வாக கருதுதல் போன்றவற்றைக் குறிப்பிட லாம்.

தேயிலை தினத்தில் மலையக மக்களின் கலைகளான காமன் கூத்து, பொன்னர் சங்கர், அர்ஜீனன் தபசு, கரகாட்டம், கும்மி, காவடி, கோலாட்டம், ஒய்லாட் டம், சிலம்பாட்டம், தப்பு, உடுக்கு போன்ற கலைகளை பாதுகாக்க வேண்டியதின் அவசியத்தை எடுத்துக் கூற உள்ளோம்.

இதே போல மலையக மக்களின் சமயவழிபாடு இயற்கையோடு இணைந்த வழிபாடாகவும், இயற்கை செய்கின்ற உதவிக்கு நன்றி செலுத்துவதாகவும் அமைந்திருந்தது. இதில் சாதி வேற்றுமைகள் இருக்கவில்லை, உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற வேறுபாடுகள் இருக்கவில்லை, அனைவருக்கும் பொதுவான ஒரு இடம், அல்லது பெரிய மரத்தடியில் ஒன்றாக இணைந்து தோட்டத்தில் தொழில் புரிபவர், ஒருவரே பூசாரியாக (வழிபாட்டை நடத்துபவராக) செயல்பட்டார் இன்று அந்த நிலை மாற்றப்பட்டு ஆகம முறைப்படி ஆலயங்கள் அமைக்கப்பட்டு அந்தணர்கள் (பிராமண குருக்கள் சைவகுருக்கள்) சம்பளத்திற்கு வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். இதனால் பாரம்பரிய வழிபாட்டு முறைகள் மலையகத்தில் இருந்து அழிக்கப்படுகின்றது. இன்றைய மலையக இளைஞர் யுவதிகள் இயற்கை வழிபாட்டை அறியாதிருக்கின்றார்கள்.

**சமய மாற்றங்கள்**

மலையகத்தில் அதிக அளவான சமய மாற்றங்கள் நடைபெறுகின்றன. அனேகர் கிறிஸ்தவர்களாக, இஸ்லாமியர்களாக, பௌத்தர்களாக மாறுகின்றனர். இதற்கு அடிப்படையான காரணம் சமூகத்திலேயே அவர்கள் மத்தியதர வர்க்கத்திற்கு வருவதற்கு அல்லது சமூகத்தில் அவர்களின் அந்தஸ்தை உயர்த்திக் கொள்வதற்கான ஒரு வழியாக இந்த சமய மாற்றத்தை பார்க்க வேண்டும்.

மலையகத்தில் 'பாஸ்டர்' என்ற சொற்பதத்தை அனைவரும் அறிந்துள்ளனர். அதாவது கிறிஸ்தவ போதகர் இவர் மலையக சமூகத்திலே இருந்த ஒருவரா வார். இவர் அவரின் வீட்டிலோ அல்லது அருகில் உள்ள தோட்டக்காணி அல்லது தோட்ட நிர்வாகத்திடம் பெற்றுக் கொண்ட காணியில் ஆலயத்தை அமைத்து வழிபட ஆரம்பிப்பார். தோட்டத்தில் வேலை செய்த இந்த தொழிலாளி அவரின் பெயருக்கு முன்பாக பாஸ்டர் என்ற பெயரை பயன்படுத்தி மேலைநாட்டு உடையோடு (டை, கோட், சப்பாத்து) அந்த தோட்டத் தில் மோட்டார் சைக்கிளில் வரும் போது கவரப்படு கின்றவர்கள் தங்களை கிறிஸ்தவர்களாக மதம் மாற்றிக் கொள்கின்றனர். ஒரு தோட்டத்தை எடுத்து ஆராய்ந்தால் 10இற்கு மேற்பட்ட பாஸ்டர்மார் இருப்பார்கள். இதை சமய மாற்றம் என்று சொல் வதை விட வகுப்பு மாற்றம் என்று சொல்வது பொருத் தமாக இருக்கும் மலையகத்தில் உள்ள ஒவ்வொரு நகரத்திலும் 20 மேற்பட்ட சிறிய சிறிய கிறிஸ்தவ சபைகள் தலைமை வகிக்கின்ற பாஸ்ட்ர்மார் இருக் கின்றார்கள் என்று நகரங்களில் மேற்கொள்ளப்பட்ட தரவுகள் சேகரிப்பிலே கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பலர் இஸ்லாமியர்களையும் மாற்றப்பட்டுள்ளனர். பல தோட்டங்களில் பள்ளிவாசல்கள் அமைக்கப்பட் டுள்ளன. இவர்களும் மதம் மாறுவதற்கான மூல காரணம் சமூகத்தில் மத்திய வகுப்புக்கு அல்லது



உயர்நிலைக்கு வருவதற்காகும். இதேபோல பலர் பௌத்தர்களாக மாறியுள்ளனர். இதுவும் அவர்களை சமூகத்திலே உயர்ந்தவர்களாக காட்டி கொள்வதற்காகவே. எனவே மலையக மக்கள் மதம் மாறுவது சமூகத்தில் அவர்களின் சமூக நிலைமையை மாற்றிக் கொள்வதற்காகும்.

**சுகாதாரம்**

மலையக மக்களுக்கு கிடைக்கும் சுகாதார சேவைகள் என்ன? கண், காது, தோல் நோயாளர்கள் பலர் மலையகத்தில் வாழ்கின்றார்கள். இவர்களுக் கான வைத்திய சேவை கொடுக்கப்படுவதில்லை. கண் தெரியாத ஒருவர் வைத்தியசாலைக்கு சென்ற போது உனக்கு எதற்கு கண்பார்வை எதை வாசிக்க போகிறாய் என்ற கேள்வி கேட்கப்படுகின்றது.

பெண்ணியல் நோய்கள் அதிகம் உள்ள இடமாக மலையகம் இருக்கின்றது. பெண்களுக்கு இரண்டு பிள்ளைகளுக்கு பின்பு குடும்பக் கட்டுப்பாடு செய்யப்படுகின்றது. அதிகளவான குடும்ப கட்டுப்பாடு முறைகளை கடைப்பிடிப்பவர்களாக இருப்பவர்கள் மலையகப் பெண்கள். இதனால் மலையக மக்களின் இனப்பெருக்கம் வெகுவாக குறைந்துள்ளதை புள்ளிவிபரங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

சிறுபிள்ளை மரணவீதம் அதிகமாக உள்ள பிரதேசங்கள் மலையகப் பிரதேசங்களாகும். அதே போல ஆயுள் விகிதம் குறைந்த இடமும் மலையகமாகும். போசனை குறைபாட்டினால் பாதிக்கப்பட்ட பிள்ளைகள் அதிகம் உள்ள பிரதேசம் மலையகம் என்று உலகவங்கி கூறுகின்றது. எமது நாட்டின் சமூக ஆர்வலர்கள் மற்றைய பிரதேசங்களுக்கு காட்டுகின்ற கரிசனையை மலையகத்திற்கு காட்டுவதில்லை. இவற்றை உணர்த்துவதும் தேயிலை தினத்தின் நோக்கமாகும்.

**கல்வி**

இலங்கையின் பாடசாலை கல்வியை மறுசீரமைக்க வேண்டிய காலகட்டத்தில் உள்ளோம். மலையக மக்கள் இலவசக்கல்வி ஆரம்பிக்கப்பட்டு 40 வருடங்களுக்கு பின்பே உள்வாங்கப்பட்டனர். இன்றுவரை இலங்கையின் மலையக மாவட்டங்களில் தமிழ் தேசிய பாடசாலைகள் ஆரம்பிக்கப்படவில்லை. மலையக மாணவர்கள் கணித விஞ்ஞான பாடங்களைக் கற்பதற்கான 1AB பாடசாலைகள் இல்லை. அவ்வாறான பாடசாலைகள் இருக்கின்றது என்று வாதிட்டாலும் அவ்வாறான பாடசாலைகளிலே வளவாளர்கள் பற்றக்குறை நிலவுகின்றது.

மலையகத்தில் முன்பள்ளிகள் புற்றீசல் போல் பல முளைத்திருந்தாலும் அவற்றுக்குத் தரநிர்ணயச் சான்றிதழ்கள் இல்லை. அநேகமான முன்பள்ளிகளில் கற்றுக் கொடுப்பவர்கள் சாதாரன தரம் சித்தி பெறாதவர்கள்.

சாதாரணதரம், உயர்தரம் சித்தி பெறாத பிள்ளைகளுக்கான தொழிற்கல்வி வழங்கப்படுவ தில்லை. எனவே இந்த பிள்ளைகள் பத்துவருட பாடசாலை கல்விக்கு பின்பு நகரப்புறங்களில் பணியாற்றுவதற்காக செல்கின்றார்கள். இவ்வாறு செல்கின்றவர்கள் பலவிதமான சமூக சீரழிவுகளுக்கு ஆளாகின்றனர்.

**வேலைவாய்ப்பு**

மலையகத்தில் கொழுந்து பறித்தல் தேயிலை பயிர் நடப்பட்டுள்ள மலைகளில் வேலை, தேயிலை தொழிற்சாலைகளில் வேலை, இதைவிட வேறு எந்தவிதமான வேலையும் மலையகத்தில் இல்லை. இதனால் மலையக இளைஞர்கள் வேலையற்றவர்களாக உள்ளர். தோட்டத்தில் வேலை செய்ய விரும்புகின்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கப்படுவதில்லை. அத்தோடு மலையகத்தில் வேலை செய்பவர்களுக்கு வாழ்வதற்கான சம்பளம் வழங்கப்பட வேண்டும்.

ஓரளவு படித்து உயர்தரம் பல்கலைக்கழகம் சென்றவர்களுக்கு பாடசாலைகளில் ஆசிரியர் தொழில் வழங்கப்படுகின்றது. ஏனைய துறைகளில் வேலைவாய்ப்புகள் வழங்குவது மிகமிக குறைவு. முலையக மக்களுக்கான வேலைவாய்ப்புக்களை மலையகத்திலே உருவாக்க வேண்டும். அப்போது மலையகப் பொருளாதாரம் வளர்ச்சி அடையும் வாழ்வியலில் மாற்றங்களை ரெண்டுவர முடியும்.

**அடிப்படை தேர்ச்சி**

அடிப்படை வசதிகளான வீடு, வீதி, மலசலகூடம், தண்ணீர், மின்சாரம், போக்குவரத்து, சுகாதார சேவை போன்றவற்றில் பல குறைபாடுகள் உள்ளதை நாம் அறிவோம். இவ்வாறான அடிப்படை வசதிகளை தோட்ட நிர்வாகம் செய்து கொடுக்க வேண்டும் என்று அர சாங்கம் கூறும். அரசாங்கம் செய்து கொடுக்க வேண் டும் என்று தோட்ட நிர்வாகம் கூறும். தோட்டங்கள் பிரதேசெயலகங்களோடு இணைக்கப்பட்டு கிராம உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்ற போதும் மலையக மக்களுக்கான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படுவதில்லை. தீப்பற்றல், சூறாவளி, மண்சரிவு, வரட்சி, வெள்ளப்பெருக்கு போன்ற இடர் ஏற்படுகின்ற போது எவ்விதமான இழப்பீடுகளும் மலையக மக்களுக்கு வழங்கப்படுவதில்லை. தேயிலை தினத்தில் அனைத்து இனமக்களும் இருக்கும் அடிப்படை உரிமைகளை பற்றியும் அதை அவர்கள் பெற்று கொள்ள வேண்டிய வழிமுறைகளைப் பற்றிய கருத்தாடல்கள் விளக்கங்களை கொடுக்க உள்ளோம். (முற்றும்)



# அங்கதன் பதில்கள்

■ **தென்னிந்திய கீழடி ஆய்வு பற்றி என்ன சொல்லுகிறீர்கள்?**

**பொ.தயாளன், மாதகல்**

● ஆழத்தில் தமிழ் வேரோடிக் கிடக்கிறது. அதற்கு அடுத்து வந்த மொழிகள் அதன் பெருமை தெரியாது ஆளத் துடிக்கின்றன.

■ **கட்சிக் கூட்டின் 13 சரிவராது என்கிறார் சுமந்திரன். அது சரியா?**

**ம.சுந்தரேஸ்வரன், கந்தர்மடம்.**

● இந்திய இலங்கைக் கூட்டின் 13வது திருத்தச் சட்டமே காலாவதியாகும் நிலையில் இந்த ஐந்து கட்சிக் கூட்டின் 13இற்கு என்ன நடக்கப்போகிறதென்று 'சூ மந்திர' வாதிக்குத் தெரிவதில் ஆச்சரியமில்லையே!

■ **கஜேந்திர குமார் கூட்டுக் கட்சிகளின் ஆவணத்தில் கையெழுத்திடாதது சரியா**

**ப. தம்பிராசு. மட்டக்களப்பு**

● கூட்டுக் கட்சிகளுடன் இணைந்து கையொப்பமிட்ட கூட்டமைப்பே தட்டுத்தடுமாறித் தள்ளாடுகிறதே! தமிழ் தேசியத்தைச் சந்தி சிரிக்கவைக்க முயலும் 5 கட்சிக் கூட்டணியில் கஜேந் திரகுமார் கையொப்பமிட்டால் என்ன? கையொப்பமிடாவிட்டால் என்ன?

■ **யாழ்ப்பாணத்தில் நடைபெறும் மர்மக் கொலைகள் தொடர்பில் உங்கள் கருத்து என்னவாக இருக்கும்?**

**ம.ஸ்ரீவாணி, வல்வெட்டித்துறை**

● கொலைக் கலையில் நம்மவர்கள் நிபுணர்களாக வருகிறார்கள். இதனைக் காலகாலமாக வளர்க்கும் சூழல் ஒன் றையும் உருவாக்கி வரும் அந்த மர்மக் கும்பலை இனம் கண்டு அழிக்காதவரை இங்கு கொலையுதிர் காலம்தான்...

■ **பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை....! தெளிதேனுக்கு எங்கு போகலாம்..?**

**மு.சர்மா, மூன்றுமுறிப்பு**

● நல்ல பாலுக்கே நாயாய்-அலைய வேண்டி இருக்கிற சமயத்தில் தெளி தேனைப்போய் எங்கே தேடுவதாம். தேனீக்களிடம்தான் போய் கேட்கவேண்டும்.

■ **கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை சீன உளவாளி என்கிறார் சுரேஸ் பிரேமச்சந்திரன். நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?**

**வை. பாஸ்கரன், மந்துவில்**

● இந்த இழவு பிடித்த உளவு வேலையில் பல தசாப்தகால அனுபவம் உள்ளவர் சொல்லும்போது எவரும் யோசிக்கத் தான் செய்வர்கள். ஆனால் சீனாவுக்கு உளவாளியா..? ஜீ..ஜீ... சீச்...சீ

■ **உங்கள் வாக்குப் பச்சைக்கா? சிவப்புக்கா? நீலத்துக்கா?**

**பூ.ஸ்ரீதரன், நயினாதீவு**

● இப்படிப் பச்சையாய்க் கேட்கலாமா? இதற்குப் பதில் சொல்ல எனக்கு இன்னும் வாக்கு மாறிப் போகவில்லைத் தம்பி..!

■ **ஒரு பக்கம் மழை. மறுபக்கம் வெள்ளம். வெள்ளாண்மை உருப்படுமா?**

**கு.சக்திதாசன், மறவன்புலவு**

● உருப்படும்... மழை வெள்ளத்தைத் தேக்கி வைத்துக் கட்டுப்படுத்திப் பாவிக்கும் மதி இருந்தால்...!

■ **என்ன நடந்தாலும் சினிமா அரங்குகள் நிறைந்து கொள்கின் றன. மக்கள் மெய் மறந்தவர்களா?**

**து.தாமரை, வேலணை**

● திரை அரங்குக்கு வெளியே பொய் நிறைந்து வழிவதால் அரங்குக்குள் அமர்ந்து மெய் மறக்கிறார்கள் போலும்...

■ **வரும்படி இல்லா வாழ்க்கையைச் சுமப்பவன் எப்படிப்பட்டவனாக இருக்கலாம்?**

**வி.வளர்மதி, வெள்ளவத்தை**

● மற்றவர்களிடம் வெகுமானத்தை எதிர்பார்த்துத் தன்மானம் இழப்பவனாக இருப்பான். அவனது வாழ்வு பெறுமானம் அற்றதாகிவிடும்.

■ **மாயை வாழ்க்கையில் சிக்கித் தவிப்பதனால் வெளியே வர என்ன வழி இருக்கிறது?**

**கை.ஸ்ரீதரன், சாவகச்சேரி**

● வாழ்க்கை முடிவில் வழி தெரியக் கூடும். மாயைக்குள் நுழைந்து விழப் பல வழிகள் உண்டு. வெளியே வர ஒரே ஒரு வழிதான் உண்டு. ஆசை அறுமின்.... ஆசை அறுமின்...

■ **தன்னைத்தானே பெருமைபடப் பேசுபவனால் சமூகத்துக்கு ஆபத்து ஏதும் உண்டா?**

**சி.நாகராஸன், கிளிநொச்சி**

● சமூகத்தால் பெருமைப்படுத்தப்படத் தகுதி இல்லாதவனே தற்பெருமை பேசு பவனாக இருப்பான். சமூகம் அவனை அபத்தம் நிறைந்தவனாக ஒதுக்குமே தவிர ஆபத்து மிக்கவனாக நினைக்காது.

■ **எழுக தமிழ் எழுந்ததைத்தான் கண்டோம். இப்போது அதன் நிலை என்ன?**

**எல்.குணசேகரம், நாவற்குழி**

● எப்போதும் தமிழ் விழித்துத்தான் இருக்கும். தமிழன் தான் தூங்கி விழுந்து கொண்டிருப்பான். பொங்கு தமிழ் தமிழனைச் சிலிர்த்தெழ வைத்தது. அவ்வாறு எழுக தமிழ் முழுமையாய் விழித்தெழ வைக்கவில்லை.

■ **துரோகத்தின் உச்சம் என்னவாக இருக்கலாம்?**

**ஏ.மூர்த்தி, முழங்காவில்**

● இனமானத்தை விற்று வருமானம் பெற நினைப்பது

■ **படித்துவிட்டு இருக்கிறேன். அரசாங்க உத்தியோகங்களுக்கு விண்ணப்பம் போட்டுக் காத்திருக்கி றேன். என்ன செய்யலாம்?**

**தி. ரமணன், மட்டுவில்**

● அப்படியா? இனி யாராவது ஓர் அரசியல்வாதியின் கால் பிடித்து, அவரின் வால் பிடித்து வேலை வாய்ப்புக்காக யோசிக்கலாம். படித்துவிட்டு அரசாங்க உத்தியோ கத்திற்காகக் காத்திருப்பவனைவிடப் பாவி வேறொருவருமில்லை

■ **பஞ்சபாண்டவர் மறுபடி பிறந்தால் என்ன நடக்கும்? பாரதப்போர்...!**

**த.வருணன், பண்டத்தரிப்பு**

● பஞ்சபாண்டவர்களிடம் பாஞ்சாலி விவாகரத்துப் பெற்றிருப்பாள். துகிலு ரிந்த துச்சாதனனும் துணை நின்ற துரியோதனனுக்கும் எதிராகப் பாஞ்சாலி மான நஷ்ட வழக்குப் போட்டிருப்பாள். பணயம் வைத்துச் சூதாடிய குற்றத்திற் காகப் பாண்டவரும் சகுனியும், சிறை யில் இருக்க வேண்டி வந்திருக்கும். கண்ணன் பகவத்கீதைக்குப் பதிலாக ஏதாவது தொடர் கதை எழுத நேரிட்டிருக்கும். பாரதப்போரே நிகழ்ந்திருக்காது.



**அங்கதனிடம் பதில்பெற வேண்டுவோர் உங்கள் கேள்விகளை சரியான பெயர் முகவரியுடன் தெளிவாக எழுதி newsdeepam19@gmail.com என்ற முகவரிக்கோ அல்லது இல.151,நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.**

**தரமான கேள்விகளை அனுப்புவோருக்கு 500 ரூபா பணப் பரிசில் வழங்கப்படும்.**

பெயர் :...............................................

முகவரி :.............................................

:.............................................

தொலைபேசி இல. ................................

# அவர்கள் சொன்னதும் ஐயா சொல்வதும்

● கடைசியில ரணில் ஐயா தன் உள்ளக் கிடக்கையை தெளிவாக சுருக்கமாக இறுக்கமாக கூறிவிட்டார். அதாவது அவர் இலங்கையை வலுவான பொருளாதாரம் கொண்ட தேரவாத பௌத்த நாடாக மாற்றப் போவதாக அறிவித்துள்ளார். இது ஒரு பேரினவாத பௌத்தமத அடிப்படை வாதியின் ஜனநாயகப் பண்பற்ற குரலாகவே ஒலித்துள்ளது.

நாங்கள் பௌத்த மத வளர்ச்சிக்காக அதிகளவான வேலைகளை செய்துள்ளதாகவும் சுரக்ஷா என்ற காப்புறதி திட்டத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் அது பௌத்த பிக்குகளை பாதுகாக்க மேற் கொள்ளப்படுவதாகவும் அவர் கூறியதுடன் புதிதாக விகாரைகளை நிர்மாணிக்க போவதுடன் பிக்குமாருக்கான வதிவடங்களை உருவாக்கப் போவதாகவும் பிரகடனம் செய்துள்ளார்.

புத்தம் சரணம் கச்சாமி

சங்கம் சரணம் கச்சாம்

என்று தொடங்கச் சொல்லும் ரணிலின் கொள்கைகள் ஏனைய சிறுபான்மை இனத்தவரை மதத்தவரை உதாசீனம் செய்வது அவருக்கு வக்காலத்து வாங்க துடிக்கும் சிறுபான்மை இனத் தலைமைகளுக்கு புரியாமல் இருப்பது தான் கைக்கூலித்தனத்தின் கையாலாக தனத்தின் உச்சம் ரணிலே சரணம் கச்சாமி என்று கோரஸ் பாடும் ஏமாளித்தனத்தை என்வென்று சொல்வதாம்.

● கேளிக்கைகளை அதாவது ஐந்து கட்சி கூட்டமைப்பு முன்வைத்த 13 அம்சக் கோரிக்கைகளை நிராகரித்துள்ள கோத்தபாய ராஜபக்ஸவுடன் பேசத் தயாரில்லை என்று மாவையார் திட்டவட்டமாக கூறியுள்ளாராம் எதிர்பார்த்த செய்திதான்.

தமிழரசுக் கட்சி தலைவருக்கு கோத்தபாய சொன்னது மட்டும் கேட்டிருக்கு சஜித்தும் ரணிலும் அதே கருத்தை சொன்னது மட்டும் கேட்கேல்லை போலும். இல்லையென்றால் ரணிலுடனும் சஜித்துடனும் கூட பேசத் தயாரில்லை என்றல்லவா அறிவித்திருக்க வேண்டும் .

ரணில் அரசுக்கு நிபந்தனையற்ற ஆதரவு முண்டு கொடுத்து காப்பாற்றி விட்டு அவருடன் பேச மாட்டேன் என்று சொல்வது வெட்கக் கேடான விடயம் என்று மௌனம் காக்கிறாரோ? எப்படியென்றாலும் கூட்டமைப்பினருக்கு ரணில் மீது ஒரு வித அனுதாபம் இருக்கத்தான் செய்கிறது

● இலங்கையின் புதிய அரசுக்கு அழுத்தங்களை கொடுப்போம் என்று அமெரிக்க ராஜாங்க செயலாளர் அலைஸ் வெல்ஸ் சொன்னதாக செய்தி

ஐயா நீங்களும் உங்கடை அரசும் தமிழ் மக்களை பேரவலத்துக்குள்ளாக்கிய யுத்தத்திற்கு இலங்கை அரசுக்கு உதவக் காட்டிய வேகம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை பெற்றுத்தர மேற்கொள்வதாக கூறும் முயற்சியில் காட்டவில்லையே

ஒரு தசாப்த காலத்திற்கும் மேலாக ஐ.நா உட்பட நீங்களும் சேர்ந்து இலங்கை மீது காட்டுவதாக கூறும் அழுத்தம் எதுவும் இலங்கையை எதுவும் செய்யவில்லையே

வெறுமனேஅறிக்கை விட்டு பாதிக்கப்பட்ட மக்களை நம்ப வைத்து காலம் கடத்தி ஏமாற்றி பெருமூச்சு விட வைக்கும் ஜனநாயகப் பண்பு உங்களுக்கு இருப்பது தெரியும்.

இது உலகில் பாதிக்கப்பட்ட மக்கள் பெற்றுள்ள அனுபவ ஞானம் வெறுமனே அிறிக்கை அழுத்தங்கள் இலங்கையை எதுவும் செய்யாது. பாருங்கோ....!



## விளையாட்டு உலகில்

எஸ்.விமலன்


# மைல்கல்



சுவிற்சர்லாந்தின் றோஜர் பெடரர் தற்போது நடைபெற்று வரும் சுவிஸ் இண்டோர் ரென்னிஸ் தொடரின் முதற்சுற்றுப் போட்டியில் ஜேர்மனியின் பீற்றர் கோஜோவ்ஸ்கியுடன் விளையாடியதன் மூலம் தனது 1500 ஆவது போட்டியில் விளையாடிய வீரர் என்ற சாதனையைப் படைத்துள்ளார்.

இதற்கு முன்னதாக அமெரிக்காவின் முன்னாள் வீரரான ஜிம்மி கோனரே அதிக பட்சமாக 1556 போட்டிகளில் விளையாடிய உலக சாதனைக்குரித்துடையவராக விளங்குகின்றார். 38 வயதான பெடரர் இந்த சுவிஸ் இண்டோர் ரென்னிஸ் தொடரில் கடந்த வருடம் வரை பங்கு பற்றி 9 தடவைகள் சம்பியன் பட்டம் வென்றமை குறிப்பிடத்தக்கது.

பெடரர் இதுவரை ஜேர்மனியில் நடைபெற்று வரும் ஹலே ரென்னிஸ் தொடரிலேயே 10 தடவைகள் சம்பியன் பட்டம் வென்றுள்ளார். அந்தவகையில் சுவிஸ் இண்டோர் தொடரிலும் பெடரர் சம்பியன் பட்டம் வென்றால் 10 சம்பியன் பட்டங்கள் வென்ற இரண்டாவது போட்டித் தொடராக இது அமையும் எனலாம்.




# கோரிக்கை

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரான டோனி ஜார்க்கண்ட் மாநிலத்தில் பிறந்தவர். இருபதுக்கிருபது உலகக் கிண்ணம், 50 ஓவர்கள் உலகக் கிண்ணம் மற்றும் ஐ.சி.சி சம்பியன்ஸ் கிண்ணம் மூன்றையும் அவரது தலைமையில் இந்திய அணி கைப்பற்றி இருந்ததனால் அவரைக் கௌரவிக்கும் முகமாக ஜார்க்கண்ட் மாநில கிரிக்கெட் சங்கம் அம்மாநில கிரிக்கெட் மைதானத்தின் பவிலியனின் ஒரு பகுதிக்கு சில வருடங்களுக்கு முன்னரே டோனியின் பெயரைச் சூட்டி இருந்தது.

2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இந்த மைதானத்தில் முதல் தடவையாக இந்திய - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான டெஸ்ட் போட்டியும் நடைபெற்றிருந்தது.

இந்நிலையில் தான் ராஞ்சியில் நடைபெற்று முடிந்த இந்திய - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டியின் போது தொலைக்காட்சி வர்ணனையில் ஈடுபட்டிருந்த சுனில் கவாஸ்கர் கிரிக்கெட் உலகிற்கு ஜார்க்கண்ட் என்றதொரு மாநிலம் இருப்பதையே பிரபல்யப்படுத்தியவர் டோனி என்பதால் அவரது சாதனைகளைக் கருத்திற்கொண்டு இந்த மைதானத்திற்கே டோனியின் பெயரைச் சூட்ட வேண்டும் என்றதொரு கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

# முற்றுப்புள்ளி




தற்போது நடைபெற்று வரும் இங்கிலாந்து பிரீமியர் லீக் உதைபந்தாட்டத் தொடரில் லிவர்ப்பூல் அணி மீது ரசிகர்களுக்கு அதிக எதிர்பார்ப்பு இருந்தது. காரணம் சென்ற பருவகாலத்தில் தொடர்ச்சியாக 9 போட்டிகளில் வெற்றி பெற்ற லிவர்ப்பூல் அணி தற்போதைய பருவகாலத்தில் தொடர்ச்சியாக 8 போட்டிகளில் வெற்றி பெற்றதனால் மொத்தம் 17 போட்டிகளில் அதன் வெற்றி நடை தொடர்ந்த வண்ணம் இருந்தது.

ஆனாலும் கடந்தவாரம் நடைபெற்ற மன்செஸ்ரர் யுனைற்றட் உடனான போட்டி 1 : 1 என்று சமநிலையில் முடிந்ததனால் இந்த வெற்றிப்பயணம் முடிவுக்கு வந்துள்ளது.

இந்தப் போட்டியின் முதற்பாதியில் தங்களுக்கு வழங்க வேண்டிய பிறீ கிக் ஒன்றை நடுவர் நிராகரித்த காரணத்தினாலேயே இப்போட்டி சமநிலையில் முடிந்ததாகக் கூறிய லிவர்ப்பூல் அணியின் பயிற்சியாளர் நடுவரின் தீர்ப்பை மறுபரிசீலனை செய்யும் (video assistant referee)முறையையும் கடுமையாக விமர்சித்துள்ளார்.

ஆனாலும் புள்ளிப்பட்டியலில் லிவர்ப்பூல் தொடர்ந்தும் முதலிடம் வகித்து வருவது குறிப்பிடத்தக்கது

# பிரதமர்கள் வருகை



அடுத்த மாதம் பங்களாதேஷ் அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு 3 இருபதுக்கிருபது போட்டிகளிலும் 2 டெஸ்ட் போட்டிகளிலும் விளையாடவுள்ளது. இதில் கொல்கத்தாவில் நடைபெறவுள்ள டெஸ்ட் போட்டியைப் பார்வையிட வருமாறு இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் பங்களாதேஸ் பிரதமர் ஷேக் கசீனாவுக்கும் அழைப்பு விடுக்கவுள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவராகத் தற்போது கொல்கத்தாவின் இளவரசனான சௌரவ் கங்குலி தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் அவரது விருப்பமும் இதில் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

மறைந்த முன்னாள் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவரான ஜக்மோகன் டால்மியாவின் நினைவு தினம் அடுத்த மாதம் வருவதனால் கொல்கத்தாவில் போட்டி நடைபெறும் தினம் ஒன்றில் அவரது நினைவுப் பேருரையை அங்கு நிகழ்த்துவதற்கும் கங்குலி முயற்சித்து வருவதாகக் கருதப்படுகின்றது.

# நியமனங்கள்

அடுத்தாண்டு நடைபெறவுள்ள ஐ.பி.எல் போட்டிகளுக்கான முன்னேற்பாடுகளை தற்போதே ஒவ்வொரு அணியும் மேற்கொண்டு வருகின்றது. அந்தவகையில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி சில தினங்களுக்கு முன்னர் அனில் கும்ளேயை தலைமைப் பயிற்சியாளராக நியமித்த நிலையில் தற்போது ராஜஸ்தான் றோஜல்ஸ் அணி அவுஸ்ரேலியாவின் முன்னாள் சகலதுறை ஆட்டக்காரரான அன்ரூ மக்டொனால்ட்டை தலைமைப் பயிற்சியாளராக நியமித்துள்ளது.

அவுஸ்ரேலியாவில் நடைபெற்று வரும் பிக்பாஸ் இருபதுக்கிருபது தொடரில் மெல்பேர்ண் ரெனேகட்ஸ் அணிக்கு தற்போது பயிற்சியாளராக விளங்கும் இவர் கடந்த காலங்களில் ஐ.பி.எல் போட்டிகளில் டெல்லி டேர்டெவில்ஸ் மற்றும் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணிகளில் ஒரு வீரராக விளையாடியும் உள்ளார்.

அதேவேளை ஐ.பி.எல் வரலாற்றில் முதற்தடவையாக பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி நவ்நீதா கௌதம் என்ற பெண் ஒருவரை தனது அணியின் ஸ்போர்ட்ஸ் மசாஜ் தெரபிஸ்ராக நியமித்துள்ளது. அதுபோல முதற்தடவையாக ஐ.பி.எல் வீரர்கள் ஏலம் கொல்கத்தாவில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது






நீங்கள் எங்கும் கண்டிராத, எண்ணிப்பார்க்க முடியாத புதிய வடிவங்களிலான FLOOR TILES, WALL TILES மற்றும் குளியலறை சாதனங்கள் போன்றவற்றை நியாயமான விலையில் உங்கள் எண்ணம் போல் நேர்த்தியாகவும், தரமானதாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

# நியூ சன் செரமிக்ஸ்

பழைய வைத்தியசாலை முன்பாக,
ஏ9 வீதி, கிளிநொச்சி.
தொ.இல : 021 228 3872

Mail : newsunceramics191@gmail.com Web : www.newsunceramics.gwisolutions.com

# அண்ணா விரைவுப் பொதிகள் சேவை

AnnA EXPRESS Courier Services

இங்கிருந்து அனுப்பப்படும் பொதிகள் மற்றும் கடிதங்கள் உங்கள் உறவுகளிடம்

## 3-5 நாட்களுக்குள்..



| | 11 கிலோவுக்கு மேல்.. | |
|---|---|---|
| | சாதாரணம் | விரைவு |
| லண்டன் | 550/= | 600/= |
| ஜேர்மனி | 650/= | 850/= |
| பிரான்ஸ் | 750/= | 900/= |
| இத்தாலி | 750/= | 1100/= |
| சுவிஸ் | 850/= | 1200/= |
| நெதர்லாந்து | 750/= | 1200/= |
| கனடா | | 1300/= |
| அமெரிக்கா | | 1350/= |
| அவுஸ்ரேலியா | 950/= | 1200/= |
| பெல்ஜியம் | 850/= | 1350/= |
| டென்மார்க் | 750/= | 1350/= |

பார்சல் சேவிஸ் மூலம் பொருட்களை அனுப்புவர்கள் மற்றும் வெஸ்டேர்ன் யூனியன் மூலம் பணம் அனுப்புபவர்களில் 10 பேருக்கு குலுக்கல் முறையில் பரிசல்கள் வழங்கப்படும். (இந்த சலுகை ஒக்.01 – நவ.26 வரை)

யாழ்ப்பாணம், அரியாலை, வேலணை, ஊர்காவற்துறை, சங்கானை, சுன்னாகம், கரணவாய், மீசாலை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, கனகராயன்குளம், மன்னார், வவுனியா, திருகோணமலை

976, காங்கேசன்துறை வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.
021 221 5656 | 070 330 5500 | 075 330 5500

DHL FedEx aramex SKYNET WESTERN UNION WU

தீபம் பத்திரிகை மற்றும் தொலைக்காட்சிக்கு அனைத்து மாவட்டங்களிலிருந்தும் விளம்பர முகவர்கள் தேவைப்படுகின்றார்கள். உடன் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் 077 198 9445

இந்தப் பத்திரிகை இல. 151, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் உள்ள நோர்சி மீடியா (பிரைவேற்) லிமிடெட் நிறுவனத்தால் 27.10.2019 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.